Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 024 | ஞாயிற்றுக்கிழமை | மார்கழி 5ஆம் நாள் 20 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## நல்லூரில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், டிசெ. 20

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கொக்குவில் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதிப்படுத் 15

### மருதனார்மடம் கொத்தணி

# கொரோனா தொற்றாளரில் வைரஸின் அளவு அதிகம்

**வேகமாகப் பரவுவதற்கு இதுவும் காரணம் என்கிறார் மூத்த விரிவுரையாளர் முருகானந்தன்**

யாழ்ப்பாணம், டிசெம்பர் 20

மருதனார்மடம் கொத்தணியில் பரிசோதிக்கப்பட்ட தொற்றாளர்களின் மாதிரிகள் பலவற்றில் காணப்படும் கொரோனா வைரஸின் அளவு கூடுதலாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. 15

## தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் நேரில் பேசி ஜெனிவா விவகாரத்தைக் கையாளுவோம்

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உதயனுக்குத் தெரிவிப்பு 15

### ஜெனிவாவில்

## ராஜபக்ச அரசுக்கு கால அவகாசம்

சுமந்திரனின் முயற்சியை அம்பலப்படுத்தினார் விக்கி

யாழ்ப்பாணம், டிசெ. 20

ராஜபக்ச அரசுக்கு மீண்டும் வசதிகள் வழங்கி கால அவகாசம் வழங்கும் வகையில் தமிழ்த் 13



குளத்துக்குள் வீழ்ந்தது வாகனம்

## சிறுவனொருவன் இறப்பு இருவரை காணவில்லை!

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு - வவுனிக்குளம் பகுதியால் பயணித்த வாகன 15

## யாழில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணத்தில் நேற்று எட்டுப் பேருக் 15

### தெல்லிப்பழையில்

## தனிமைப்படுத்தப்படாத ஒருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், டிசெ. 20

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதி 15

## யாழ்.நகரில் 67.9 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக யாழ்ப்பாண நகர் ஸ்ரான்லி வீதி நிலையத்தில் 67.9 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது என்று யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் 15

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறைக்குள் கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், டிசெ. 20

மகசின் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கும் 15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

தசாப்தகால வரலாற்றில்
தங்கக் கடனுக்கான மிகக் குறைந்த வட்டி
8%
இச்சலுகை உங்கள் அருகிலிருக்கும் சம்பத் வங்கிக் கிளையின் சம்பத் ரணதிரிய தங்கக் கடன் இடமிருந்து மட்டுமே.
சம்பத் ரணதிரிய தங்கக் கடன் சேவை
தற்போது தங்க பவுண் ஒன்றிற்கு ரூ. 68,000 /-
0112 30 30 50 www.sampath.lk

இந்த பண்டிகை காலத்தில் Dialog TV இடமிருந்து விசேட சலுகைகள்
புதிய Dialog Television இணைப்புகளுடன் சகல அலைவரிசைகளும் 30 நாட்களுக்கு
மேலதிக கட்டணங்கள் இன்றி இலவசம்
மீள்கொடுப்பனவு இணைப்பு ரூ.4,990/- ரூ.3,990/-
முற்கொடுப்பனவு இணைப்பு ரூ.6,990/-
டிசம்பர் 25 வரை மட்டுமே
Dialog Television
இலங்கையின் முதற்தர தொலைக்காட்சி அனுபவம்

BOC 81

BOC ரண் கெகுளு 2020

# ஐந்தாம் ஆண்டுச் செல்வங்களே உலகை வெல்லும் தங்கங்களே



**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2020 ஆம் ஆண்டு உயர்நிலையில் தேர்ச்சி பெற்ற ரண் கெகுளு கணக்குகளுடைய பிள்ளைகளுக்கு**

இலங்கை வங்கியால் இம்முறையும்

## மொத்தம் 30 மில்லியன் ரூபா பெறுமதி மிக்க 2000 புலமைப் பரிசில்கள்

### ரண் கெகுளு புலமைப்பரிசில் மற்றும் PFCA* Minor கணக்குகள் புலமைப் பரிசுகளுக்கு விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்

- 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது PFCA* Minor கணக்குகளையுடைய பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.
- 2020 நவம்பர் 14 ஆம் திகதிக்கு முன் ரண் கெகுளு கணக்குகளையுடைய பிள்ளைகளின் கணக்கில் குறைந்தபட்ச மீதி ரூ.5,000/- இற்கு குறையாதிருத்தல்.
  **(விண்ணப்பதாரிகளுக்கிடையே தெரிவு செய்யப்படும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற, 2000 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்)**
- PFCA* Minor கணக்குகளையுடைய பிள்ளைகளின் கணக்கு மீதியானது புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய 2020 நவம்பர் 14 ஆம் திகதிக்கு ஆகக் குறைந்தது USD 250 அல்லது அதற்குச் சமனான வகையில் வெளிநாட்டு நாணயத்தில் பேணியிருக்க வேண்டும்.
  **(விண்ணப்பதாரிகளுக்கிடையே தெரிவு செய்யப்படும், அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற 100 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள்)**

### விசேட பரிசுகளுக்கான தகைமைகள்

- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாவட்ட வெட்டுப்புள்ளிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரண் கெகுளு அல்லது PFCA* Minor கணக்குகளையுடைய பிள்ளைகளாக இருத்தல் வேண்டும்.
- ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய 2020 நவம்பர் 14 ஆம் திகதிக்கு முன் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு செயற்பாட்டில் இருந்திருக்க வேண்டும்.

- **விண்ணப்பப் படிவங்களை BOC இணையத்தளம் மற்றும் இலங்கை வங்கிக் கிளைகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடிவதோடு, மேற்படி தகைமையுடையவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தோடு பரீட்சைப் பெறுபேறு சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளிக்கலாம்.**
- **விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி 2021 ஜனவரி 15 ஆகும். அதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

*2017 நவம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் NRFC Minor / RFC Minor / RKFC போன்ற பெயர்களில் ஆரம்பிக்கப்பட்ட கணக்குகள்.

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


SINGER இடமிருந்து
மாபெரும் வாசி
விசேட கழிவு
வட்டி அற்ற
சிங்கர் உத்தரவாதம்
இலவச கொடுப்பனவு
55"
07 Kg
SINGER
Top Load Washing Machine
SWM-FA70R
ரு.52,999/-
மாதாந்தம் ரூ. 2,675/-
பண்டமாற்று கழிவு
ரூ. 10,000/- அல்லது
பணக்கழிவு
ரூ. 5,000/-
SINGER
4K UHD Television
SLE55D1800TC
ரு. 119,999/-
மாதாந்தம் ரூ. 6,562/-
பண்டமாற்று கழிவு
ரூ. 30,000/- அல்லது
பணக்கழிவு
ரூ. 20,000/-
SINGER
Refrigerator - 277L
SN-SMI-285
ரு. 87,999/-
மாதாந்தம் ரூ. 5,129/-
பண்டமாற்று கழிவு
ரூ. 6,500/- அல்லது
பணக்கழிவு
ரூ. 4,500/-
DELL
DELL-3501-I3W
10-MNT
Dell Inspiron 3501
10th Gen i3 Laptop
ரு. 104,999/-
மாதாந்தம் ரூ. 5,250/-
இலவசம்
சிறப்பு கழிவு
ரூ. 10,500/-
ASUS
AS-I5-X513-256-
11GEN-BLU
ASUS Laptop i5
11th Gen
ரு. 169,999/-
மாதாந்தம் ரூ. 10,417/-
பணக்கழிவு
ரூ. 17,000/-
SAMSUNG
SMG-SM-M015F-B
Galaxy M01 Smartphone
5.7 LCD, 2MP + 13MP Rear Cam
5MP Front Cam,
32GB, 3GB RAM
ரு. 25,299/-
சிறப்பு கழிவு
ரூ. 1,310/-
SINGER
Sewing Machine
MC984-1W
ரு. 46,999/-
மாதாந்தம் ரூ. 3,675/-
பணக்கழிவு
ரூ. 3,525/-
SINGER
Solo Microwave Oven
SMW720CGN
ரு. 11,699/-
மாதாந்தம் ரூ. 1,865/-
சிறப்பு கழிவு
ரூ. 1,755/-
SINGER
Inverter Air Conditioner
SASI12AUR
ரு. 119,999/-
மாதாந்தம் ரூ. 6,913/-
பணக்கழிவு
ரூ. 10,000/-
SINGER
Shower Heater
SWH-118EP
ரு. 26,999/-
மாதாந்தம் ரூ. 4,076/-
பணக்கழிவு
ரூ. 2,025/-
SINGER FURNITURE
Camilia Double Bed
WF-CAMELIA-BDQ
ரு. 34,999/-
மாதாந்தம் ரூ. 2,737/-
பணக்கழிவு
ரூ. 3,500/-
SINGER
Water Pump
WP-1-75N
ரு. 24,499/-
மாதாந்தம் ரூ. 1,807/-
பணக்கழிவு
ரூ. 3,675/-
SINGER FURNITURE
Dune Sofa
WF-DUNE-01
ரு. 77,799/-
மாதாந்தம் ரூ. 5,947/-
நிறங்கள்
பணக்கழிவு
ரூ. 15,560/-
SONY
Audio Hi Fi System
MHC-M60D
ரு. 74,999/-
மாதாந்தம் ரூ. 5,812/-
இலவச கொடுப்பனவு
பணக்கழிவு
ரூ. 10,000/-
SINGER FURNITURE
Orient Dining Room Set
WF-ORIENT-DRS
ரு. 104,999/-
மாதாந்தம் ரூ. 8,175/-
பணக்கழிவு
ரூ. 26,250/-
நிபந்தனைகளுக்குட்பட்டது
011 5 400 400
www.singer.lk
SINGER

# கொரோனா நிலைமையில் கொண்டாட்டம் வேண்டாம்

## யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

**கொழும்பு, டிசெ. 20**

**யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் கொரோனாத் தொற்று பரவாதவாறு நத்தாரைக் கொண்டாட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் சேனாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது தினமும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இனிவரும் காலங்களில் பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

எதிர்வரும் நாள்களில் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்கள் வருகின்றன. பொதுமக்கள் நாட்டில் உள்ள சுகாதார நடைமுறைகளையும், மதத் தலைவர்களின் வழிகாட்டல்களையும் பின்பற்றி தங்களின் கொண்டாட்டங்களை முன்னெடுக்க வேண்டும். நத்தார் புதுவருடக் கொண்டாட்டங்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களமும் சில நடைமுறைகளை அறிவித்துள்ளது. தேவாலயங்களில் மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் ஆலய பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பொதுமக்கள் பின்பற்றிச் செயற்பட வேண்டும்.

ஒன்றுகூடுவதைத் தவிர்த்து கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னெடுங்கள் என்றார். (ம-எ-111)

# கிளாலியில் வாள்வெட்டு ஒருவருக்கு படுகாயம்!

கொடிகாமம், டிசெ. 20

எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதியில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த வாள்வெட்டு நேற்று சனிக்கிழமை அதிகாலை நடந்துள்ளது. கிளாலியைச் சேர்ந்த த.கஜேந்திரன் (வயது 44) என்பவரே படுகாயமடைந்துள்ளார். வாள்வெட்டுத் தாக்குதலை நடந்தியவர்கள் தப்பியோடியுள்ளனர். படுகாயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மணல் பிரச்சினை ஒன்றின் காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று படுகாயமடைந்தவரின் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாகபளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மஎ-159)

# படுக்கையில் உயிரிழந்த வியாபாரி; பி.சி.ஆர் சோதனைக்கு ஏற்பாடுகள்

சாவகச்சேரி, டிசெ. 20

சாவகச்சேரி சந்தையில் பழ வியாபாரம் செய்யும் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

கச்சாய் வீதியைச் சேர்ந்த சேகர் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் இரவு வீட்டின் வெளிப்புறத்தில் படுத்திருந்தார் என்றும், மழையுடன் காற்று வீசியதை அடுத்து அவரை குடும்பத்தினர் எழுப்பச் சென்றபோது அவர் அசைவற்றுக் காணப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது. அதையடுத்து அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீர் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். சடலம் தற்போது சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-9)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 20

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த இளம் குடும்பத்தலைவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த தர்மலிங்கம் விசாகன் என்ற குறித்த நபர் அச்செழு நோக்கி கடந்த 11ஆம் திகதி சென்றுகொண்டிருந்த போது மகாசிவன் சந்தியில் விபத்துக்கு உள்ளானார். மகேந்திரா வாகனத்துடன் அவர் விபத்துக்கு உள்ளானார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-26)

# குடும்பத்தகராறால் பெண் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 20

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெண்ணொருவர் குடும்பத் தகராறு காரணமாக தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

யோ.நிமலராணி என்ற என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். அவருக்கு வயது 55. குறித்த பெண் கடந்த 11ஆம் திகதி குடும்பத்தகராறு காரணமாக உயிருக்கு ஆபத்தான வகையில் மருந்தை அருந்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட குறித்த பெண் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

# குடும்பத்தலைவர் விபத்தில் இறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

நாவற்குழி பாலத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 7 பிள்ளைகளின் தந்தையான 64 வயதுடைய சகாயதாஸ் என்பவர் உயிரிழந்தார். குறித்த நபர் 300 வீட்டுத்தோட்டம் நாவற்குழியைச் சேர்ந்தவர்.

மீன் வியாபாரியான இவர் நேற்றுக் காலை 5 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் பாசையூருக்கு மீன்கொள்வனவு செய்ய சென்றவேளை நாவற்குழி பாலத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளார். 6.15 மணியளவில் வீதியால் சென்ற நபர் விபத்துக்குள்ளானவரின் மகனுக்கு தகவல் வழங்கியுள்ளார் அவரது மகன் வந்தபின்னரே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படும் முன்னரே இறந்துவிட்டார் என்று மருந்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

# ரவிராஜ், கீதாஞ்சலி பேராசிரியர்களாகினர்



யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட இரண்டு மருத்துவ நிபுணர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை பேராசிரியர்களாக பதவியுயர்வு வழங்கியுள்ளது.

மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சு.ரவிராஜ் மற்றும் மருத்துவபீட குழந்தை நல மருத்துவத் துறையைச் சேர்ந்த திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ் ஆகியோரையே பேரவை பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தியுள்ளது.

சத்திர சிகிச்சை வல்லுநர் எஸ்.ரவிராஜ், குழந்தை மருத்துவ வல்லுநர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ் இருவரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பேராசிரியர் தெரிவுக்கான சகல தேவைப்பாடுகளையும் நிறைவு செய்துள்ள நிலையில் நடத்தப்பட்ட மூன்று நிலை நேர்முகத் தேர்வுகளிலும் சித்தியடைந்து பேராசிரியர்களாக பதவியுயர்வு பெறுகின்றனர் என பல்கலைக்கழக பேரவை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. (ம-த)

# ராஜித, குமாரவெல்கமவுக்கும் சஜித் அணியில் உறுப்புரிமை

கொழும்பு, டிசெ. 20

ராஜித சேனாரத்ன, குமார வெல்கம ஆகியோரும் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்புரிமையை பெறவுள்ளனர் என அறியமுடிகின்றது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பலமானதொரு அரசியல் கூட்டணியாக கட்டியெழுப்பபடவுள்ளது. சஜித் அணியுடன் கூட்டணி வைத்துள்ள உறுப்பினர்களுக்கும் அதில் முக்கிய பதவிகள் வழங்கப்படும் என தெரியவருகின்றது.

ஜாதிக ஹெல உறுமய வில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியில் இணையும் முடிவை சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட ஹெல உறுமயவின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் எடுத்துள்ளனர். இவர்கள் அடுத்தவாரமளவில் உறுப்புரிமையை பெறுவார்கள் என கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையிலேயே மஹிந்த அணியில் இருந்து வெளியேறிய குமார வெல்கம மற்றும் இடதுசாரி அரசியல்வாதியான ராஜித சேனாரத்ன ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெறவுள்ளனர். (ம-44)



யாழ்ப்பாணம், காங்கேசன்துறைக் கடற்கரையில் உலோகப் பொருள் ஒன்று நேற்றுக் கரையொதுங்கியுள்ளது. இந்தப் பொருள் எங்கிருந்து வந்தது என்பது தெரியவில்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இது சுனாமி மற்றும் நில அதிர்வை அறிவதற்காக கடலுக்குப் பொருத்தப்பட்ட கருவியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (எ-26)

# கிளி. மாவட்டச் செயலகத்துக்கு ஒருதொகுதி நிலவிரிப்புக்கள்!

கிளிநொச்சி, டிசெ. 20

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு லயன்ஸ் கழகத்தால் ஒருதொகுதி நிலவிரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்ட மக்களின் அவசர தேவைகளுக்குப் பயன்படும் வகையில் கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு இந்த நிலவிரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி நிலவிரிப்புக்களை கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் நேற்றுமுன்தினம் லயன்ஸ் கழகத்தினர் வழங்கியுள்ளனர். (ம-426)



கொரோனா வைரஸை
99.9% வரை அழிக்க உதவிடும்
ஒரேயொரு சலவை உற்பத்தி
Surf excel
இது கிருமிகளை அகற்றுவதோடு மட்டுமல்லாமல் கொரோனா வைரஸை 99.9% அழித்திட உதவிடும்
புதிய
KILLS 99.9% GERMS
REMOVES TOUGH STAINS
Surf excel
HYGIENIC CLEAN
BOOSTERS
1Kg
ரூ.315/-

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒற்றைக் கையில் ஓரினத்தின் தலையெழுத்தா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் 2021 பெப்ரவரி மாத இறுதியில் ஆரம்பமாகப் போகின்றது. இந்த நிலையில் இலங்கை தொடர்பான விவகாரம் அங்கு மீண்டும் முக்கிய பேசுபொருளாக இருக்கும் என்பது எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கூட்டத்தொடரை இலங்கை அரசும் தமிழர் தரப்பும் எவ்விதம் எதிர்கொள்ளப் போகின்றன என்ற எதிர்பார்ப்புகளும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

'ஏற்கனவே மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு எந்தவகையிலும் இணங்கப்போவதில்லை கட்டுப்படப் போவதில்லை நாட்டின் இறைமை தோடர்பான விடயங்களில் சர்வதேச சமூகம் எந்த வகையிலும் தலையீடு செய்ய அனுமதிக்க மாட்டோம்' என அரசு தரப்பு வெளிப்படையாகவும் தீர்க்கமாகவும் கூறியுள்ள நிலையில் இம்முறை மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளமை முக்கியத்துவம் மிக்கதாகின்றது.

கடந்த காலங்களில் இத்தகைய கூட்டத் தொடர்களின்போது தமிழர் தரப்பு அரசியல் தலைமைகளின் தெளிவற்ற நோக்கு, சிந்தனையற்ற அணுகுமுறைகள் போன்றன இலங்கை அரசு எதிர்கொள்ளக்கூடிய நெருக்கடியான சூழல்களிலிருந்து அதனைக் காப்பாற்ற வழிவகுத்தன. கால அவகாசம் என்ற ஒற்றைச் சொல்லின் மூலம் அரசைப் பாதுகாத்து தமிழ்பேசும் மக்களை ஏமாளிகளாக்கியமை மக்களுக்கு தெரியாத விடயமல்ல.

மீண்டும் இம்முறையும் அதேபோன்றதொரு உத்தியையே கையாண்டு அரசைப் பாதுகாக்க சில சர்வதேச தமிழ் அமைப்புக்களின் பதாகைகளின் கீழ் இயங்கும் சிலருடன் இணைந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதாகையின் கீழ் சுமந்திரன் மற்றொரு முயற்சியை மேற்கொண்டு வருகிறார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வந்தது. இப்போது அந்த விடயத்தை நிரூபிப்பது போன்று சுமந்திரனின் ஜெனீவாவுக்கான திட்டம் வெளிவந்துள்ளது.

இது கூட்டமைப்பின் திட்டமா? அல்லது சுமந்திரனின் திட்டமா? என்பதை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தான் உறுதி செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தை விக்கினேஸ்வரனும் கஜேந்திரகுமாரும் நிராகரித்துள்ளமைக்கான காரணிகள் நியாயமானவை - வலுவானவை. இது கூட்டமைப்பின் திட்டமோ, சுமந்திரனின் திட்டமோ எதுவானாலும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் தீர்மானமாகக் கொள்ளமுடியாது என்பதையே இந்த நிராகரிப்பு எடுத்துக் காட்டுகின்றது.

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் நிகழ்ந்துள்ள மாற்றங்களும், அது இந்த நாட்டின் சிறுபான்மை இனத்தவரின் அரசியல் மற்றும் வாழ்வியல் தொடர்பான விடயங்களில் மேற்கொண்டுவரும் அழுத்தங்களையும் சரிவரப் புரிந்து கொள்ளாமையால் தான் இத்தகைய திட்டத்தை சுமந்திரன் முன்வைத்துள்ளார் என்று எவரும் நம்புதல் சாத்தியமே இல்லை.

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரை மிகவும் நெருக்கடியான இன்றைய சூழலில் தமிழர் தரப்பு எவ்வாறு தீர்க்கமாக எதிர்கொள்ள வேண்டும் என்பதை தமிழ்த் தேசியத்தின் மீது அக்கறையும், அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உத்வேகமும் கொண்ட அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைத்து பேசி முடிவெடுக்க வேண்டும். இவ்வாறானதொரு காலகட்டத்தில் கூட்டமைப்போ அல்லது அதன் பேச்சாளரான சுமந்திரனோ தனித்து முடிவெடுக்க முயல்வது பொறுப்பற்றதும் சுய அரசியல் அனுகூலத்தை மட்டுமே இலக்காகக் கொண்டதுமாகும்.

தொடர்ந்து இவ்வாறான வரலாற்றுத் தவறுகள் தமிழினத்தை பேராபத்தான நிலைக்குள் தள்ளிவிடும் என்ற யதார்த்தத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ந்தும் பேரின அரசுக்கு முண்டு கொடுத்து பாதுகாக்க ஒரு சிலர் தமது சுயலாபத்துக்காகச் செயற்படுவதென்பது, தமிழினத்தையே குழிதோண்டிப் புதைப்பதற்குச் சமனாகும். மக்கள் இப்போதே விழித்துக்கொண்டால், ஏமாற்றுக்காரர்களை இனம் காண்பதோடு, அவர்களின் யுக்திகளையும் வலுவிழக்கச் செய்யமுடியும். ஒற்றைக் கையில் ஓர் இனத்தின் தலையெழுத்தையே அடகு வைக்கவிடாமல் தடுக்கவும் அது உதவும்.

# இலங்கை - ருமேனியா உறவு விரிவடையுமாம்

### வெளியுறவுச் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

அடுத்த ஆண்டு ருமேனியாவில் ஒரு இலங்கைத் தூதரகம் திறக்கப்படும் என அறிவித்த இலங்கைத் தூதுக்குழுவின் தலைவரும், வெளியுறவுச் செயலாளருமான அட்மிரல் (பேராசிரியர்) ஜயநாத் கொலம்பகே, 1957 முதல் 63 ஆண்டுகளாக நீடித்து வரும் சிறந்த இருதரப்பு ஈடுபாட்டை மேலும் பலப்படுத்துவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

வெளியுறவுச் செயலாளர் ஜயநாத் கொலம்பகே மற்றும் ருமேனியாவின் வெளிவிவகார இராஜாங்கச் செயலாளர் கொர்னெல் வ்பெருஸா ஆகியோருக்கிடையில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற மெய்நிகர் இணைய வழிச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தொழிலாளர் துறையிலான ஒத்துழைப்பில் கவனம் செலுத்திய இராஜாங்கச் செயலாளர் வ்பெருஸா, தொற்றுநோய் நிலைமையின் போதும் கூட, இலங்கையின் திறமையான மற்றும் அரைத் திறமையான தொழிலாளர்களுக்கு ருமேனியா தொடர்ந்தும் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். அத்தோடு இந்த வாரம் மட்டுமே ஆயிரத்து 500 புதிய தொழில் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## மாகாண சபை முறைமையால் கோத்தாவின் கொள்கை பாழாகும்!

### சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.20



ஒரே நாடு ஒரே கொள்கை என்பதே ஜனாதிபதியின் கொள்கை என்பதால், மாகாண சபை முறைமையை எதிர்க்கின்றேன் என்று சரத் வீரசேகர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
9 மாகாணங்களாலும் 9 விதமான சட்டங்களை உருவாக்க முடியுமாயின், ஒரே நாடு ஒரே கொள்கை பொய்யாகிவிடும்.
இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் படி, விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்குவது, மீண்டும் போர் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது, வடக்கில் வாழ்ந்த மக்களை மீள்குடியேற்றுவது ஆகிய மூன்று நிபந்தனைகளை இந்தியாவால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. மாகாண சபைகள் முறைமையால் நாட்டில் உயிர்த் தியாகம் செய்த மற்றும் அங்கவீனமடைந்தவர்களுக்கு அவமரியாதை ஏற்படுகிறது - என்றார். (ஐ-இ)

## மாடு வெட்டிய இருவர் கைது!!

வவுனியா,டிசெ.20
வவுனியா பட்டகாடு குளக்கட்டு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாட்டை இறைச்சிக்காக வெட்டிய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.
கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அப்பகுதிக்குச் சென்ற வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலிஸார் மாட்டை வெட்டி இறைச்சி ஆக்கிக்கொண்டிருந்த இருவரை கைதுசெய்துள்ளதுடன், இறைச்சியையும் மீட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியாவில் கடந்த சில நாள்களாக சட்டவிரோதமான முறையில் மாடு வெட்டும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-110)

# முல்லை. மீனவருக்கு ஆதரவாக வடக்கு அரசியல்வாதிகள் பேச்சு

முல்லைத்தீவு, டிசெ. 20



இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு மீனவர்களின் கவனவீர்ப்பு நடவடிக்கை 5ஆவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெறுகிறது. அந்த மீனவர்களை, அரசியல் பிரதிநிதிகள் பலரும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், மற்றும் வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், ஆண்டி ஐயா புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் ஆகியோர் மீனவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.
மீனவர்களுடன் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்த வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன், இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையைத் தடுப்பதற்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் பேசுமாறு காதர் மஸ்தானிடம் வலியுறுத்தியிருந்தார். இப் பிரச்சினை வடபகுதியில் அதிகரித்திருப்பதை தான் ஏற்றுக்கொள்கிறேன் எனவும் எதிர்வரும் 25ஆம் திகதி பிரதமர், ஜனாதிபதி மற்றும் உரிய அதிகாரிகளுடன் இடம்பெறவுள்ள இது தொடர்பான கலந்துரையாடலில் நிச்சயமாகப் பேசவுள்ளேன் எனவும் மஸ்தான் உறுதியளித்தார். (ப-246)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக புதிய தலைவராக உபாலி அபேரத்ன

கொழும்பு, டிசெ. 20

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயங்களைக் கையாள நிறுவப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் புதிய தலைவராக, அரசியல் பழிவாங்கல் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் தலைவராக கடமையாற்றிய ஓய்வுபெற்ற நீதியரசர் உபாலி அபேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் முன்னாள் நீதியரசர் உபாலி அபேரத்ன அப்பதவியில் கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்ள எதிர்ப்புத் தெரிவித்து; கொழும்பில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடற்படையின் கப்பக்குழு கடத்திச்சென்று காணாமல் ஆக்கியது எனக்கூறப்படும் விவகாரத்தில் பாதிக்கப்பட்டுள்ள குறித்த மாணவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் கடிதம் ஒன்றை காணாமல் போனோர் அலுவலக முகவரிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ளதுடன், அதன் பிரதிகளைப் பொறுப்பு வாய்ந்த அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பியுள்ளனர்.

குறித்த காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவராக இருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதி அப்பதவியில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. (ப)

# மோசமான நிலையில் கிளி. பேருந்து நிலையம்

பலரும் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, டிசெ. 20

கிளிநொச்சி -டிப்போ சந்தியில் உள்ள கிளிநொச்சி மாவட்ட மத்திய பேருந்து நிலையம் மிக மோசமான நிலையில் காணப்படுகிறது என பொது மக்களும், பேருந்து உரிமையாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 10 வருடங்களைக் கடக்கின்ற போதும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான பேருந்து நிலையத்தை அமைக்க முடியாத நிலையில் நிலைமை காணப்படுகிறது. கடந்த காலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னெடுக்கப் பட்டு தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நிர்வாக மற்றும் அரசியல் தரப்புக்கள் எவ்வித அக்கறையும் எடுக்கவில்லை. குறைந்தபட்சம் மழைக் காலங்களில் பயணிகள் சிரமம் இன்றி வந்து செல்வதற்கு ஏற்ற வகையில் சீரமைத்துத்தருமாறு கரைச்சி பிரதேச சபையிடமும் நேரடியாகத் தெரிவித்தும் அவர்களும் அக்கறை எடுக்க வில்லை. மாறாக சுகாதாரச் சீர்கேடுகள் நிறைந்த பிரதேசமாகக் காணப்படுகின்ற இந்தப் பகுதிக்குள் பிரதேச சபையினரால் புதிய புதிய வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் வெள்ளம் தேங்கி நிற்பதோடு அதற்குள் கழிவுகளும் சேர்ந்து ஒரு அருவெருப்பான பிரதேசமாக மாவட்ட பேருந்து நிலையம் காணப்படுகிறது. பேருந்துகளை நிறுத்தி பயணிகளைச் சிரமமின்றி ஏற்றி இறக்க முடியாத பேருந்து நிலையமாக இந்தப் பேருந்து நிலையம் காணப்படுகிறது. உரிய தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்தி பேருந்து நிலையப் பகுதியை தற்காலிகமாகவேனும் சீர் செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறோம்- என்றனர். (ப-214)

# குறைபாடுகளை ஆராய்வதற்கு கிராமத்துக்கு சென்ற ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.20

பலாங்கொட இம்புல்பே ராவணாகந்த கிராமத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று சென்றிருந்தார். "கிராமத்துடன் கலந்துரையாடல்" எனும் செயற்றிட்டத்துக்கு அமையவே அவர் அங்கு சென்றிருந்தார்.

கிராம மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி, அவற்றுக்கு விரைவில் தீர்வு வழங்குவது கிராமத்துடன் கலந்துரையாடல் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இரத்தினபுரி, நுவரெலியா மாவட்டங்களின் எல்லைப்பகுதியில் இந்த ராவணாகந்த கிராமம் உள்ளது. கிராமத்துக்குச் செல்லும் வீதி சீரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. ராவணாகந்த கிராம மக்கள் முன்வைத்த பிரச்சினைகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி அவற்றுக்கு விரைவில் தீர்வு வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். ராவணாகந்த கிராமத்தைச் சூழவுள்ள கட்டடிகந்த, கல்லேனகந்த மற்றும் தோரவெல்கந்த உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தமது பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் கூறினர். (ஐ-இ)

# பல்லினங்களின் நாடு பன்மைத்துவ தேசம்

*புதிய அரசமைப்பு இவ்வாறு வேண்டும் என்கிறது சமத்துவக் கட்சி*

கிளிநொச்சி, டிசெ.20

பல்லினங்களின் நாடு பன்மைத்துவ தேசம் என்ற அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என புதிய அரசமைப்புக்கான தனது பரிந்துரைகளில் சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள அரசமைப்பானது, இலங்கை பல்லின இனங்கள் வாழும் நாடு என்ற அடிப்படையில் பன்மைத்துவத்தைப் பேணும் வகையிலான பொறிமுறைகளைக் கொண்டதாக அமைய வேண்டும். மொழி, சமயம், மானுடவியல் அடையாளங்களுடனான சமூகங்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு, தேசிய சமூகங்களாக அவை உறுதி செய்யப்பட வேண்டும். தேசிய இனங்களின் சமத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு தேசிய இனங்களின் சபை அமைக்கப்பட வேண்டும். மக்களின் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட ஜனநாயக விழுமியங்களைப் பேணும் வகையில் இருக்க வேண்டும் என்று புதிய அரசமைப்புக்கான யோசனைகளை முன்வைக்கும் வரைபில் சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது. (ப-214)

# புலனாய்வுத் தகவலால் ஊழியர்கள் இடமாற்றம்

கொழும்பு. டிசெ.20

புலனாய்வு அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களுக்கு அமைவாகவே மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் 600க்கும் அதிகமான ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றி கடந்த 12 மாதங்களாக புலனாய்வுத் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தீர்மானத்துக்கு எதிராக திணைக்களத்தின் ஊழியர்கள் எதிர்ப்புக்களைத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். ஆனால், இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இந்தத் தீர்மானத்தை மாற்ற முடியாது - என்றார். (ஐ-ரி4)

# இ.போ.ச - தனியார் பேருந்துகள் விபத்து

போட்டிபோட்டு ஓடியதால் விபரீதம்



வவுனியா, டிசெ. 20

வவுனியா கற்பகபுரத்தில் இரு பேருந்துகள் நேற்று ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகின. வவுனியா மன்னார் வீதி கற்பகபுரம் பகுதியில் நேற்று நண்பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. எனினும் பயணிகளுக்கு எவ்வித உயிர்சேதங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தனியார் பேருந்தை இ.போ.ச பேருந்து முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து ஏற்பட்டது என்று பயணிகள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-18)



2 ஸ்ரீ 4140 புராதன காலத்திற்கேற்ப உள்ள பழுதடைந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டதுமான நிலையில் இருந்த வண்டியை தேடி தருவோருக்கு தகுந்த சலுகை வழங்கப்படும். (பணம்)
இவை பற்றிய விபரங்கள் ஏதேனும் அறிந்தால் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
077 978 8022



# மக்களின் காணிகளை அபகரித்தால் அவர்கள் கடலில் வீடு கட்டுவதா?

## வனவளத்துறையினரை கடுமையாகச் சாடிய ஆளுநர் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவும் உத்தரவிட்டார்



வவுனியா, டிசெ. 20

**மக்களின் காணிகளை நீங்கள் எல்லையிட்டால் மக்கள் கடலுக்குச் சென்றா வீடு கட்டி வாழ்வது? நிலைமையைப் புரிந்து, உணர்ந்து செயற்படுங்கள் என்று வனவளத் திணைக் களத்தினருக்கு உறைக்கும் வகையில் பகிரங்கமாகவே தெரிவித்தார், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ்.**

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆளுநர்,சாள்ஸ் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கு.திலீபன் ஆகியோரின் இணைத்தலைமையில் நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது, வவுனியாவில் வனவளத் திணைக்களத்தால் பொதுமக்களின் காணிகள் எல்லையிடப்படுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், "வவுனியா மாவட்டத்தில் ஆசிகுளம் மற்றும் பல்வேறு பகுதிகளில் மக்கள் வசித்த காணிகளில் வனவளத் திணைக்களத்தினர் எல்லையிட்டு வருகின்றனர். வடக்கில் நிலப்பகுதியில் 44 வீதமான காணிகளை வனவளத்திணைக்களத்தினர் வர்த்தமானியில் அறிவித்துள்ளனர்" என்று குற்றம்சாட்டினார்.

"2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2 லட்சம் ஏக்கர் அளவிலான காணிகளை வனவளத் திணைக்களத்தினர் உள்ளீர்த்துள்ளனர். அப்படியானால் இங்கு அபிவிருத்தியை எப்படி மேற்கொள்வது?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கேள்வியெழுப்பினார்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் அண்மையில் வெளியிட்ட அமைச்சரவை முடிவுகளின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் வனவளத் திணைக்களத்துக்கு சொந்தமானது என்று வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட காணிகளைத் தவிர ஏனைய காணிகள் அனைத்தையும் அந்தந்த பிரதேச செயலர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும். இது தொடர்பாக பிரதேச வாரியாக செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வனவளத்திணைக்கள அதிகாரிக்கு தெரிவித்தார்.

எனினும், வனவளத் திணைக்கள அதிகாரி சுற்றறிக்கை தொடர்பாக தெளிவுபடுத்திக்கொண்டிருந்தார். இதனால் கோபமடைந்த ஆளுநர் நீங்கள் தீர்மானம் எதுவும் எடுக்கத் தேவையில்லை, குழுவும் அமைக்கத் தேவையில்லை. அமைச்சரவை முடிவை மலினப்படுத்த வேண்டாம். மக்கள் வசிக்கும் இடத்தை பிடித்து காட்டின் அளவைப்பெருக்கினால் மக்கள் கடலில் சென்றா வீடுகளை அமைப்பது?. அமைச்சரவை முடிவை உடனடியாக நடைமுறைப்படுத்துங்கள். என்று உத்தரவிட்டார். (த-110)



### ஆங்கில மொழி விருத்திக்கு கற்றல் வள நிலையம் திறப்பு

முல்லைத்தீவு,டிசெ.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆங்கில கல்வியின் பெறுபேற்றை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இரு பாடசாலைகளில் கற்றல்வள நிலையங்கள் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டன.

மாத்தளன் றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இந்த நிலையங்கள் மாவட்டச் செயலர் க.விமலநாதனால் திறக்கப்பட்டன.

நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆங்கில மொழி உதவிப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், மாவட்ட செயலக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்கள மாவட்ட இணைப்பாளர் எனப் பல தரப்பட்டோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

### உழுந்து விதைகள் விநியோகம்

கிளிநொச்சி, டிசெ.20

**கிளிநொச்சியில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு 15 ஆயிரம் கிலோ நல்லின உழுந்து விதைகள் வழங்கப்பட்டுள்ளன.** கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத் திணைக் களத்தால் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கே இவ்வாறு உழுந்து விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் அறுவடை முடிவடைந்ததும் அவர்களிடமிருந்து சிறந்த உழுந்துகள் பெறப்பட்டு அவை மீளவும் வழங்கப்படவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ப-113)

# தனிமைப்படுத்தல் விடுதியில் தொற்றாளர்கள் இல்லை

## மன்னார் மருத்துவமனை பணிப்பாளர் விளக்கம்

மன்னார், டிசெ.20

**தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்படும் நோயாளர்களை நினைத்து பயமோ, பதட்டமோ அடைய வேண்டாம் என மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் செந்தூர் திராஜா கேட்டுகொண்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட எந்த நோயாளரையும் வைத்துப் பராமரிப்பது இல்லை. கொரோனாத் தொற்றின் ஆரம்ப அறிகுறியென சந்தேகிக்கப்படும் தடிமன், இருமல், காய்ச்சல், தொண்டை நோ போன்றவற்றுடன் வேறு நோயின் காரணமாக விடுதிக்கு அனுமதிக்காக வரும் நோயாளர்கள் மற்றும் கொரோனா அறிகுறி இல்லாமல் வேறு நோய்களுடன் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வந்ததன் காரணமாக விடுதிக்கு அனுமதிக்கப்படுபவர்கள் மட்டுமே இங்கு உள்ளார்கள். எனவே இது தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. விடுதிக்கு நீங்கள் அனுமதிக்கப்பட்டவுடன் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அத்துடன் நீங்கள் என்ன நோயின் காரணமாக விடுதிக்கு அனுமதிக்கப் பட்டீர்களோ அதற்கான முழு சிகிச்சையும் உங்களுக்கு வழங்கப்படும். பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரையிலேயே இப் பிரிவில் நீங்கள் தங்க வைக்கப்படுவீர்கள். பி.சி.ஆர் முடிவில் கொரோனாத் தொற்று இல்லை என்றால் உங்களை சாதாரண விடுதிக்கு மாற்றி விடுவார்கள். தொற்று உறுதி செய்யப்பட்டால் மட்டுமே கொரோனா நோயாளர்களைப் பராமரிக்கும் மருத்துவமனைக்கு நீங்கள் அனுப்பப்படுவீர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-56)



### வெள்ளம் பாதித்தவர்களுக்கு ஹவாய் சைவ ஆதீனம் உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 20

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஹவாய் சைவ ஆதீனம் உதவிப் பொருள்கள் வழங்கியுள்ளது.

அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நாவாந்துறை, கச்சாய், தவசிகுளம், மாங்குளம் மற்றும் கற்சிலைமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உணவு, உலர் உணவு என்பன வழங்கப்பட்டன. ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டத் தொண்டர்களும் உதவிப் பொருள்களை நேரில் சென்று வழங்கினர். (த)



### 30 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

மன்னார்,டிசெ.20

**மண் வாசனை அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.** முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு ஆயிரத்து 1,974 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இவ் தாய் நிலம் அறக்கட்டளை காரியாலயத்தில் வைத்து, தாய் நிலம் அறக்கட்டளையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அந்தோனி சகாயத்தால் பயனாளிகளிடம் வழங்கப்பட்டன. (ஐ-56)

### நத்தார் தினத்தில் கைதிகளைப் பார்வையிட அனுமதிகள் ரத்து!

கொழும்பு, டிசெ. 20

நாட்டில் தற்போது காணப்படும் கொவிட்- 19 நிலைமையைக் கருத்திற்கொண்டு நத்தார் பண்டிகையன்று கைதிகளைப் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரை 8ஆயிரம் கைதிகள் புனர்வாழ்வுக்கு உட் படுத்த ப் பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (ரி5 - இ)

# சுவர் வீழ்ந்து துறவி சாவு

கொழும்பு, டிசெ. 20

அறைச் சுவர் இடிந்து வீழ்ந்ததால் அதில் சிக்குண்ட துறவி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் உனவட்டுன ரூமஸ்ஸல மலையில் அமைந்துள்ள சமுத்ரகிரி விகாரையில் நேற்று இடம்பெற்றது. 16 வயதுடைய புதிய துறவியே உயிரிழந்துள்ளார். (கு-இ)

# அன்னை நாகா ஃபூட் சிற்றியில்

## யாழ், கொக்குவில், நல்லூர் கிளைகளில்



Jumbo கடலை ~~230~~--> 198
மஞ்சல் பருப்பு ~~180~~--> 168
ஆட்டகாரி பச்சை அரிசி ~~135~~--> 120

400g ~~380~~--> 360
400g ~~510~~--> 480
500g - ~~550~~-->520
500ml ~~215~~--> 198
350ml ~~720~~--> 670
400g ~~425~~--> 410
2L ~~1100~~--> 1030
250g ~~240~~-->215
250ml ~~385~~-->360
200g ~~1600~~-->1560
400g ~~410~~-->400
1.5ltr ~~200~~-->180
400g ~~1190~~-->1130
1kg ~~170~~-->150
400g ~~1930~~-->1760
400g ~~490~~-->470
16pad ~~300~~-->270
500ml ~~210~~-->190
510g ~~320~~-->310

ANNAI NAGAA FOOD city

எதிர்வரும்
31.12.2020
வரை மட்டுமே

175,K.K.S.Road. Jaffna. T.P: 021 492 7080, 021 739 0194



## யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின்

# அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு

## 20.12.2020

## திருமதி யோகராணி விமலாம்பிகைபாகன்

SPC. Trd (Science), B.Ed

உப அதிபர் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

Congratulations!

**சேவை விவரம்:**

1. யா/யாழ்ரன் கல்லூரி - 31.10.1988 - 19.01.1992
2. பலாலி ஆசிரியர் கலாசாலை - 20.01.1992 - 31.12.1993
3. யா/யாழ்ரன் கல்லூரி - 01.01.1994 - 20.01.1998
4. யா/ இணுவில் மத்திய கல்லூரி - 21.01.1998 - 05.05.1998
5. யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
   - ஆசிரியர் - 06.05.1998 - 31.12.2015
   - பகுதித்தலைவர் - 01.01.2016 - 31.12.2018
   - பதில் உப அதிபர் - 01.01.2019 - 19.12.2020

## சிறந்த ஆளுமை மிக்க ஆசிரியை வாழ்த்துகின்றோம்

ஆசிரியர்கட்கும் மாணவர்களுக்கும் நல்வழிகாட்டியாகவும்
சீரிய நற்பண்புள்ள **ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும்,** உப அதிபராகவும்
சேவையாற்றிய **திருமதி யோகராணி விமலாம்பிகைபாகன்** அவர்களின்
**22 வருட கால சேவைதனைப் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம்.**
ஆசிரிய தலைமுறையினருக்கு கலங்கரை விளக்கமாய்
நின்று வழிகாட்டிய பெருந்தகையும் ஆவார்
சக ஆசிரியர்களுடன் எளிமையாகவும் பண்பாகவும் பழகுவதுடன்
ஏனையோரை மதிக்கும் பண்புடையவர்
இவர் வையத்தில் நலமுடன் பல்லாண்டு காலம் தனது குடும்பத்துடன் சேர்ந்து வாழ
எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.



Congratulations

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், நலன்புரிக்கழகம்

யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கந்தரோடை சுன்னாகம்.

## இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் - கிளிநொச்சி
திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டு பிடிப்புகள் அமைச்சு

SLGTI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE KILINOCHCHI

### வழங்குனர்களை பதிவு செய்தல்

2021 ஆம் ஆண்டிற்காக எமது நிறுவனத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான வழங்குனர்களை பதிவு செய்வதன் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உருப்படியின் இலக்கம | உருப்படியின் பெயர் |
|---|---|
| 01 | அலுவலக தளபாடங்கள், வகுப்பறை உபகரணங்களை வழங்குதல். |
| 02 | அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல் |
| 03 | மின் உபகரணங்களை வழங்குதல். |
| 04 | தொலைபேசி மற்றும் இண்டர்காம் அமைப்பு. |
| 05 | பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கல் மற்றும் பராமரிப்பு. |
| 06 | கணினிகள் மறறும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை வழங்குதல். |
| 07 | அனைத்து அலுவலக மற்றும் பொது எழுது பொருட்களை வழங்குதல். |
| 08 | புதிய டயர்கள், குழாய்கள் மற்றும் பட்டிகள் வழங்குதல். |
| 09 | டயர் மீள்நிரப்புதல். |
| 10 | அச்சிடுதல். |
| 11 | சீருடைகள், விளையாட்டு உடைகள் மற்றும் திரைச்சீலைகள் வழங்குதல். |
| 12 | பெயர்ப் பலகைகள் மற்றும் பிளாஸ்டிக் பெயர் பலகைகளை உருவாக்குதல். |
| 13 | கட்டு மானப் பொருட்களை வழங்குதல் (இரும்பு மறறும் பிற பொருட்கள்) |
| 14 | கட்டிடங்களை புதுப்பித்தல் மற்றும் உள்ளக பழுதுபார்த்தல், அலுமினிய வேலை. |
| 15 | நூலக புத்தகங்களை வழங்குதல். |
| 16 | தொழிற்துறை வாயு வகைகள் (ஒட்சிசன், அசட்டலீன், ஆகன், காபனீரொட்சைட்டு) |
| 17 | வாகன வர்ணப்பூச்சுக்கள் மற்றும் பிற வண்ணப்பூச்சுக்கள் வழங்குதல். |
| 18 | குளிர்சாதன மற்றும் வாயுகுளிரூட்டி உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல். |
| 19 | வெல்டிங் கூர் மற்றும் ப்ளகஸ் வகைகளை வழங்குதல். |
| 20 | இயந்திர உதிரிப்பாகங்கள் வழங்குதல். |
| 21 | அனைத்து வாகன பாகங்கள் வழங்குதல். (பட்டரிகள், வாகன மின்சார உபகரணம், மசகு எண்ணெய் மற்றும் பிற உதிரிப்பாகங்கள்) |
| 22 | இயந்திரங்கள் மறறும் பயிற்சி உபகரணங்களை வழங்குதல். |

இதற்கான விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதுடன். இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம். கணக்கு இலக்கம் **048100180086726** மக்கள் வங்கி. கிளிநொச்சி கிளை என்ற கணக்கிற்கு ரூபா **1000/=** தை வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்து **அதிபர் இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம், அறிவியல் நகர், கிளிநொச்சி** என்ற முகவரிக்கு 15.01.2021 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்த பால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஏல பெட்டியில் இட வேண்டும். இவ்விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021" என குறிப்பிடப்படல் வேண்டும்.

**அதிபர்,**
**இ.ஜே.ப.நி ,**
**அறிவியல் நகர்,கிளிநொச்சி.**
**தொலைபேசி : 0212060137, 0714553684**

---

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் அமைச்சு

### இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் - கிளிநொச்சி
### வழங்குனர்களை பதிவு செய்வதற்கான
### விண்ணப்பம் - 2021ஆம் ஆண்டு

01. வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்ட உருப்படி மற்றும் இலக்கம் -
02. நிறுவனம் அல்லது உரிமையாளரின் பெயர் -
03. முகவரி -
04. வியாபார பதிவு இலக்கம் (பதிவுச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்) -
05. பெறுமதி சேர் வரி (பதிவுச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும் ) -
06. தொலைபேசி இலக்கம் -
07. தொலைநகல் இலக்கம் -
08. மின்னஞ்சல் (email) முகவரி -
09. பொருட்களை கடனாக வழங்கக்கூடிய கால எல்லை -
10. பொருட்களை கடனாக கொடுக்ககூ டிய உருபடிகளின் பெறுமதி -
11. உருப்படிகளை நிறுவனத்திற்கு நேரடியாக வந்து ஒப்படைத்தல் தொடர்பான கருத்து.

எனது அறிவிற்கமைய, மேற் கண்ட கூற்றுக்கள் உண்மை மற்றும் சரியானவை எனவும், உயர்தரமிக்க பொருட்களை வழங்க முடியும் என்றும் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

.............................................. ..............................................
திகதி கேள்வி பத்திரதாரரின் கையொப்பம்

அலுவலக பயன்பாட்டிற்கு

பதிவு எண் -

பற்றுச்சீட்டு எண் மற்றும் திகதி -

**பணிப்பாளர்**
**கொள்முதல் வாரியம்**
**இ.ஜே.ப.நி**

---

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமன்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

---

## சிறுநீரகம் தேவை

64 வயதுடைய ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவருக்கு $A^+$ அல்லது $O^+$ குருதிவகை உடைய சிறுநீரகம் உடனடியாக தேவை. (25 வயதிற்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவர்களுடையது விரும்பத்தக்கது

தொடர்பு: 071 425 4880, 077 491 7833

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 06 . 08 . 1953



இறப்பு 20 . 11 . 2020

கடந்த 20.11.2020 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் பரமநாதன் கமலாதேவி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.


அன்னார் இறைபதமடைந்த செய்தி அறிந்து நேரில் வந்து துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் துக்கம் விசாரித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குளுக்கண்டி வீதி,
இருபாலை கிழக்கு, கோப்பாய். குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 08 . 1930



மறைவு 08 . 12 . 2020

### நாகலிங்கம் செல்லத்துரை (மார்க்கண்டு)

குப்பிழானைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை (மார்க்கண்டு) 08.12.2020 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும், திலகேஸ்வரி (திலகா- லண்டன்), சத்தியேஸ்வரி (சத்தியா - சுவிஸ்), திருக்கேதீஸ்வரமூர்த்தி (கண்ணன்- சுவிஸ்), திருஞானேஸ்வரமூர்த்தி (ஞானன் - சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (ரஞ்சன்- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகநாதன் (லண்டன்), தயானந்தன் (சுவிஸ்), கயல்விழி (சுவிஸ்), வதனகாந்தி (சுவிஸ்), குணாளினி (லண்டன்) ஆகியோ ரின் அன்பு மாமனாரும் ஜெயனி , கணதீபன், ஜான்ஸி, மதுசா, மதுசன், துவாரகா, சாருகா, பவித்திரன், திவ்யன், துஸ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, வைத்திலிங்கம், விசுவலிங்கம், வீரவாகு, இளையதம்பி, நடேசு மற்றும் தங்கரத்தினம் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான சௌந்தரம், பர்வதம், அருளம்மா, பூதப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் இரத்தினம்மா (லண்டன்) காலஞ்சென்றவர்களான கனகசபை, கமலாதேவி, இந்திராணி மற்றும் நகுலேஸ்வரி, அருணகிரிநாதன், கிருஷ்ணவேணி, பரமகுருநாதன், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியை 23-12-2020 புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் Hendon Crematorium Holders Hills Road, Hendon London NW7 1NB எனும் முகவரியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : மனைவி - 020 857 19564
ரஞ்சன் - 079 20797045

தகவல்
குடும்பத்தினர்

## பதவி வெற்றிடம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் கீழ்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முகாமைத்துவ உதவியாளர் (ஒப்பந்த அடிப்படை) வேண்டிய தகமைகள்.**

01. க.பொ.த உயர்தர (A/L) தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
02. கணினி M.S Office மற்றும் Internet E.mail கையாளக்கூடிய திறமை
03. இரு வருட துறைசார் அனுபவம்
04. 21 ற்கும் 30 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்
05. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை அலுவலகத்திலிருந்து 6km சுற்றாடலில் வதிவிடமாக கொண்டது விரும்பதக்கது.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

இது தொடர்பான விண்ணப்பங்களை உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுகளுடன் 31/12/2020க்கு முன்னர் தபால் மூலம் சுயவிபரகோவையினை கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
இல.67 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

## தொடர்ந்து இருபத்திரண்டாம் ஆண்டும் தேடுகின்றோம்



### பாலசுப்பிரமணியம் பிரதீபன்

மண்ணின் மைந்தனாய் 07.07.75 இல் உதித்தனை
மகாஜனாவின் மதிப்பு மிகு உயர்தர விஞ்ஞானப் பிரிவு
மாணவனாய் 94 இல் திகழ்ந்தனை
வீட்டுக்கென வாழாது நாட்டுக்கென வாழ்ந்தனை
கடலில் கலந்தனை என விண்டனர்
கண்டத்தை எவரும் கண்டிலர்
கண்ணீர் கடலில் நீந்துகின்றோம் நாம்

தந்தை - தாய் - Dr. மு.பாலசுப்பிரமணியம் - யோகமலர் (மாவிட்டபுரம் - உரும்பிராய்)
சகோதரி - திருமதி கௌ. சுபாஜினி (அம்பனை, தெல்லிப்பழை)
சகோதரன் - பா. பிரசாத் (உரும்பிராய்)

## விற்பனைக்கு

**டிப்பர் வாகனம் LN** என்ற தொடரிலக்கத்தை உடைய **கார்கோ டிப்பர்** விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு- 077 367 8019

## வேலையாள் தேவை

யாழ்நகரில் உள்ள கொட்டல் ஒன்றிற்கு **Receptionist and Delivery Boy** தேவை.

077 630 9947, 077 373 4109

## வாடகைக்கு வீடு உண்டு

பாண்டியன் தாழ்வு St. ஆன்ஸ் தேவாலயத்திற்கு அருகில் இரு அறைகளுடன் வீடு வாடகைக்கு விடப்படும். சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தரகர் வேண்டாம்.

076 698 0531

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு Billing செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 419 5015

## வேலையாள்கள் தேவை

வவுனியா நகரில் இயங்கும் **கேக் கடை** ஒன்றில் பணியாற்றுவதற்கு **கேக், ஐசிங்** வேலை தெரிந்த **பெண்கள்** உடன் தேவை.

077 538 3738

## உதவி குருக்கள் தேவை

கொழும்பு 13 ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு

**உதவிகுருக்கள்** தேவை.

தங்க வீடு வசதியும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13.
Phone: 0722 223340 / 0722 2447606 / 0777 261777
Email : muruganginthupitiya@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமையாற்றிய
**திருமதி தாமரா திவாகர்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நிறைவுக்காண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம் யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி




யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமைபுரிந்த
**திருமதி தாமரா திவாகர்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மருந்தாளர்கள்
யாழ்.போதனா வைத்தியசாலை

## A.S Concrete Works

கொன்கிறீட் பிலாட் ( Slab ) வேலைகள், கொலம்ஸ் வேலைகள் உயர்தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
அனைத்து பொருட்கள் கூலிகள் அடங்கலாக
1 சதுர அடிக்கு ரூ.660/= இக்கட்டணம்
500 சதுர அடிக்கு மேல்

தொடர்புகளுக்கு:
**075 093 9464**



அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த
நகைகள்
அறுதியாக
போகின்றனவா?

F.A.Ads

எந்தவொரு வங்கிகளில்
அடகு வைத்த நகைகளுக்கு
**பவுண் ஒன்றுக்கு ரூபா 15000/= மேலதிகமாகவும்**
**70 சதமான அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு 0776 445322 இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்பிவையுங்கள்

### ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | ஓட்டுச்சுட்டான் | 074 0929571 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | வவுனியா | 074 0920313 |
| கல்முனை | 071 0870663 | நெல்லியடி | 074 0920357 |
| ராகலை | 071 0870703 | சங்கானை | 074 0920317 |

## மரண அறிவித்தல்



### ஏகாம்பரம் பேரானந்தசிவம்

கரம்பொன். காளிகோயிலடி. ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் K.R. லேன் பலாலி வீதி. கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் பேரானந்தசிவம் 19.12.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும். மாலதி அவர்களின் அன்புக் கணவரும். சிந்தூரி. மாதுரி. சங்கீத் ஆகியோரின் அன்புத் தந்தையும். பகீதரன். துவாரகன் ஆகியோரின் அன்பு மாமனும். அனித்ரா. அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும். காலஞ்சென்றவர்ளான பாலையா. யோகேஸ்வரி. பிரபாகரன். கந்தசாமி. விஸ்வமூர்த்தி மற்றும் சிவபாலன் நாகபூஷணி. ஜெயலட்சுமி. பேரின்பநாயகி. றம்மணி அம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில். கட்டையாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.R. லேன்,
பலாலி வீதி, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 . 01 . 1940



மறைவு 22 . 11 . 2020

### அமரர் நாகப்பர் கந்தசாமி

(ஓய்வுபெற்ற உயர்நீதிமன்றப் பதிவாளரும், அகில இலங்கை சமாதான நீதவானும்)

கோவிற்கடவை, துன்னாலை மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிட மாகவும் கொற்றையூர் கரணவாய் வடக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகப்பர் கந்தசாமி அவர்கள் 22.11.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியை 20.12.2020 அன்று சுப்பர்மடம் தெனி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 22.12.2020 அன்று இல்லத்தில் நடைபெறும்.


அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் பல்வேறு வகைகளில் இறுதி நிகழ்வில் உதவி புரிந்தவர்களுக்கும் தொலை பேசி மூலம் துயர்பகிர்ந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல.26, ஆச்சிரம வீதி,
நெல்லியடி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1945



மறைவு 19 . 12 . 2020

### சபாரத்தினம் தங்கராஜா

(ஓய்வுபெற்ற துறைமுக அதிகாரி-கொழும்பு)

சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சபாரத்தினம் நாகேஸ்வரி அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிங்காரம் முத்தம்மா அவர்களின் அன்பு மருமகனும், ஆகிய தங்கராஜா நேற்று (19.12.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ருக்மணிதேயின் அன்புக் கணவரும், ரஜிதப்பிரியா (நோர்வே), ஜெனிதா (சுவிஸ்லாந்து), சஞ்சீவ்காந் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராகுலன், கிரிதரன், சுரேக்கா ஆகியோரின் மாமனாரும் கோகுலராணி (காலஞ்சென்றவர்), அற்புதராணி, நடராஜா, சண்முகராஜா (அமரர்), நவரட்ணம், கணேசமூர்த்தி, தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரட்ணம் (அமரர்), கந்தசாமி (அமரர்), தனலட்சுமி, இந்திராணி, சந்திரஜெயந்தி, ஜஸ்மின் ஆகியோரின் மைத்துனனும் ஜஸ்வின், கிசோர், அப்சறா, சிமேரா, சஷ்டிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 12 . 1991



மறைவு 18 . 12 . 2020

### திருமதி திவாகர் தாமரா

(Pharmacist Jaffna Hospital)

ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியை பிறப்பிடமாகவும் இணுவில் துரைவீதி (தற்போதைய) வதிவிடமாகவும் கொண்ட திருமதி திவாகர் தாமரா நேற்று முன்தினம் (18.12.2020) அகால மரணமடைந்தார்.

அன்னார் யோகேந்திரன் திவாகர் அவர்களின் மனைவியும், காலஞ் சென்ற Dr.திரு.K.S.பரம்சோதிநாதரின் மூத்த புதல்வியும் Dr.திருமதி பரம்சோதிநாதர் கிருஷ்ணவேணியின் பாசமிகு புதல்வியும், பிறேந்திரா (மருதனார்மடம் பரம்சோதி Medicals உரிமையாளர்) வின் பாசமிகு தங்கையாரும், திருமதி வேணுகாந் தூஷாரா (ஆயுள்வேத மாணவி) வின் பாசமிகு தமக்கையாரும், திரு.வேணுகாந் (தம்ஸ் அப் ஸ்ரோர் உரிமையாளர்) தின் பாசமிகு மைத்துனியும், திரு. மதியாபரணம் கிருஸ்ணகுமார், திருமதி உதயகுமார் சுரேகா (ஆனைக்கோட்டை) வின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம்-அன்ன லட்சுமி, சின்னத்துரை-தங்கச்சியம்மாள் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் (துரைவீதி இணுவில்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 955 7830

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1947



மறைவு 18 . 12 . 2020

### சுப்பு சின்னையா

யாழ் வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பு சின்னையா அவர்கள் 18.12.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பு தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மா அவர்களின் அன்பு கணவரும், றோஸ்மலர், சித்திரா, பாலகிருஸ்ணன் (ஜேர்மனி) காலஞ்சென்ற புஸ்பலீலாவதி ஆகி யோரின் அன்பு மைத்துனரும் இராஜரட்ணம் (ஆசிரியர், யா/மட்டுவில் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்) அரியகுணசிங்கம் (சிங்கப்பூர்), சிவராசா (லண்டன்), ஜீவரட்ணம் (லண்டன்) கருணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், சாவகச்சேரி) சுபாசினி (சிங்கப்பூர்) தயாராணி (லண்டன்) கஜந்தினி (லண்டன்) தர்மிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெஷ்வினா, ஷகானா, பாதுஷன், கேதுஷா, ஷானுகா, ஹர்சிகன், பவின், அஷ்வித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராஜரட்ணம் - 077 2343 250
அரியகுணசிங்கம் - 006594525090
சிவராசா - 00447949470644
ஜீவரட்ணம் - 0044746695800
கருணாகரன் - 41793835104

தகவல்:
குடும்பத்தினர்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி..

## ராஜபக்ச அரசுக்கு....

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்த ஆவணத்தை, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அடியோடு நிராகரித்துள்ளார். இது தொடர்பில் அவர் சுமந்திரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அங்கத்தவர்களுக்குமான கடிதத்தின் முதல் வரைவில், முதல் ஐந்து பக்கங்களிலும் நீங்கள் (சுமந்திரன்) குறிப்பிட்டிருப்பவை அனைத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினர் முற்றிலும் அறிந்த விடயங்களே. அம்முதல் வரைவின் முன்னுரையில் நீங்கள் இருசாராரும் இயற்றிய மனித உரிமை மீறல்கள் பற்றிக் கூறியுள்ளீர்கள். நாங்கள் இவ்விடயத்தில் புறநிலை கூர் நோக்கர்களாக இருக்க வேண்டுமா அல்லது சுயநிலை முறைப்பாட்டாளர்களாக மாறவேண்டுமா என்பதில் எனக்கு மயக்கம் இருக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் உங்களால் பரிந்துரைக்கப்பட்ட ஒரேயொரு திடமான செயற்பாடானது இதுவரை காலமும் தோல்வியைத் தழுவிய கூட்டத் தீர்மானம் போன்ற பிறிதொரு கூட்டத் தீர்மானத்தை மீண்டும் கொண்டு வருவதாகும். அதுவும் இலங்கை அரசாங்கம் ஒற்றுமைக் கூட்டத் தீர்மானமாக முன்னர் கொண்டு வந்த தீர்மானத்தில் இருந்து பின்வாங்கிய பின்னர் இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டுள்ளீர்கள்.

மீண்டும் காலக்கெடு விதிப்பதால் தற்போதைய நிலை மாறும் என்று எவ்வாறு முடிவுக்கு வந்துள்ளீர்கள்? உண்மையில் மேலும் காலக்கெடு அளித்தால் இன்றைய அரசானது தமிழ், முஸ்லிம் சமூகங்களை இனி இல்லை என்று ஆக்கி விடுவார்கள் என்பதை உணர்ந்தீர்களா? அது தான் தற்போது நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் உங்கள் முதல் வரைவில் மிகச் சரியாகப் பின்வருமாறு கூறியுள்ளீர்கள் 'தற்போது அவர்கள் குடியியல் பதவிகளுக்கு படையினரைத் தொடர்ந்து நியமித்து வருகின்றார்கள், தமிழ் மக்களின் காணிகளைக் கைப்பற்றி வருகின்றார்கள், தொல்லியல் மேலாண்மை என்ற பெயரில் கிழக்கிலங்கையில் காணிப் பங்கீட்டை நடாத்த பௌத்த மதவாளர்களை நியமித்துள்ளார்கள், பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோரைக் கண்காணிக்கவும் பயமுறுத்தவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள். மேலும் முஸ்லீம் சமூகத்தவரின் மதம் சார்ந்த நல்லடக்கச் சடங்குகளைத் தடைபோட்டுத் தடுத்து வருகின்றார்கள்.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் மிக்க செல்வாக்குள்ள அங்கத்தவராக மாறிவரும் சீனாவானது 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதியன்று ஐ.நா. மனித உரிமைப் பேரவை அடங்கிய உலக ஸ்தாபனங்களில் இலங்கைக்கு முழு ஆதரவை வழங்கியும் பாதுகாப்பையும் வழங்கப் போவதாக வெளிப்படையாக அறிவித்துள்ளது'

இவ்வாறெல்லாம் நடக்கின்றன என்று கூறும் நீங்கள் எதற்காக இலங்கைக்கு மேலும் காலக்கெடு அளிக்க முன்வந்துள்ளீர்கள்? நீங்களே உங்கள் பரிந்துரையொன்றில் காலக்கெடு அளிப்பதால் ஆவதொன்றில்லை என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளீர்கள். இவற்றை எல்லாம் தெரிந்து கொண்டும் மேலும் காலக்கெடு இலங்கைக்கு வழங்க நீங்கள் முன்வருவது எனக்கு மலைப்பை ஏற்படுத்துகின்றது.

உங்கள் பரிந்துரையானது இனவழிப்பு செய்த ஒரு அரசுக்கு முன்னர் அளித்த சலுகைகளை சர்வதேச நாடுகள் மீண்டும் அளிக்க வேண்டும் என்ற தொனிப்படவே அமைந்துள்ளது. அதில் மனவருத்தத்திற்குரியது என்னவென்றால் இந்தக் கோரிக்கையை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நீங்கள் முன்வைக்க முன்வந்துள்ளீர்கள்.

உங்கள் ஆவணத்தையும் பரிந்துரைகளையும் எவ்வாறு நாம் ஏற்க முடியும்? ஆவணத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டுத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டும் என்றோ பேரவையைப் பகிஷ்கரியுங்கள் என்றோ நான் கூறவில்லை. பேரவையின் கூட்டுத்தீர்மானத்தை மேலும் பலப்படுத்த மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதேயாகும்.

அதே நேரத்தில் சமாந்திரமாக நாம் இலங்கையை சர்வதேச நீதிமன்றின் முன் கூட்டிச்செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை முன்பான பொறிமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நடைமுறைச் சாத்தியமான செயற்பாடாகும். இவற்றைச் செய்ய முடியுமா முடியாதா என்று மயங்கி நிற்கக்கூடாது. எமது மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் இவற்றைச் செய்வது எமது கடமையும் கடப்பாடாகவும் அமைகின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை விடும் அதே நேரம் ஐக்கிய நாடுகள் விசேட ஆய்வாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் அந்தப் பேரவையிடம் கோரிக்கை விடலாம். ஒரு சுயாதீனமான விசாரணைப் பொறிமுறையொன்றையும் தாபித்து பொறுப்புக் கூறலையும் போர்க்குற்ற செயல்பாடுகளையும் ஆராயுமாறு கோரலாம்.

இவற்றை முழுமனதுடன் நடைமுறைப்படுத்த நீங்கள் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன். இந்த அடிப்படையில் ஒரு கடிதத்தை வரைந்து தமிழ்க் கட்சிகள் எல்லோரும் சேர்ந்து கையெழுத்திட்டு அதனைப் பாரப்படுத்தலாம். நீங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவற்றைச் செய்ய ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகின்றேன்- என்றுள்ளது. (ஒ.இ)

### ஆசிரியர் தேவை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு மிக கிட்டிய தூரத்தில், விசேட தேவை கொண்ட முன்பள்ளி பிள்ளைக்கு வீட்டில் வந்து பாடம் கற்பிக்கக் கூடிய தகுதியுடைய முன்பள்ளி ஆசிரியரோ அல்லது அதற்கு ஈடான கல்வித் தகைமையோ அனுபவமோ கொண்டவர் தேவை.

தொடர்புகளுக்கு:077 158 9883

### பழைய பொருட்கள் தேவை

பழைய வீடு, மரம், சீற், ஓடு, கதவு நிலைகள் என்பன தேவை.

தொடர்பு: 076 4168 575

### வீடு வாடகைக்கு

யாழ் கோவில் வீதியில் இருந்து 100m தொலைவில் 06 அறைகளுடன் கூடிய நல்ல சூழலில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு

077 618 4354, 077 993 8348

### வேளையாள் தேவை

யாழ் நகர் பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் சமையல் கிளினிங் வேலை செய்வதற்கு பெண் ஒருவரும், சிறு வேலைகள் செய்வதற்கு ஆண் ஒருவரும் தேவை. தங்கி இருக்க கூடியவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் 18000/= மேல்.

தொடர்புகளுக்கு:0777 111 444

### சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

AAA Gold Center

076 568 4346

### வேலையாள் தேவை

வெல்டிங், மேசன் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள, கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஆள் தேவை. தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 594 2322

### வேலைவாய்ப்பு

1. விற்பனை உதவியாளர்
   பெண் - வயது 24 - 35
   ஆண் - வயது 20 - 35
2. மேற்பார்வையாளர்
   ஆண் வயது 30 - 45
   முன் அனுபவம் விரும்பத்தக்கது
3. சமையலாள் (பெண்) - வயது 35 - 50

நேர்முகத் தேர்வு :- 21.12.2020 - 24.12.2020
10 AM - 1PM

இல.175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு : - 077 477 3481

### 2021 க்கான நாட்காட்டிகள் (கலண்டர்)

வியாபார நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், அச்சகத்தினருக்கு தேவையான சாந்தி மாதாந்த தமிழ் பஞ்சாங்க கலண்டர்கள். A2, A3 அளவுகளிலும் ஆங்கிலக் கலண்டர் 20" 30", Office கலண்டர் மற்றும் வர்ணமான படக் கலண்டர்கள். சகல விதமான அளவுகளில் எம்மிடம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சிவ தயா அச்சகம்

92 (150), நாவலர் றோட், (N.S.B வங்கி அருகில்),
மனோகரா சந்தி (யாழ்ப்பாணம்)

077 641 3568, 077 396 5214
021 221 9483

### Jaffna வில் முதன்முதலில்

RENT A CAR

Melbourne one (Pvt) Ltd

அனைத்து வித வாகனங்களும் வாடகைக்கு உண்டு.

★ வேன் ★ கார் ★ BMW Car (Wedding hire)

Rooms Available

AC, Non AC Rooms Available

வாடகைக்கு

AC அறைகள், Non AC அறைகள் உண்டு.

Swetha - 0777 345 546
Vikram - 0777 887 305

## மரண அறிவித்தல்



### திருமதி இந்திரகேஸ்வரன் கமலாதேவி

செருக்கப்புலம் பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், யார்வத்தை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் தற்போது புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரகேஸ்வரன் கமலாதேவி அவர்கள் 19.12.2020 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா காமாட்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பார்வதியம்மா ஆகியோரினது அன்பு மருமகளும் இந்திரகேஸ்வரன அன்பு மனைவியும், வைகுந்தன் (சாரதி-சுகாதார சேவைகள் பணிம யாழ்ப்பாணம்), அனோஜா, றஜிந்தா (பிரான்ஸ்) ஆகியோரினது அன்புத் தாயாரும், சுஜிதா, அஜந்தன் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரினது மாமியாரும், சிந்துஜா, அக்ஷயா, அனிஸ், அபிசா, கவிஸ், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற விக்னேஸ்வரி மற் சாரதாதேவி, வசந்தாதேவி பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் ச தரியும், நகுலேஸ்வரி, நாகராசா, நாகேந்திரன் ஆகியோரது மைத்துனி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக்கி முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெ புன்னாலைக்கட்டுவன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏ கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
மகன்-வைகுந்
07716692

## உயர்வு கண்டு உளமார வாழ்த்துகின்றோம்

### திருமதி சுபத்திராதேவி தனபாலசிங்கம்

(பராசக்தி பாலர் பகல் இல்லம், கைதடி முதன்மை ஆசிரியர், கைதடி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர்)

சுபத்திராதேவி தனபாலசிங்கம் அவர்கள் 08.12.2020 அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவரை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் அவரது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பராசக்தி பாலர் பகல் இல்லச் சமூகம்
கைதடி.



# தேவை

**திருநெல்வேலி பிரதேசத்துக்கு உட்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு**
**கணக்காளர் (உதவியாளர்)** தேவை.
**(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள்:**

**கணக்காளர் (உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்
- ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்கவேண்டும்
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும்

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து **25.12.2020** இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மின்னஞ்சல் முகவரி: jobdocumentsbsa@yahoo.com

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பிறைசூடி

( முன்னாள் உதவி அத்தியட்சகர் - நில அளவைத் திணைக்களம், முன்னாள் பகுதி நேர விரிவுரையாளர் - கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி )



தோற்றம் 20.06.1941 மறைவு 18.12.2020

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி பிறைசூடி ( முன்னாள் உதவி அத்தியட்சகர் - நில அளவைத் திணைக்களம், முன்னாள் பகுதி நேர விரிவுரையாளர் - கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி) கடந்த 18.12.2020 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி – வள்ளிப்பிள்ளை தம்பதியின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னபூரணி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி காந்தியின் அன்புக் கணவரும், அருணோதயத்தின் அன்புச்சகோதரனும் பொன்னம்மா, நாகேஸ்வரன் மற்றும் காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், கஜன், கலாபன், சுரநுதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசங்கரி, மாதங்கி, சிறீலிங்கம் ஆகியோரின் ஆகியோரின் அன்பு மாமனும், அகிம்சா, நிதானா, ஆரன், கஜலினி, சிறித்தா, சாதனா ஆகியோரின் அன்புப் பேரனும்,உமாகணேசன், உமாசந்தர் , பரநிருபன், கபிலன், பிரதாப், நிலோஜா ஆகியோரின் அன்பு மாமனு, நா. மகேந்திரன் ( ஓய்வு பெற்ற நில அளவையாளர் ), காலஞ்சென்றவர்களான பாலேந்திரன் (ஓய்வு பெற்ற இ.போ.ச.பரிசோதகர் ), இராசேந்திரன் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய பரிசோதகர் ) , புஸ்பகாந்தி, திருச்செல்வி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை மு.ப 9.00 – 11.00 மணியளவில் கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: கஜன் - +14161386783 29
கலாபன் - +14190580862 17
சதீஸ் - +14141631996 12
சுரநுதா - +14164799096 12

தகவல் -க.கணேசராசா (மைத்துனர்) (ஓய்வு நிலை ஆசிரியர் )

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி விசுவலிங்கம் (ராணி)



தண்ணீர்தாழ்வு கட்டுவனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி விசுவலிங்கம் (இன்பம்) 19.12.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னத்தங்கத்தின் மகளும், காலஞ்சென்ற சின்னையா செல்லம் தம்பதியரின் மருமகளும், விசுவலிங்கம் (இன்பம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜீவனா (முகாமைத்துவ உதவியாளர் வீடமைப்பு அதிகார சபை), துஷ்யந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச செயலகம்) அவர்களின் அன்புத் தாயாரும், ஸ்ரீரங்கேஸ்வரன் (யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி), ஷாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமியாரும், அக்ஷ்மன், பவிஷா (மகாஜனா கல்லூரி) அவர்களின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பளை கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**மருமகன்:077 162 9721**

---

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

11,000 Km தூரம் ஓடிய Discover 125 m ரக மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

**071 763 5464**

---

வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கிய கடன்களை வசூலிக்கும் அதிகாரபூர்வமான எமது நிறுவனத்தில்

**யாழ்ப்பாணம், மட்டக்களப்பு**

மாவட்டங்களில் வெற்றிடங்கள் உள்ளன.

## கடன் வசூலிக்கும் அதிகாரி

- வயது 22-45ற்கு இடைப்பட்டவர்கள்
- மோட்டார் சைக்கிள் உரிமையுடையவராயிருத்தல்
- **சிங்களம் பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது**
- இத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அடிப்படை சம்பளம், கமிஷன் மற்றும் மோட்டார் வாகன கொடுப்பனவுடன் மாதமொன்றிற்கு ரூ. 35,000/-க்கு அதிக சம்பளம்.

நேர்முக பரீட்சை 22,23,24 /காலை 9.00 மணி முதல் பகல் 12.00மணி வரை

**CENTRAL RECOVERIES**
40/2, N.J.V. குரே மாவத்தை, ராஜகிரிய. (கேட்வே சர்வதேச கல்லூரிக்கு அருகில்)
தொடர்பு: 0704 800 750/ 0701 900 805
E-mail: centralrecoveries@yahoo.com

FLEX Graphic

---

# Canada VISA

*நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்*

## STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk

*10 வருட கால நம்பிக்கையான சேவை*

---

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
## திருநெல்வேலி
## யாழ்ப்பாணம்.

**பட்ட/ பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள்**

**Top up Degree/ Fast track Degree Programmme.**

தொழில்சார் கற்கைகள் நிறுவனத்தினால் பட்ட, பட்ட மேற்படிப்புக் கற்கைநெறிகளிற்கான கல்வியாண்டு 2020/2021ற்காக பின்வரும் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**பட்டதாரிப் பிரிவுகள்:** (Graduate Studies)

| | |
|---|---|
| BA in English | B.Sc in Nursing |
| B.Sc in Psychology | BA in Education |
| B.Sc in Computer Science | BBA in Management |
| B.Sc in ICT | BA in MLS/MLT |

**பட்ட மேற்படிப்புக் கற்கைகள்:** (Post- Graduate Studies)
MA, M.Sc, MBA, M.Ed, LL.B
M.Phill/Ph.D:

பட்ட / பட்ட மேற்படிப்பு தகைமை கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

அனைத்து கற்கைகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு/ வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அங்கீகாரமுடையது.

பட்டதாரிக் கற்கைகளிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் உயர்தர தகைமை/ NVQ3,4 / HND / துறை சார் அனுபவம் போன்றவற்றில் ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். பல்கலைக் கழகங்களின் விபரங்களினை அலுவலகத்தில் பார்வையிடலாம். வருடாந்தம் பட்டமளிப்பு இடம்பெறும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 31-12-2020 ற்குள் அலுவலகத்தில் அல்லது மின்னஞ்சல் ஊடாக degreeinfo08@gmail.com விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். மேற்படி கற்கைகளுக்கான கருத்தரங்கு பல்கலைக்கழக பிரதிநிதிகளினால் இலவசமாக விரைவில் நடாத்தப்படும்.

மேலதிக விபரங்களுடன் தொடர்புகளுக்கு:
பதிவாளர்,
முகாமைத்துவ நிர்வாக சபை,
தொழில்சார் கற்கைகள் நிறுவனம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
TP: 0214340229/ 0766852529.

## மரண அறிவித்தல்

நேற்றைய உதயன் பத்திரிகையின் 14ஆம் பக்கத்தில் பிரசுரமான **நித்தியானந்ததேவி கணேசலிங்கம்** (வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்) என்பவரின் மரண அறிவித்தலில் காலஞ்சென்ற சச்சிதானந்தா, விவேகானந்தா, ஸ்கந்தானந்தா அவர்களினதும் சிவானந்தா, சண்முகானந்தா அவர்களினதும், காலஞ்சென்ற அருளானந்த தேவியினதும் சகோதரி என வாசிக்கவும்.

விளம்பரதாரர்.

---

உச்சக்கட்ட அரசியல் மோதல்

# ஒரே வீதிக்கு 10 நிமிட இடைவெளியில் இரண்டு முறை அடிக்கல் நடப்பட்டது!

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஒரே வீதிக்கு 10 நிமிட இடைவெளியில் இரண்டு முறை அடிக்கல் நாட்டப்பட்ட அரசியல் மோதல் நேற்று இடம்பெற்றது.

வலிகாமம் வடக்கு சேந்தாங்குளம் பகுதியில் நேற்று இந்த சம்பவம் நடந்தது. கோத்தாபயவின் பிரதிநிதியாக அங்கஜன் வடக்கில் தமிழ் மக்களின் அதிகார பரவலாக்கல் முயற்சிகளை பின்தள்ள வைக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார் என்ற விமர்சனத்துடன், தமிழ் அரசியலில் இதுவ்ரையில்லாத வகையில் குடும்ப அரசியலையும் முன்னெடுக்கிறார் என்ற விமர்சனங்களும் அண்மைக்காலமாக தோன்ற ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில், நேற்று வலி வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட சேந்தாங்குளம் ஜே/222 கிராமத்தில், கடற்கரை வீதியை சீரமைப்பதில் மோதல் ஏற்பட்டது. வலி வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சிலர் அங்கு வீதி அபிவிருத்தி திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். இதன்பின்னர் அங்கஜன் இராமநாதனின் சித்தப்பா குழுவினர் வந்து இன்னொரு ஆரம்ப நிகழ்வை நடத்தினர். அங்கஜன் இராமநாதனின் தந்தை சதாசிவம் இராமநாதன் ஏற்கனவே, மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரின் இணைப்பாளர் என்ற கோதாவில் அங்கஜன் இராமநாதன் சார்பில் நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். தற்போது, சித்தப்பாவும் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொள்ள ஆரம்பித்துள்ளார். (ம)

## கொரோனா தொற்றாளரில்...

இது கடந்த காலங்களில் வடக்கில் கண்டறியப்பட்ட வைரஸின் அளவு கூடுதலாக கணிக்கப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக உள்ளது. மருதனார்மடம் கொத்தணி வேகமாகப் பரந்துபட்டு பரவுவதற்கும் இது காரணமாக இருக்கலாம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூத்த விரிவுரையாளர் ஆ.முருகானந்தன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையானது வைரஸ் தொற்று உண்டு அல்லது இல்லை என்பதற்கு அப்பால் குறிப்பிட்ட நபரில் காணப்படும் வைரஸின் அளவையும் (வைரஸ் லோட்) துல்லியமாக கணிக்கவல்லது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருதனார்மடம் கொத்தணியில் பலருக்கு தொற்று ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் 'உதயன் பத்திரிகை' தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் கடந்த காலங்களில் கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மாதிகளில் காணப்பட்ட வைரஸின் அளவுடன் ஒப்பிடுகையில், மருதனார்மடம் கொத்தணியில் கண்டறியப்படும் தொற்றாளர் பலரின் மாதிரிகளில் வைரஸின் அளவு அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தொற்றாளர்களில் இருந்து பிறிதொருவருக்கு மிக இலகுவாகவும் துரிதமாகவும் இவ் வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் அது வேகமாகப் பரவுகின்றது.

கொரோனா வைரஸ் அளவு குறைந்த ஒருவரிடம் இருந்து வெளியேறும் வைரஸ் கூறுகளின் அளவு குறைவாக இருப்பதனால் அவரிடமிருந்து பிறிதொருவருக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்படும். ஆனால் வைரஸ் அளவு கூடிய ஒருவருடன் சில நிமிடங்கள் முகக்கவசமின்றி உரையாடினாலேயே அந்த தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக மிக அதிகம்.

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையில் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையதாக தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்களில் வைரஸ் அளவு கூடியவர்கள் தொடர்பில் அடையாளப்படுத்தியே நாம் வழங்குகின்றோம். ஏனெனில் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு தொற்றுப் பரவுவதற்கான சாத்தியம் அதிகம், என்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பி.சி.ஆர். சோதனைகளை முன்னெடுப்பதில் முக்கியபங்காற்றுபவர் மூத்த விரிவுரையாளர் ஏ.முருகானந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## நல்லூரில்...

தப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தைத் தொகுதியில் வர்த்தக நிலையம் நடத்தி வருபவருக்கு கடந்த 12ஆம் திகதி தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவரது மனைவி, பிள்ளை, மாமன், மாமியார், மைத்துநர் ஆகியோர் வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மைத்துநர் திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வியாபாரம் மேற்கொள்பவர். இதனால் அவருக்கு அருகிலிருந்து மரக்கறி வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு மீண்டும் பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ,5)

## சிறுவனொருவன்...

மொன்று குளத்துக்குள் விழுந்ததில் அதில் பயணித்த 13 வயதுச் சிறுவன் உயிரிழந்தான். தந்தையும் மகளும் காணாமல் போயுள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 2 வயது சிறுமியும் அவரது தந்தையும் வாகனச் சாரதியுமான 37 வயதுடைய நபரும் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிறிதொரு சிறுவன் மீட்கப்பட்டுள்ளான். மல்லாவி - செல்வபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களே காணாமல்போயுள்ளனர். வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் வாகனம் வாவியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானமை தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-ரி4,26)

## யாழில்...

குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மருதனார்மடம் கொத்தணி 88 ஆக அதிகரித்துள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த 5பேர், சண்டிலிப்பாய், இளவாலை, அளவெட்டி, மல்லாகம், இணுவில் மற்றும் உடுவிலைச் சேர்ந்த தலா ஒருவருக்குமாக 11 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சண்டிலிப்பாயில் 17ஆம் திகதி தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பெண்ணின் தாய்க்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இணுவில் மற்றும் உடுவிலில், மருதனார்மடம் சந்தையில் கடை வைத்துள்ள தொற்றாளர்கள் இருவரின் தாய்மாருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அளவெட்டி மற்றும் மல்லாகத்தில் ஏற்கனவே தொற்றாளர்களாக இனம்காணப்பட்டவர்களின் உறவினர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## தனிமைப்படுத்தப்படாத...

காரி பிரிவுக்கு உட்பட்ட இளவாலைப் பகுதியில், வலி. வடக்குப் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் பணியாற்றி வரும் ஒருவருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவரது தாயார் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றார். அவரது கடைக்குரிய மரக்கறிகளை மருதனார்மடம் சந்தையிலிருந்து இவர் எடுத்து வருபவர்.

இவர் தனிமைப்படுத்தப்படாத நிலையில், வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுச் சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## யாழ்.நகரில்...

தது. நேற்று முன்தினம் காலை 8.30 தொடக்கம் நேற்றுக்காலை 8.30 வரையான நேரத்தில் இந்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று திணைக்களம் தெரிவித்தது. அதன்படி,

திருநெல்வேலியில் 66.4, அச்சுவேலி 49.3, பருத்தித்துறை 57.6, நயினாதீவு 33.1, யாழ். பண்ணை 58.0, நெடுந்தீவு 31.5, சாவகச்சேரி 37.0, தெல்லிப்பழை 22.5, அம்பன் 33.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி 43.1, ஆனையிறவு 36, அக்கராயன் 27.0, இரணைமடு 43.7 மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில், அலம்பில் 27.2, வள்ளிபுனம் 30.5, ஒட்டுசுட்டான் 32.5 மில்லிமீற்றர் என்று பதிவாகியுள்ளது. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சி தென்பகுதியின் காலி மாவட்டத்தில் 117.0 மில்லிமீற்றராகப் பதிவாகியுள்ளது. (து)

## தமிழ்த் தேசியக்...

யாழ்ப்பாணம், டிசெ. 20

அரசாலும் அதன் படைகளாலும் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் தமிழர் பிரச்சினைகள் சர்வதேச அரங்கில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். இலங்கையில் தற்போது ஆட்சி மாற்றம் இடம்பெற்றுள்ளமையால் இம்முறை ஜெனிவா விவகாரத்தை நாம் தக்க முறையில் கையாள வேண்டும். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் நேரில் பேசி இறுதி முடிவை எடுப்போம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் தொடர்பில் சர்வதேச சமூகத்தை தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஒன்றுபட்டுக் கையாள முயற்சிப்பது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று தீர்மானித்துள்ளது. இதற்காக அக்கட்சிகளுடன் தொடர்ந்து பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தீர்வு காண்பதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளது. இதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும். நாங்கள் முரண்பட்டு நின்றால் அது தெற்கு அரசியல்வாதிகளுக்குச் சாதகமாகப் போய்விடும். எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத்திலும் சர்வதேச ரீதியிலும் ஓரணியில் நின்று தமிழர்களின் உரிமைக்காக நீதிக்காகக் குரல் கொடுக்க வேண்டும், என்றார்.

### புதிய அரசமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிப்பது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரசிடம் சமர்ப்பிப்பதற்கென ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரனின் தலைமையில் மும்மொழிவு வரைவு பணி நடந்து வரும் நிலையில், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா), இரா.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோர்களுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் ரெலோவின் தேசிய அமைப்பாளர் குருசாமி சுரேந்திரன் ஆகியோரும் பங்குபற்றினர். (ஒ,22)

## தமிழ்...

கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என சிறைச்சாலையில் பொதுச் சுகாதாரப் பிரிவு கவனப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 48 தமிழ் அரசியல் கைதிகளும் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் ஜி மற்றும் எச் விடுதிகளில் 48 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். கொழும்பு நகரப் பகுதிகளிலும் சிறைச்சாலைகளிலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் கொரோனா தொற்றுக் காரணமாக நாம் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதிகளிலேயே எமக்கான சுயதனிமைப்படுத்தலைக் கடைப்பிடித்து வந்தோம்.

கடந்த இரண்டு வாரங்களாக அனைத்து அரசியல் கைதிகளுக்கும் கடும் காய்ச்சலுடன் உடல் உபாதைகள் ஏற்பட்டுள்ளன. நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) எமது விடுதிகளைச் சேர்ந்த சிலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என சிறைச்சாலையில் பொதுச் சுகாதாரப் பிரிவு கவனப்படுத்தியுள்ளது.

போதிய தொற்று நீக்கல் செயற்றிட்டம் மற்றும் ஊட்டச்சத்தான உணவு பராமரிப்பு இன்மைகளுக்கு மத்தியில் நாம் தொடர்ந்து விடுதிகளிலேயே சுயதனிமைப்படுத்தல் முறையை மேற்கொண்டு வருகின்றோம். நீண்டகாலம் சிறைத் தடுப்பிலுள்ள எம்மவர்களுள் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் வயதானவர்களும் இருப்பதனால் அரசியல் கைதிகள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம். இவ்வேளையில் அரசியல் கைதிகளான எமது விடுதலையை துரிதப்படுத்துவதுடன், எமது உடனடி உடல் நல மேம்பாட்டுக்கும் உதவி புரியுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரி நிற்கின்றோம், என்றுள்ளது. (ஒ,5)

## மேலும் அறுவர் சாவு கொரோனா காவு 171

கொழும்பு, டிசெ. 20

கொரோனாத் தொற்றால் மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார். மூன்று ஆண்களும், மூன்று பெண்களுமே இவ்வாறு சாவடைந்துள்ளனர்.

கொழும்பு 14 ஐச் சேர்ந்த 39 வயது பெண், வீரகுல பகுதியைச் சேர்ந்த 68 வயது ஆண், கொழும்பு 15 ஐச் சேர்ந்த 77 வயது ஆண், கொழும்பு 10 ஐச் சேர்ந்த 76 வயது ஆண், கிரிவத்துட்டுவ பகுதியைச் சேர்ந்த 88 வயது பெண், பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 83 வயது பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். கொரோனாத் தொற்றால் இதுவரை 171பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் 158 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,22)

# 36 ஓட்டங்களில் மடிந்த இந்தியா

## ஆஸி அபார வெற்றி




ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இன்னிங்ஸில் வெறும் 36 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியடைந்தது இந்திய அணி.

இந்த ஆட்டம் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 244 ஓட்டங்ளைப் பெற்றது. ஆஸ்திரேலிய அணி 191 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 53 ஓட்டங்கள் முன்னிலையுடன் நேற்றுக் களமிறங்கயது இந்திய அணி. அந்த அணியின் இலக்குகள் பொலபொலவென சரிந்தன. எந்தவொரு வீரரும் இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைப் பெற முடியவில்லை. அகர்வால் பெற்ற 9 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். புஜாரா, ரகானே, அஸ்வின் மூவரும் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். கோலி வெறும் 4 ஓட்டங்களைப் பெற்றார். இதையடுத்து 36 ஓட்டங்களில் இந்திய அணி 9 இலக்குகளை இழந்திருந்தபோது சமி காயமடைந்து வெளியேறியதை அடுத்து இந்திய அணியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் ஹேசில்வூட் 5 இலக்குகளையும், கம்மின்ஸ் 4 இலக்குகளையும் வீழ்த்தினர். 90 ஓட்டங்கள் இலக்காக ஆஸிக்கு நிர்ணயிக்கப்பட நிலையில் அந்த அணி 2 இலக்குகளை இழந்து வென்றது. (ம)

**வீடு வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில்
10 அறைகளுடன் கூடிய மாடிவீடு
வாடகைக்குண்டு.
(நிறுவனங்களுக்கு உகந்தது)
076 035 3492


**கணிதம்** A.K.யசிந்தன்
**கல்வியாண்டு - 2021**
தரம் - 06 - O/L வரை Zoom மூலம்
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
யாழ்நகர் - 077 188 2518
(வெளி மாவட்ட மாணவர்களும் பங்குபற்றமுடியும்)

# மரண அறிவித்தல்

## அமரர் வைத்திலிங்கம் சிவலிங்கம்

(முன்னாள் பிரபல வர்த்தகர் - சரஸ்வதி ஸ்ரோர்ஸ், கிராண்ட்பாஸ்)

**தோற்றம்: 15.09.1936** **மறைவு: 19.12.2020**



காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகவும், முல்லை வீதி, உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவலிங்கம் அவர்கள் 19.12.2020 சனிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னரியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சிவயோகம் மற்றும் சிவகாமசுந்தரி, சிவகலை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவனேஸ்வரி, தவராசா (S.தவா-யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி கணக்கீட்டு ஆசிரியர்) சிவரஞ்சினி ஆகியோரின் அன்பு தந்தையும், சிவகுமார் (சிவா-உடையார்கட்டு), ஜெயமாலினி, சிவநாதன் (நாதன் அரைக்கும் ஆலை-உடையார்கட்டு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரி, கணநாதன் (கொமர்ஷல் வங்கி - முள்ளியவளை) கணபாலன், பாலகீர்த்தனா, கஜன், ரஜீவன், ரதீஸ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கரியைகளுக்காக காலை 8.00 மணியளவில் வெள்ளப்பள்ளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

APC முன்பாக, உடையார்கட்டு வடக்கு,
உடையார்கட்டு,
T.P: தவா - 077 239 5858, நேசம் - 077 119 3421,
நாதன் - 077 941 8347

தகவல் :
**குடும்பத்தினர்.**

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்நகர் பகுதியில் **கொட்டல்/ தங்குமிடம்** நடத்துவதற்கு ஏற்ற வீடு தேவை. தற்போது **மூடப்பட்டுள்ள தங்குமிட உரிமையாளர்களும்** தொடர்புகொள்ளலாம்
077 515 9448

**காணி விற்பனைக்கு**

இருபாலை கிழக்கு C.C. பாட சாலை வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவை இல்லை)
பரப்பு - 5 லட்சம்
**076 640 0974, 077 805 1655**

**மாபிள்ஸ்**

ரெறாசோ (Terrasso) மாபிள் பதித்தல்
கிறனைற் (Granite) சமையலறைத் தட்டு, நில வேலைகள்
நவீன முறையில் செய்து தரப்படும்
Since-1952
**தொல்புரம்.** **தொடர்பு: 021 225 0186, 077 355 3372, 077 630 6733**

**பணிநிலை வேண்டுகை**

**யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள மருந்தக மொத்த விற்பனை நிலையத்திற்கு (Whole Sale Dealer) மருந்தாளர் (Pharmasist)** தேவை. விரும்புபவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளவும்.
077 722 2127, 075 943 8439

**துரித பொதிகள் சேவை**

DHL வெளிநாடுகளுக்கு 3-5 நாட்களில் தபால்கள் மற்றும் பொதிகள் அனுப்பிவைக்கப்படும்.
**திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd**
**321, K.K.S. Road, Jaffna. 46, Adiyapatham Road, Thirunelvely.**
0777554528, 021 222 7835

**ஏசியன்** தளபாட நிலையத்தின்
**மாபெரும் மலிவு விற்பனை**

1. சோபா
3+1+1 - 37900/=
3+2+1 - 48900/=


2. மெத்தை (D/L)
6x3 - 3000/=
6x4 - 4000/=

3. 6 கதிரை ரீப்போ
4760/=

4. 6x3 மரகண்ணாடி
அலுமாரி 20950/=

ஆனைபந்தி சந்திக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில்
(நாவலர் றோட்)
076 821 9414, 076 821 9416

# மரண அறிவித்தல்



## அமரர் வேலாயுதம் தம்பியப்பா

(யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஓய்வுநிலை மேற்பார்வையாளர்-ஓவசியர்)

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தம்பியப்பா அவர்கள் 19.12.2020 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா புஸ்பமலர் ஆகியோரின் மருமகனும், புகழிறைவாணியின் அன்புக் கணவரும், ஜெயகோபி (ஆசிரியர், வவு/மாதர் பனிக்கர் மகிழங்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் புதுக்குடியிருப்பு) கோமளரூபி, இராஜசியாமளரூபி, லலிதசங்கர் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வெலிஓயா பிரதேச செயலகம்) மோகனராஜரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நாகபரமேஸ்வரி, தேவராசா, பாக்கியலக்சுமி, காலஞ்சென்ற யோகேஸ்வரி, சேனாதிராசா (ஓய்வுநிலை உத்தியோகத்தர் மதுவரித் திணைக்களம்) தங்கராசா, காலஞ்சென்ற விஜயலக்சுமி, இராசலக்சுமி (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்) ஆகியோரின் சகோதரனும், துசர்சன் (சவுதி அரேபியா), துர்சன் (Call Taxi) ஆகியோரின் மாமனாரும், அஷ்விகாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணிக்கு கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**த.ஜெயகோபி - 077 441 4326**
**கோப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மருதனார்மடம் சந்தையிலே மலிவு விலையிலே
உருக்கொண்டு ஆடுதாம் கொரோனா – சுருக்கென்டு
தம்மிக்கவிடம் பாணி மருந்தை பாங்காய் வாங்கி வந்து
பம்மியோடச் செய்திடம்மா பவித்திரா வன்னித்தாயே!

*கொரோனாச் சித்தர்*

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 மார்கழி 05 ஞாயிற்றுக்கிழமை 20.12.2020) சிகரம் : 27

## மனம் திறக்கிறார் யாழ். மாவட்டச் செயலர் மகேசன்





# உடுவில் முடக்கத்தை நீக்கியது மேலிடத்து உத்தரவாலா?

○ சந்திப்பு: பொ.சோபிகா

**கே: நீங்கள் யாழ்.மாவட்ட அரச அதிபராக பதவி யேற்ற காலம் முதல் இப்போதுவரை தொடர்ச்சியாக கொரோனா, தேர்தல், வறட்சி, புயல் என்று எல்லாம் வரிசை கட்டிக் கொண்டு வந்தன, வருகின்றன. இவை உங்களுக்கு நிர்வாக ரீதி யாக பெரும் சவால்களாக உணர் கிறீர்களா?**

ப: நான் கடந்த காலத்தில் இதைவிடப் பெரும் சவால்களுக்கு மத்தி யில் பணிபுரிந்தவன். இவை அனைத்தும் என்னால் முறிய டிக்கக்கூடிய சவால்கள் தான். நிர்வாக ரீதியில் பார்க்கும்போது பெரும் சவால்கள் இல்லை. ஆனால்தற்போதுள்ள கொரோனா எமது மாவட்டத்துக்கு மட்டு மல்ல உலகத்துக்கே பெரும் சவாலான விடயம். மேற்படி பிரச்சினைகளை சவாலாகவே அணுகுகிறேன். எமக்கென வரையறுக்கப்பட்ட வளங்களுடன் மக்களை பாதுகாக்கக்கூடிய வேலைத்திட்டங் களை மேற்கொண்டு வருகிறோம்

தற்போது பருவ மழைக்காலம். மக்களால் அடுத்த கட்டத்துக்கு நகர முடியவில்லை. தேவை கள் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன. அவற்றை நிறைவேற்ற எம்மாலான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்கிறோம். கொரோனாப் பிரச்சனையால் எமது ஆளணியை மட்டுப்ப டுத்த வேண்டிய தேவை உள்ளது.

தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் எமக்கு கொள்கை வழிகாட்டல் உள்ளது. அதன் படி செயற்படுகிறோம். இயலாத நிலை தற் போது வரவில்லை. மற்றைய தரப்புகளுடன் இணைந்து, குழு வேலையாகவே இந்தச் சவால் களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நான் மட்டும் தனியாக வேலை செய்ய முடியாது. ஏனைய துறைகளின் ஒத்துழைப்பும் எமக்கு தேவை. ஏனெனில் நாம் எந்த அளவுக்கு மக்களுக்குச் சேவை செய்தா லும் அவர்களை 100 வீதம் திருப்திப்படுத்த முடியாதுள்ளது.


அதற்குப் பல காரணங்களும் உள்ளன. மக்க ளின் பிரச்சினைகளை சரியாக இனங்கண்டு செயற்பட்டால் சவால்களை இலகுவாக எதிர் கொள்ளலாம். அனைத்துத் துறையினரும் தமது பணிகளை சிறப்பாக செய்தால் மக்களின் பிரச்சனைகளை இலகு வாகத் தீர்க்க முடியும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரு கிறேன்.


**கே: யாழ். மாவட்டத்தில் தற்போது கொரோ னாத் தொற்று அதிக ரித்து வருகிறது. அண்மையில் மரு தனார்மட சந்தை வியாபாரிகளுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்ட மையைத் தொடர்ந்து உடுவில் பகுதி முடக்கப்பட்டது .எனினும் அந்த முடக்கம் ஏன் அடுத்த நாளே நீக்கப்பட்டது? மேலிடத்து உத்த ரவா? தொற்றாளர் கண்டுபிடிக்கப் பட்ட இடங்களையாவது முடக்கி இருக்கலாமே? காரணம் என்ன?**

ப: யாழ் மாவட்டத்தில் முதன் முத லாக கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டபோது யாழ். மாவட்டம் முழுவதும் முடக்கப்பட்டது. ஆனால் தற்போது தேசிய மட்டத்தில் தீர்மா னம் ஒன்று உள்ளது, தொற்றாளர் இனங்காணப் பட்டால் அந்தச் சுற்றாடல் மூடப்படுவதென. ஏனெனில் தற்போது தனிமைப்படுத்தல் நிலை யங்கள் இல்லை. சந்தேகத்துக்கிடமானவர்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படுகின் றனர். அதனடிப்படையில் அண்மை யில் மருதனார்மட தொற்றாளர் எழு மாற்று பரிசோதனையில் இனங்காணப் பட்டார்.

4






# சொல்லும் செயலும் தமிழரசியலும்?

○ நிலாந்தன்

ஈழவேந்தன் இப்பொழுது கனடாவில் இருக்கிறார். அவர் முன்பு நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த பொழுது கிளிநொச்சியில் ஒரு சர்ச்சை எழுந்தது. ஈழவேந்தன் நாடாளுமன்றத்தில் ஆவேசமாக எதிர்த்தரப்பைச் சாடுவார். ஆனால் நாடாளுமன்ற' கன்ரீனில்' யாரை எதிர்த்து பேசினாரோ அவரோடு உட்கார்ந்திருந்து தேநீர் அருந்துவாராம். இது தொடர்பில் 'கிளிநொச்சிக்கு' யாரோ முறைப்பாடு செய்திருக்கிறார்கள். இக்காலகட்டத்தில் ஈழவேந்தன் என்னைச் சந்தித்த பொழுது நான் அவரிடம் சொன்னேன் "மிதவாத அரசியல் என்றால் அப்படித்தான். ஆயுதப் போராட்டம் எதிரியின் இருப்பை அழிக்க நினைக்கும். ஆனால் மிதவாத அரசியல் அப்படியல்ல. எதிரியின் இருப்பை ஏற்றுக்கொள்ளும். பல்வகைமையின் மீது கட்டியெழுப்பப்படுவதே ஜனநாயக அரசியல். எனவே இதில் அரசியல் எதிரியோடு அமர்ந்து தேநீர் அருந்துவதை சபை நாகரீகமாக ஏற்றுக்கொள்ள முடியும்" என்று.

ஆனால் அரசியல் எதிரிகளோடு தேநீர் அருந்துவது வேறு, வாக்கெடுப்பின்போது எதிர்த்து வாக்களிப்பது வேறு. வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து ஆவேசமாக உரையாற்றிவிட்டு, அந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்காமல் விடுவது வேறு. ஏனெனில் நாடாளுமன்ற அரசியலில் உரைகளுக்கும் முக்கியத்துவம் உண்டு. அதைவிட முக்கியத்துவம் வாக்கெடுப்புக்கு உண்டு. வாக்கெடுப்பில் யார் பக்கம் நிற்கிறோம், யாரை ஆதரிக்கிறோம், யாரை எதிர்த்து வாக்களிக்கிறோம் என்பதில் குறிப்பிட்ட கட்சியின் கொள்கை நிலைப்பாடு தெளிவாக வெளிப்படுத்தப்படும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் நடந்து முடிந்த வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கூட்டமைப்பும், விக்னேஸ்வரனும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விட்டது ஒரு அகமுரண். இது தொடர்பில் கூட்டமைப்பு பின்வருமாறு விளக்கம். கூறுகிறது" கோத்தாபய அரசின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் மிக மோசமானது என்பதை அது சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே நாம் ஊடகங்களுக்குத் தெரிவித்து விட்டோம். அதன் பின்னர் சபையில் நடைபெற்ற இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போதும், அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தின்போதும் அதை எதிர்த்து நாம் உரையாற்றினோம். கோத்தாபய அரசின் மிக மோசமான வரவு - செலவுத் திட்டத்தால் எந்தப் பயனும் தமிழருக்கு இல்லை. அதே வேளை, அது சபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறியே தீரும் என்பதும் எங்களுக்கு ஏற்கனவே தெரியும். இந்த நிலையில், வாக்கெடுப்பில் நாம் பங்கேற்று அதை எதிர்ப்பதால் எதுவும் நடக்கபோவதும் இல்லை. அதனால்தான் வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின்போதும் நாம் பங்கேற்கவில்லை..." இதுகூட்டமைப்பின் கருத்து.


விக்னேஸ்வரன், அவருடைய கூட்டுக்குள் அவர் இது தொடர்பில் கலந்துபேசி முடிவெடுக்கவில்லை என்றே தெரிகிறது. அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையை விடாமலேவிட்டிருக்கலாம். அவர் பேசிய பேச்சுக்களின் புனிதத்தை அவரே கெடுத்துக்கொண்டார். அவர் பேசிய பேச்சுக்களை அவரே தோற்கடித்துவிட்டார். அப்படித்தான் கூட்ட மைப்பினரும். கூட்டமைப்பினர் கடந்த 10 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் ஏகபோகம் வகித்த காலகட்டத்தில் ஆற்றிய உரைகளோடு ஒப்பிடுகையில் விக்னேஸ்வரனும் ,கஜேந்திரகுமாரும் கூர்மையாகவும் ஆழமாகவும் பேசினார்கள். இதனால் தூண்டப்பட்டு சிறீதரன் ,சாணக்கியன் உட்பட ஏனையவர்களும் மாற்று அணியை சேர்ந்தவர்களின் பாணியிலேயே உரத்துப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டது.

குறிப்பாக சாணக்கியனின் பேச்சு ஆயிரக்கணக் கானவர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது; பாராட்டப்பட்டிருக்கிறது. மும்மொழிப் புலமை மிக்க ஒரு இளம் தலைவர் உருவாக்கிவிட்டார் என்று பலரும் கொண்டாடினார்கள். சாணக்கியனின் மும்மொழிப் புலமை பலரையும் கவர்ந்தது. சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் கூறிய பதில் பரவலாகப் பாராட்டப்பட்டது. ஆனால் சாணக்கியனும் சிறீதரனும் ஏனையவர்களும் ஆற்றிய உரைகளின் புனிதம் தம்முடைய கட்சி எடுத்த நிலைப்பாட்டால் கெடுக்கப்பட்டுவிட்டது. அவர்களும் அவர்களுடைய உரைகளைத் தோற்கடித்து விட்டார்கள். கடந்த நாடாளுமன்றத்திலும் சிறீதரன் இவ்வாறு ஒரு வரவு செலவுத் திட்டத்தில் வாக்களித்து விட்டு மனச்சாட்சியை இழந்து வாக்களித்தோம் என்ற தொனிப்பட விளக்கம் கூறியிருந்தார். இப்பொழுதும் அதே விளக்கம் தானா?

இது விடயத்தில் கூட்டமைப்பு பங்காளிக்கட்சிகளோடு கலந்து பேசி முடிவெடுக்க வில்லை என்று ஒரு குற்றச்சாட்டும் உண்டு. ரெலோ இயக்கம் பாதுகாப்பு அமைச்சின் மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்தது.

வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றால் அதன் அர்த்தம் அதை எதிர்க்கவும் விரும்பவில்லை, ஆதரிக்கவும் விரும்புவில்லை என்பதே. அதாவது இரண்டும் கெட்டான் நிலை. மேலும் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் நடந்த உத்தியோகபூர்வ விருந்துபசாரத்தில் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தர் மட்டும் கலந்து கொண்டிருக்கிறார். இதன் மூலம் கூட்டமைப்பு தனது வாக்காளர்களுக்கு வெளிப்படுத்தும் செய்தி என்ன?

அரசாங்கத்தை எதிர்ப்பதால் ஒரு பயனும் இல்லை. அவர்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் வரவு



- செலவுத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவார்கள் என்று கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் கூறுகின்றார்கள். எதிர்ப்பதால் பலனில்லை என்றால் எதிர்த்துப் பேசி மட்டும் என்ன பலன்? அடுத்த நாள் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வருவதா? அல்லது வாக்கு வங்கியைப் பாதுகாப்பதா? ஆவேசமாக எதிர்த்து உரை நிகழ்த்தியபின் வாக்கெடுப்பில் எதிர்க்கவில்லை என்பது குழப்பமான நிலைப்பாடே. இதுவிடயத்தில் கூட்டமைப்பை விடவும் விக்னேஸ்வரனுக்கே பொறுப்பு அதிகம். தனது அரசியல் அடித்தளத்தை அதிக பட்சம் அறநெறிகளின் மீது கட்டியெழுப்பியிருக்கும் அவர், கூட்டமைப்பின் நேர்மைக் குறைவைச் சுட்டிக்காட்டியே அந்தக் கட்சியிலிருந்து விலகினார். எனவே இந்த விடயத்தில் அவர் தன்னுடைய நிலைப்பாட்டை தன்னுடைய பேச்சுக்கு முரண்பாடு இல்லாத விதத்தில் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. இது கஜேந்திரகுமார் அணி அவருக்கு எதிராக வைக்கும் குற்றச்சாட்டுகளுக்களை நிரூபிப்பதாக அமைந்து விடுமா?

இது விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒன்றுதான் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே வேறுபாடு இல்லாத ஒரு முடிவை எடுத்து எதிர்த்து வாக்களித்தது. எனவே அது பேசிய பேச்சுக்கள் இப்பொழுதும் அவற்றின் புனிதத்தை இழக்கவில்லை. அதேசமயம் கூட்டமைப்பு மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் பேச்சுக்கும் செயலுக்கும் இடையில் இருக்கும் முரண்பாடு பின்வரும். அடிப்படைக் கேள்விகளை எழுப்புகின்றது.

முதலாவது கேள்வி, இவ்வாறு சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் வேறுபாடு உள்ள ஓர் அரசியல் சூழ்நிலையில் கொள்கை அடிப்படையிலான கூட்டுக்களை உடனடிக்குக் கற்பனை செய்ய முடியுமா? கேள்வி இரண்டு, கொள்கை அடிப்படையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பது கடந்த பத்தாண்டுகளில் நிரூ பிக்கப்பட்ட ஒன்று. எனவே குறைந்த பட்சம் விவகாரமையக் கூட்டுக் களையாவது உருவாக்கலாம் என்று சிந்திக்கும் ஒரு பின்னணியில் அதற்குரிய வாய்ப்புகளும் குறைவா?

ஆம். வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பில் தமிழ் கட்சிகள் நடந்துகொண்ட விதம் கொள்கை ரீதியாகத் தமிழ் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதில் இருக்கக்கூடிய சவால்களின் பருமனைக் காட்டுகிறது என்பது மட்டுமல்ல விவகாரங்களை மையப்படுத்தி தந்திரோபாயக் கூட்டுக்களை அல்லது சமயோசிதக் கூட்டுக்களை உருவாக்குவதில் இருக்கக்கூடிய வரையறைகளையும் அது உணர்த்துகிறது. எனினும் இப்பொழுதுதான் விவகாரமையக் கூட்டுக்களைக் கட்டியெழுப்புவதற்கான தேவை அதிகரித்திருக்கிறது எனலாம். ஏனெனில் வழுவழுக்கும் கட்சிகளை ஏதாவது ஒரு பொறுப்புக் கூறும் பொறிமுறைக்குள் கட்டிப்போட வேண்டிய தேவை முன்னரை விட இப்போது அதிகரிப்பதை இது உணர்த்துகிறதா?

புதியயாப்புருவாக்கம்; ஐ.நாவை எதிர் கொள்ளல் உள்ளிட்ட வெளிவிவகார நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் ஒரு பொதுக்கட்டமைப்பும் பொதுப்பொறிமுறையும் அவசியம். விக்னேஸ்வரன் தனது அறிக்கையில் கூறுவது போல அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் அவ்வாறு ஒரு பொதுப்பொறிமுறை அவசியம். அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்காமல் விடுவதால் அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுவித்து விடும் என்று நம்புவது அரசியல் அப்பாவித்தனம்.

அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வரப் போவதாக ஒரு தோற்றத்தைக் காட்டுகிறது. இந்த யாப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளடக்கப்பட வேண்டும். ஆனால் அதுவிடயத்தில் தமிழ்த்தரப்பு ஒருமித்த நிலைப்பாட்டோடு இல்லை. எனவே தீர்வு விடயத்திலும் வெளிவிவகாரக் கட்டமைப்பு உட்பட முக்கிய விவகாரங்கள் தொடர்பிலும் விவகாரமையக் கூட்டுக்களை உருவாக்க வேண்டும். அதன் மூலம் தனியோட்டம் ஓடக்கூடிய கட்சிகளை பொறுப்புக் கூறவைக்க வேண்டும். இல்லையென்றால் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தீர்வை முன்வைக்கும். ஒவ்வொரு கட்சியும் வருகிற வெளிநாட்டு தூதுவரோடு ஒவ்வொரு விதமாகக் கதைக்கும். வரும் மார்ச் மாதம் நடக்கவிருக்கும் ஜெனிவாக் கூட்டத்தொடரிலும் தமிழ்த் தரப்பு தனித்தனி நிலைப்பாட்டோடு அங்கு போய் நிற்கும். இது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இல்லை என்ற செய்தியை வெளித் தரப்புக்கு கொடுக்கும். அதுமட்டுமல்ல அதிக தொகை பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டமைப்பு தனியோட்டம் ஓடித் தமிழ் மக்களையும் தோற்கடித்து தன்னையும் தோற்கடித்து விடும்.


எனவே வரவு -செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு என்பது ஒருபுறம் தமிழ் ஐக்கியம் குறித்த சந்தேகங்களை ,அவநம்பிக்கைகளை அதிகப்படுத்தியிருந்தாலும் கூட இன்னொருபுறம் குறைந்தபட்சம் விவகார மையக் கூட்டுக்களையாவது உடனடிக்கு உருவாக்க வேண்டிய கட்டாயத்தை நமக்கு உணர்த்தியிருக்கிறது என்பதே சரி.





# ஈழத் தமிழர்கள் களத்தில் இறங்கவேண்டிய தருணம்

அ.நிக்ஸன்



மகிந்த ராஜபக்சவின் ஆட்சியைக் கவிழ்த்து 2015ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தை அமைப்பதற்குப் பாடுபட்டிருந்த பொது அமைப்புகளில் ஒன்றான தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா, இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை சிறந்த தலைவர் என்ற தொனியில் வெளிப்படுத்தி அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு நம்பிக்கையளிக்க ஆரம்பித்துள்ளார்.

இலங்கைத் தீவில் வாழும் சிறுபான்மை மக்கள் என்ற சொல்லாடல் மூலம் அதாவது தமிழ், முஸ்லிம் மக்கள் என்று குறிப்பிடாமல் சிறுபான்மை மக்களின் சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணக்கூடிய வகையில் கோத்தாபயவுடன் பேச்சு நடத்த முடியும் என்ற கருத்தை ஜெகான் பெரேரா முன்வைக்கிறார்.

சமாதானப் பேரவையின் இணையத் தளத்திலும் சமூக வலைத்தளத்திலும் ராஜபக்ச அரசாங்கம் தொடர்பாக ஜெகான் பெரேரா எழுதியுள்ள விடயங்களில், கோத்தாபய ராஜபக்சவின் அல்லது 2015ஆம் ஆண்டுக்கு முன்னரான மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் நடத்தப்பட்ட இறுதிப் போர், ஜனநாயக விரோத செயற்பாடுகள், மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்கள், குறித்த விமர்சனங்களைத் தவிர்த்து 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவிக்கு வந்த ராஜபக்சக்களின் ஆட்சி பற்றிய செயற் திறன்கள் பற்றியே புகழாரம் சூட்டப்படுகின்றது.

சர்வதேச பயங்கரவாத செயற்பாடுகளைத் தடுப்பது என்ற போர்வையில் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு எதிராகச் செயற்பட்டு வரும் பேராசிரியர் றொகான் குணரட்ன, 2006ஆம் ஆண்டில் இருந்து போரை நடத்துவதற்கு கோத்தாபய ராஜபக்சவுக்கு சிறப்பு ஆலோசகராக விளங்கியிருந்தார். தற்போது ஜனாதிபதியான பின்னரும் அவர் ஆலோசகராகச் செயற்பட்டு வருகின்றார். இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளை றொகான் குணரட்ண மேற்கொண்டிருந்தார்.

ஆனால் இப்போது இறுதிப் போரின் போது சர்வதேச ரீதியாக இலங்கைக்கு ஏற்பட்டிருந்த அவப் பெயரை நீக்கி, இலங்கை ஓர் ஜனநாயக நாடு, மனித உரிமைகளைப் பேணும் நாடு என்ற தோற்றப்பாடுகளைக் காண்பிக்க ஜெகான் பெரேரா முற்படுகிறாரா என்ற கேள்வி எழுகின்றது.

றொகான் குணரட்ண போன்ற சிங்கள பௌத்த தேசியவாதிகளோடு முரண்பட்டிருந்த ஜெகான் பெரேராவின் அண்மைய நடவடிக்கைகள், ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலையைப் பயங்கரவாத கோசமாகப் பார்க்க வேண்டும் என்ற கோணத்தில் அமைந்தவை என்றே நோக்க முடிகின்றது.

கடந்த நவம்பர் மாதம் 'சண்டே ஒப்சேவர்' ஆங்கிலப் பத்திரிகைக்கு நேர்காணல் வழங்கியிருந்த பேராசிரியர் றொகான் குணரட்ண, விடுதலைப் புலிகளை ஐக்கிய நாடுகள் சபை தடை செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை இலங்கை முன்வைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு, கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் ஆண்டுதோறும் இடம்பெறும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும், சிவப்பு, மஞ்சள் கொடிகள் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டுமெனவும் றொகான் குணரட்ண வலியுறுத்தியிருந்தார். அமெரிக்க அரசின் நீதித் துறைக்கு ஆலோசகராகப் பதவி வகித்திருந்த றொகான் குணரட்ண, இவ்வாறான ஆலோசனைகளை முன் வைக்கும்போது, நிச்சயமாக ஐ.நா. அதில் கரிசனை செலுத்தும் நிலையுண்டு.

காரணம் எதுவுமேயின்றி இந்தியாவைத் திருப்பித்திப்படுத்தும் நோக்கில் 1997ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்துக்கு அமெரிக்கா தடை விதித்திருந்தது. அந்தத் தடை இன்றுவரை நீடிக்கிறது. இந்தப் பின்னணியில் அதுவும் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் சூழலில், ஐ.நா. புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறார் றொகான் குணரட்ண.

அதற்கு வலுச்சேர்க்கும் வகையில், 1996ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்த தீர்வுப் பொதியை புலிகள் குழப்பியடித்தனர் என்றும், இல்லையேல் அன்றே இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்கும் என்ற தொனியிலும் ஜெகான் பெரேரா சமூக வலைத்தளத்தில் கருத்துக்களைப் பகிர்கின்றார். அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளோடு இலங்கை உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலேயே கொழும்பில் இயங்கும் மாற்றுக்கொள்கை மையம், தேசிய சமாதானப் பேரவை போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

> **2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தங்களை மிதவாதிகளாகக் காண்பித்த சிங்களப் புத்திஜீவிகள் எனப்படுவோர் அன்று தீவிர பௌத்த தேசியவாதிகளாகக் காண்பித்தவர்களோடு இன்று சமரசம் செய்து, இலங்கை ஒற்றையாட்சி அரசு என்ற ஒரே புள்ளியில் சங்கமித்துள்ளனர்.**

2002ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றபோது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராகவும் சமாதானப் பேச்சுக்கான முன்னோடியாகவும் தன்னைக் காண்பித்திருந்த மிலிந்த மொறகொட, இன்று ராஜபக்சக்களின் விசுவாசியாகவும், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் பதவி வகிக்கிறார். இதே மிலிந்த மொறகொடதான், இனப் பிரச்சினைத் தீர்வுக்காகக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்ற ஆலோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

மிலிந்த மொறகொடவின் ஏற்பாட்டிலேயே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் சென்ற ஒக்ரோபர் மாத இறுதியில் கொழும்புக்கும் வந்து சென்றிருந்தார். 2002 ஆம் ஆண்டு சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட்டிருந்த நோர்வேயும் இன்று இலங்கையின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு கதை சொல்கிறது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தங்களை மிதவாதிகளாகக் காண்பித்த சிங்களப் புத்திஜீவிகள் எனப்படுவோர், அன்று தீவிர பௌத்த தேசியவாதிகளாகக் காண்பித்தவர்களோடு இன்று சமரசம் செய்து, இலங்கை ஒற்றையாட்சி அரசு என்ற ஒரே புள்ளியில் சங்கமித்துள்ளனர். 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் கூட்டுத்தாபனத்தின் 480 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி ஒப்பந்தம், சென்ற வியாழக்கிழமை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. பௌத்த தேசியவாதிகளின் எதிர்ப்பாலேயே இந்த ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டது என்று காண்பித்து மிகவும் கடுமையான சில நிபந்தனைகளை இலங்கை அமெரிக்காவிடம் விதிக்கலாம். மைக் பொம்பியோ கொழும்புக்கு வந்தபோது இலங்கையிடம் இருந்து சாதகமான கருத்துக்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில், தற்போது எம்.எம்.சி. எனப்படும் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டுள்ளதால், இலங்கையின் முக்கியமான நிபந்தனை ஒன்றை அமெரிக்கா ஏற்கும் நிலைமை வரலாம்.

பேராசிரியர் றொகான் குணரட்ண பரிந்துரை செய்ததுபோன்று, புலிகளை ஐ.நா தடை செய்ய வேண்டும் என்பதும், போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் போன்ற சர்வதேச விசாரணைகளில் இருந்து தங்களை விடுவிக்க வேண்டுமெனவும் இலங்கை கேட்கக்கூடும். அதற்கு இந்தியாவும் ஒத்துழைக்கலாம். ஏனெனில், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய கொள்கலன் இறங்குதுறையை அபிவிருத்தி செய்ய இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ராஜபக்சவின் அமைச்சரவை சென்ற திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளது. இந்தோ - பசுபிக் பாதுகாப்பு மற்றும் எம்.சி.சி. எனப்படும் ஒப்பந்தம் அல்லது அதற்கு ஈடான மற்றுமொரு ஒப்பந்தத்தை அமெரிக்காவுடன் இலங்கை செய்ய வேண்டுமானால், ஐ.நாவில் புலிகளைத் தடை செய்வது அல்லது, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை புலிகள் மீது விதித்துள்ள தடைகளை நீக்காமல் தொடருவது போன்ற நடவடிக்கைகளை அமெரிக்கா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எழலாம்.

30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதில் இருந்து ராஜபக்ச அரசாங்கம் விலகியுள்ள நிலையில், அதை மீண்டும் செயற்படுத்த அல்லது மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரில் புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றத் தனது நட்பு நாடுகள் மூலமாக அமெரிக்க முற்படவும் கூடும். ஈழத்தமிழர் விவகாரத்தைப் பயன்படுத்தி இலங்கைக்கு கொஞ்சம் அழுத்தம் கொடுத்தும் இலங்கை கேட்பதைச் செய்தும் தனது நலனை அமெரிக்கா பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களே அதிகம். அதில் இந்தியாவும் குளிர்காயும். இது பட்டறிவு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தோடு நெருக்கமாகவும் நம்பிக்கைக்குரிய நபர்களாகவும் செயற்பட்டு வரும் பேராசிரியர் றொகான் குணரட்ண, கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆலோசகராகவும் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும், பாலித ஹொகன்ன சீனாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் நியமிக்கப்பட்டிருப்பது, ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை தொடர்பான பேச்சுக்களை முற்றாகவே இல்லாதொழிப்பதற்கான இலங்கையின் மூலோபாயமாகும்.

இந்த மூலோபாயத்தையே இலங்கையில் அடுத்து வரும் சிங்கள ஆட்சியாளர்களும் கையாளுவர். அமெரிக்காவில் ஜனவரியில் பதவியேற்கவுள்ள ஜோ பைடன் நிர்வாகம், 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒபாமா நிர்வாகம், இலங்கை தொடர்பாகக் கையாண்ட அணுகுமுறைகளையே கையாளும் என்பதும் வெளிப்படை. ஜே பைடன் நிர்வாகம் ஜெனிவா மனித உரிமைச் சபையில் மீளவும் இணைந்து இலங்கைக்கு கடும் அழுத்தம் கொடுக்கும் என்றோ, குறைந்தபட்சம் போர்க் குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணை நடக்கும் என்றோ எதிர் பார்க்க முடியாது. ஆனால் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் ஒன்றுக்கான முன்மொழிவுக்கு ஈழத்தமிழர்கள் தயாராகி, இலங்கை மேற்கொண்ட குற்றங்கள் அனைத்தினதும் குற்றங்களுக்கான சர்வதேச நீதியைக் கோரத் தலைப்பட வேண்டும்.



**நாமும் சுகாதாரப்பகுதியினரும் இணைந்துதான் முடிவுகளை அறிவிப்போம் எமது அதிகார வரம்புக்கு உட்பட்ட வகையில்தான் அந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலிடத்து உத்தரவு என்பது சிலருடைய ஊகம்தான். அர்ப்பணிப்புடன் செயற்படும்போது இவ் வாறான கட்டுக்கதைகள் பரப்பப்படுவது வழமைதான்.**

(முன்பக்கத் தொடர்ச்சி)

தொற்றாளர்கள் அதிகமாகியிருப்பார்களோ என்ற எதிர்பார்ப்பிலேயே விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ரீதியில் அன்றைய தினம் குறித்த பிரதேசம் முடக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.
பின்னர் அவருடன் தொடர்புடையவர்களைப் பரிசோதனை செய்தபோது, பல்வேறு பிரதேசங்களில் நாம் எதிர்பார்த்ததை விட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டார்கள். உடுவில் பிரதேசத்தில் அதைவிட குறைவானவர்களே இனங்காணப்பட்டனர். எனவே மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதாலேயே உடுவில் பகுதி முடக்கம் விடுவிக்கப்பட்டதுடன் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.
நாமும் சுகாதாரப்பகுதியினரும் இணைந்து தான் முடிவுகளை அறிவிப்போம். எமது அதிகார வரம்புக்கு உட்பட்ட வகையில்தான் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டது, மேலிடத்து உத்தரவு என்பது சிலருடைய ஊகம்தான். அர்ப்பணிப்புடன் செயற்படும்போது இவ்வாறான கட்டுக்கதைகள் பரப்பப்படுவது வழமைதான்.

**கே: சுகாதாரத்துறை, மாவட்டச் செயலகம் என்பவற்றுக்கிடையே சரியான தொடர் பாடலின்மை அல்லது இணைந்து செயற்படாமை (முடக்கம் பின்னர் நீக்கம், தவறான தரவுகளை வெளியிடுதல் போன்ற) போன்ற காரணங்களால் சில நடவடிக்கைகளில் சிக்கல்கள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. அதன் உண்மைத்தன்மை என்ன?**

**ப:** எந்தத் துறையினருடனும் ஒரு முரண்பாடும் எமக்கு இல்லை. சுகாதா ரத்துறையினர் எழுத்துமூல அறிக்கைகளை எமக்குத் தருவார்கள். அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்வோம். மூன்று பிரிவாக இணைந்து செயற்படுகிறோம். மூன்று தரப்பினர்களுடைய அறிக்கைகள் சுகாதார அமைச்சின் சிபாரிசுடன் கொரோனாத் தடுப்புச் செயலணிக்கு அனுப்பி வைக்கப்படும். அதனடிப்படையில் மாகாண ரீதியிலான தீர்மானங்கள் எமக்கு அறிவிக்கப்படும். அதில் எமது மாவட்டத்துக்குரிய தகவல்களை நிர்வாகத்தினருக்கு அறிவிப்போம். எம்மை மீறி அறிவிக்கப்படும் தரவுகளுக்கும் நிகழ்வுகளுக்கும் நாம் பொறுப்பில்லை. தரவுகள் வெளியிடுவதில் சில தவறுகள் நடத்திருக்கலாம். அவை எம்முடன் சம்பந்தப்பட்டவையில்லை.

**கே: கடந்த வருடம் வீசிய அம்பான் புயல் அழிவுகளுக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை என குற்றம் சாட்டப்படுகிறதே? ஏனிந்த மிக நீண்ட இழுத்தடிப்பு?**

**ப:** அம்பான் புயல் அழிவுகளுக்கு வழங்க வேண்டியது, விசேடமான நிவாரணத்திட்டம். அது வழமையான நிவாரணத்திட்டம் இல்லை. உரிய தரப்பு அந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. மீன்பிடி அமைச்சரினால் தான் இந்தத் திட்டம் அமைச்சரவைக்கு கொண்டுசெல்லப்பட்டு அமைச்சரவை பத்திரத்துக்கு இரண்டாவது முறை தான் அனுமதி அளிக்கப்பட்டது, அந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு 3 தரப்புக்களுக்கு உள்ளது. விவசாய அமைச்சு, இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் மாவட்ட செயலகம் என்பன இணைந்து செயற்படவேண்டும்.
அதில் மாவட்டச்செயலகத்தின் பணி தான் தரவுகளை அனுப்பிவைத்தல். அதனை வைத்து எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய , பொருத்தமான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் நிவாரணம் வழங்கவேண்டு என்பதே .
பயிர் காப்புறுதிக்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளைத் தான் எதிர்பார்க்கிறார்கள். அதனால் எமது தரவுகளை சீர்படுத்த வேண்டிய தேவை இருந்தது. உரிய தரப்பினரிடம் விபரங்களை பெற்று தற்போது மீண்டும் நாம் அனுப்பிவைத்துள்ளோம். அந்தவகையில் அண்மையிலும் இது தொடர்பாக ஒரு கூட்டம் இடம்பெற்றது. இதற்குரிய நிதி, குறித்த அமைச்சுக்கு கிடைத்துள்ளதாக அறிய முடிகிறது. தாமதத்துக்கு காரணம் மூன்று தரப்பினரும் இணைந்து செயற்படுவதில் ஏற்பட்ட சில சிக்கல்களே. தற்போது இது தொடர்பாக ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பியுள்ளேன். விரைவில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என நம்புகிறேன்.

**கே: கடந்த வருடம் வீசிய அம்பான் அழிவுகளுக்கே நிவாரணம் இன்னும் கிடைக்காத போது நிவார்,புரேவிக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்குமா? அதற்கு ஏதும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளீர்களா?**


**ப:** இயற்கை அனர்த்தங்களுக்கு உடனடியாக சமைத்த உணவுகள் வழங்குவது வழக்கம் .அதை அனர்த்த முகாமைத்துவப் பிரிவினூடாக அனைத்துப் பிரதேசங்களுக்கும் வழங்கி வருகிறோம்.
தற்போது தொடர்ச்சியாக மக்கள் பாதிக்கப்பட்டு வருவதால் அனைத்துத் தரப்புக்களுடனும் ஒருங்கிணைந்து செயற்பட முயற்சி எடுத்துள்ளோம். மேலும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் , விவசாயிகளின் தரவுகள் மதிப்பிடப்பட்டு அந்தந்தத் துறையினருக்கு அறிவிக்கப்படும். அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

## புதிர் 23




○ மாயன்

பவளராணியின் சொற்களைக் கேட்டதும் மீண்டும் ஒருமுறை கீழே பார்த்தான் தீபவர்மன். மிக வேகமாக அவன் விரைந்து கொண்டிருப்பது தெரிந்தது. தான் துயில் கொண்ட மஞ்சத்தோடு சேர்த்து , பறக்கும் புஷ்பக விமானத்தில் ஏற்றியிருக்கிறார்கள் போலும் என நினைத்துக் கொண்டான். புஷ்பக விமானத்தை நான்கு அன்னப்பட்சிகள் சுமந்தபடி பறந்து கொண்டிருந்தன.
" இன்னும் எத்தனை நாழிகைகள் பயணித்தால் அற்புதத் தீவை அடைய முடியும்?" எனக் கேட்டான் தீபவர்மன். " இன்னும் இரு நாழிகைகளுக்குள் அடைந்து விடலாம், ஆனால் அதுவரை உயிரோடு இருக்க வேண்டுமே" என்று பீடிகை போட்டாள் அவள்.
" ஏன் ? எங்கள் உயிருக்கு என்ன?" திடுக்கிட்ட வனாக மஞ்சத்தில் இருந்து எழுந்தபடியே இந்தக் கேள்வியை தீபவர்மன் தொடுத்தான்.
" தீபவர்மரே, அற்புதத் தீவுக்குச் செல்வது அத்தனை சுலபமாக இருந்திருந்தால்,எல்லோரும் போய் அந்த அதிசயத் தேனைக் கவர்ந்திருப்பார்களே? அங்கு செல்வது என்பது இறப்பதற்குச் சமம். அதிசயத் தேனை எடுக்க அங்கு சென்ற எவரும் உயிரோடு திரும்பவேயில்லை. அப்படி வந்திருந்தால் தானே அங்கு ஒளிந்திருக்கும் ஆபத்தை அறியமுடியும்" என்றாள் அவள்.
அதன் பின்னர் தீபவர்மன் சில மணித்துளிகள் எதுவும் பேசவில்லை. சிறிது நேரம் தனக்குள் ஏதோ யோசித்தவனாக அடுத்த கேள்வியைக் கேட்டான்.
" அதுசரி, அற்புதத்தீவுக்கு நீங்களே சென்று தேனை எடுத்திருக்கலாமே. எதற்கு என்னையும் கூட்டுச் சேர்க்க வேண்டும்?"
சரேலெனத் திரும்பிய பவளராணியின் முகத்தில் ஒரு மந்தகாசப் புன்னகை.
" இதை நீங்கள் முதலே கேட்பீர்களென நினைத்தேன். தாமதித்து விட்டீர்கள். சரி, இப்போது சொல்கிறேன். அபூர்வ கிரகணமொன்றில்



பிறந்த, அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே அற்புதத் தீவில் காலடி எடுத்து வைக்க முடியும். நீங்களும் அப்படியான அபூர்வ சூரிய கிரகணத்தில் பிறந்தவர். அத்தோடு எதற்கும் அஞ்சாத வீரர். ஆகவேதான் உங்களால் அதை அடைய முடியுமென்று தேர்ந்தெடுத்தேன்"
தீபவர்மனுக்கு வியப்பாக இருந்தது. அவன் அபூர்வ கிரகணத்தில் பிறந்தவிடயம் கூட அவளுக்குத் தெரிந்திருக்கிறதே என நினைத்து அவன் பெரும் ஆச்சரியப்பட்டான். அந்த ஆச்சரியத்தோடு கூடவே முதல் நாளிரவு அவளை முதுமையான பயங்கரத் தோற்றத்தில் பார்த்த நினைவும் எழுந்தது. அது பற்றி அவளிடம் கேட்கலாமா என நினைத்து, பின்னர் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டான். மீண்டும் ஒருமுறை புஷ்பக விமானத்திலிருந்து கீழே நோக்கினான். பார்த்தவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

(தொடரும்)



# கண்ணுக்கு தெரியாத கொள்ளை!

## 20 மில்லியனைச் சுருட்டிய தனி நபர்

### பின்னணியில் இயங்குவது யார்?

சிறிதரன் மனோஜ்

நோகாமல் நுங்கு குடிக்க முடியுமா? முடியுமென்று வவுனியாவில் நிரூபித்திருக்கிறார் ஒரு சாதாரண முகாமைத்துவ உதவியாளர். அதுவும் மெத்தப்படித்த வித்துவான்கள் நிறைந்திருக்கும் திணைக்களமென்று மார்தட்டிக் கொள்ளும், கல்வித் திணைக்களத்தின் வவுனியா வலயத்தில் 20 மில்லியன் ரூபாவுக்கு மேல் சுருட்டி தன் வங்கிக் கணக்குகளை நிரம்பச் செய்திருக்கிறார் இந்த ஜெகஜால கில்லாடி. தனக்கிருக்கும் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, மிக நூதனமாக இந்தப் பணக்கையாடலில் ஈடுபட்ட நபர், கடைசியில் எதேச்சையாக சிக்கியும் விட்டார். அவர் சிக்கிக் கொண்டபின்னரே 'இவ்வளவு மில்லியன்களை கண்முன்னாலே சுருட்டி விட்டானே?" என்று மற்றவர்கள் வாய் பிளந்தார்கள். அப்படிச் சிக்கியிரா விட்டால் இன்னும் பல மில்லியன்களை அவர் தன் வங்கிக் கணக்குக்கு வரவழைத்திருப்பார் . தன்னுடைய அலுவலகத்தில் நடக்கும் மோசடியைக் கூட கண்டுபிடிக்க முடியாதளவுக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் இருந்திருக்கிறாரே என்று ஒரு சாராரும், இவ்வளவு நாள் நடந்த இந்த மிகப்பெரும் மோசடியை தாமே துப்பறிந்து கண்டுபிடித்தோம் என்று மார் தட்டும் மற்றொரு சாராருமாக, இந்த மோசடி குறித்து வெவ் வேறான கருத்துக்கள் இன்னும் உலவிக் கொண்டுதான் இருக்கின்றன. கல்வி வலயமொன்றில் 20 மில்லியன் ரூபாவுக்கும் மேல் மோசடி என்ற செய்தி கடந்த மாதம் பெரும் பரபரப்பை உண்டாக்கி இருந்தாலும், அந்த மோசடி எப்படி எல்லோர் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு நடந்தது என்று பலருக்கும் தெரியவர வில்லை. அந்த முகாமைத்துவ உதவியாளர் மில்லியன் கணக்கில் பணத்தைச் சுருட்டிய மாயம் என்ன?

## உண்மையில் அங்கு என்னதான் நடந்தது?

ஒரு ஊழியர், ஒரே மாதத்தில் பல அரச ஊழியர்களின் பெயரில் சம்பளத்தைப் போட்டு, அதைப் பல ஆண்டுகளாக 'அபேஸ்' வந்திருக்கிறார் என்றால், அதை எடுத்த எடுப்பிலேயே நம்பமுடியாமல் தான் இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. அப்படி அந்த தொழில்நுட்பக் கில்லாடி எப்படிப் பணத்தைக் கையாடினார் என்பதை அறிய வேண்டுமானால், அரச ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படும் விதம், ஒன்லைன் முறைமை பற்றியெல்லாம் நீங்கள் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும்

### ஆசிரியர்களுக்கு சம்பளம் வழுங்கப்படுவது இப்படித்தான்

ஓர் அரச ஊழியருக்கு குறித்த மாதத்தின் 25 ஆம் திகதி சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று வைத்துக்கொண்டால், அன்றைய தினமே அவரது கணக்குக்கு சம்பளம் வரவு வைக்கப்பட்டுவிடும். அதன் பின்னர் தான் அவருக்கு சம்பளத் தாள் (pay sheet) வழங்கப்பட்டு அவர் அதில் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்திக் கையொப்பமிடுவார். ஆனால் ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்கும் முறைமையோ சற்று மாறுபட்டது.

சம்பளத் தினத்துக்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னரே சம்பளத்தாள்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விடும். அதில் அதிபர், ஆசிரியர்கள் என்போரின் கையொப்பங்களை வாங்கிய பின்னரே தான் குறித்த சம்பளம் அவர்களுக்குரிய கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும்.

இதில் சிலவேளைகளில் ஆசிரியர்களின் கையொப்பங்கள் தவறும் பட்சத்தில், அவர்களின் சம்பளம் நிறுத்திவைக்கப்பட்டு குறித்த பாடசாலையின் அதிபர் மூலம் அதற்கான காரணம் ஆராயப்படும். குறித்த ஆசிரியர் அல்லது ஆசிரியர்கள் அந்தப் பாடசாலையில் தற்போதும் கடமை புரிகின்றனரா என்பதை அதிபர் மூலம் உறுதிப்படுத்தினால் மட்டுமே சம்பளம் அவர்களின் கணக்குக்கு வரவு வைக்கப்படும். அப்படி அல்லாத பட்சத்தில் குறித்த ஆசிரியருடைய சம்பளம் அவர் கணக்கில் வைப்புச் செய்யப்படாமல் தொடர்ந்தும் அது மாற்றப்படாத காசோலையாக வைக்கப்பட்டிருக்கும். ஆகவே ஒருபோதும் கடமையில் இல்லாத ஆசிரியருக்கோ, கல்வித் திணைக்கள ஊழியர் அல்லாத ஒருவருக்கோ சம்பளம் வரவு வைக்கப்படும் என்பது சாத்தியமில்லாததொன்றாக இருந்தது. அப்படியானால் எப்படி அதைச் சாத்தியமாக்கி மில்லியன் கணக்கில் பணத்தைச் சுருட்ட முடிந்தது? அதற்கு ஒற்றை வரியில் பதில் 'தொழில் நுட்பம்' என்பதுதான்.

### ஒன்லைனுக்கு மாறிய சம்பளம்


இப்போது தொழில்நுட்ப வளர்ச்சியால் காசோலை நடைமுறை மாறி, நேரடியாக ஒன்லைன் மூலம் கணக்குகளுக்கு வைப்பிலிடும் நடைமுறை இலங்கையில் நடைமுறைக்கு வந்துள்ளது.

இலங்கை முழுவதும் சிகாஸ் (CIGAS /SLIP SYSTEM) என்கிற மென்பொருள் ஊடாக சம்பளம் தயாரிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைக் கையாள்வதற்கென்றே கணக்காளர்களும், கணக்குத்துறை சார்ந்தவர்களும் விஷேடமாகப் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

இவை கணக்கியல் பிரிவு சார்ந்த விடயமாக இருந்ததால், வலய நிர்வாகம் இது தொடர்பாக அறிந்து வைத்திருக்கவில்லை.

யார்,யாருக்கு எவ்வளவு சம்பளம் வழங்கப்பட வேண்டும் போன்ற தரவுகளை ஊதியச்சீட்டு (payroll) மூலம் உருவாக்கி, அதனை சிகாஸ் (cigas) சிஸ்டத்தில் இணைப்பார்கள்,

## கண்காணிப்பை உடைத்து கையாடியது எப்படி?



அதன் பின் வங்கிக் கணக்குகளில் ஊழியர்களின் சம்பளம் வரவிடப்படும்.

இவ்வாறு மென்பொருள் ஊடாக செயற்படுத்தப்படும் பணிகளை கணக்கியல் பிரிவு ஊழியர்களே செய்வார்கள். எல்லாம் தயாரித்த பின்னர், இறுதியில்தான் கணக்காளரால் இவைகள் சரிபார்க்கப்படும். இதுவே தற்போது நாடளாவிய ரீதியிலான சம்பள நடைமுறையாக இருக்கிறது.

இந்த சிகாஸ் சிஸ்டத்துக்குள் ஊடுருவி, அதன் பலவீனம் என்னவென்பதைக் கண்டறிந்தே, 20 மில்லியனுக்கும் அதிக தொகையை அந்த முகாமைத்துவ உதவியாளர் 'ஆட்டையைப்' போட்டுள்ளார்.

### எதிர்பாராமல் மாட்டினார்

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கான, அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் சம்பளங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றைத் தரும்படி வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்தின் மூலம், வலயங்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது. யதார்த்தமாக விடுக்கப்பட்ட இந்தப் பணிப்புரையில் தான் மோசடி மன்னர் யதார்த்தமாக மாட்டியிருக்கிறார்.

எல்லா வலயங்களுக்கும் அந்த உத்தரவு பறந்தது. அதன்படி, வவுனியா வடக்கு வலயத்திலும் சம்பளம் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டது.

அதன்போதே குறிப்பிட்ட மாதத்துக்கான சம்பளங்களில் வித்தியாசம் இருந்தமை கண்டறியப்பட்டது. இருப்பினும் ஊழியர்கள் சம்பளம் போக, வித்தியாசமாக எஞ்சியிருப்பது ஆசிரியர்கள் சம்பளமாக இருக்கக்கூடும் என்ற கணிப்பில், அதனைப் பெரிதுபடுத்தாமல் அந்த அறிக்கையை உடனடியாக அனுப்பி வைத்திருக்கிறார்கள். என்றாலும் சந்தேகம் தீராததால், சம்பள அறிக்கையை அனுப்பிய பின்னர் , வலயப் பணிப்பாளரின்




அனுமதியுடன் ஒவ்வொருவரினதும் சம்பளப்பட்டியல், ஊதியச் சீட்டு, பதிவேடுகள் என எல்லாவற்றையும் வவுனியா வடக்கு வலய கணக்காளர் மற்றும் கணக்கு அலகு ஊழியர்கள் அக்குவேறு ஆணிவேறாக மீளப் பரிசோதித்தபோதே, 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை ஒரு நபரால் விழுங்கப்பட்ட உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. மோசடி கண்டுபிடிக்கப்பட்ட அடுத்த நொடியே வலயப் பணிப்பாளருக்கு அது தெரிவிக்கப்பட்டதுடன், அந்த விடயம் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர், கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் தெரி யப்படுத்தப்பட்டது.

### கண்டுபிடித்தது யார்?

பின்னர் கல்வி அமைச்சின் செயலாளரின் அறிவுரைக்கமைய வவுனியா வடக்கு வலயப் பணிப்பாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் இந்த மோசடி தொடர்பில் முறைப்பாடும் செய்யப்பட்டது. இரண்டு நாள்களின் பின்னர், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், குறித்த வலயத்தில் நடந்த மோசடி தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு ஒன்றை நியமித்தார். அந்தக் குழு இன்னும் விரிவாகச் சோதனையிட்டு, இன்னொரு அறிக்கையைத் தயாரித்து அதனை நேரடியாக வடமாகாண கல்வி பணிப்பாளரிடம் கையளித்தது. ஆக மொத்தம், இந்த மோசடியை முதலில் கண்டுபிடித்து, அதனை வெளிப்படுத்தியது வவுனியா வடக்கு வலயம் தான். ஆனால் மாகாணத்தின் உள்ளக கணக்காய்வில் தான் இந்த நூதனத் திருட்டுச் சிக்கியதாகவே ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதனை மாகாணத் திணைக்களமும் மறுதலிக்கவில்லை என்பதுதான் ஆச்சரியம். ஒரு வேளை, தங்களுக்கு இதனால் நல்லபெயர் என்று பம்முகிறார்களோ தெரியவில்லை.

### பல வங்கிக் கணக்குகள்; பலே திட்டம்!

இவ்வாறு ஒவ்வொரு மாதத்திலும் பல லட்சம் அரசநிதி அவருடைய கணக்குகளுக்கு சென்றிருக்கிறது. இதனைச் செய்வதற்கு தனது பெயரிலுள்ள பல வங்கிக் கணக்குகளைப் பாவித்திருப்பதோடு இன்னுமொருவரின் கணக்கையும் பயன்படுத்தியிருக்கிறார். ஒரே கணக்கை பயன்படுத்தினால் சிக்கிக் கொள்ளலாம் என்பதற்காகவே இப்படி ஒரு வேலையாம்.

அரச சம்பளக் கணக்கிலிருந்து, ஒருவர் பெயரில் உள்ள பல வங்கிக் கணக்குகளுக்கு ஒரே நாளில் பல லட்சங்கள் வரவுவைக்கப்பட்டிருந்த போதும், வங்கிகள்கூட இதனைப் பொருட்படுத்தியிருக்கவில்லை, இது தொடர்பாக வங்கிகளிடம் வினவப்பட்ட போது, "தனித்தனியாக நாம் அவற்றை ஆராய்வதில்லை. அத்தோடு இன்னொரு வங்கியில் அவருக்கு கணக்கு இருந்தால் அதில் வைப்பிடப்படும் விபரமும் எமக்குத் தெரியவராது" என்றே கூறியிருந்தார்கள்.

### இன்னும் இருக்கும் கறுப்பாடுகள்

குறித்த நபர் கடந்த மே மாதம் வலயத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். அப்படியிருந்தும் கடந்த ஒக்ரோபர் மாதம்வரை அவருடைய பெயரில் உள்ள கணக்குகளுக்கு பணம் சென்றிருக்கிறது. ஆகவே நிச்சயம் அவர் தனியாளாக இந்த மோசடியைச் செய்திருக்க முடியாது. அவரது மோசடிக் கூட்டாளிகள் இன்னும் அதே வலயத்தில், அதுவும் சம்பளம் தொடர்பான பணிகளில் இருக்கிறார்கள் என்பதும் புலனாகின்றது. உரிய விசாரணைகள் நடத்தினால் அதன் மூலம் அதன் மூலம் எஞ்சிய கறுப்பாடுகளும் சிக்கக்கூடும்.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது நடந்து வந்தாலும் கூட, சந்தேகநபர் இதுவரை எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவில்லை. விசாரணைகளும் நத்தை வேகத்திலேயே நகர்கின்றன.

இது மக்களுக்கு பலவிதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளன. நூதனமாக நிகழ்ந்த இந்தக் கையாடலில் ஏதும் முக்கிய அதிகாரிகளோ, அரசியல் புள்ளிகளோ இருக்கக் கூடுமென்றும் மக்கள் கருதுகின்றனர். அப்படியான சந்தேகங்களை நீடிக்க விடாமல், விசாரணையைத் துரிதப்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் மட்டுமல்லாது, ஏனைய சில திணைக்களங்களிலும் சிகாஸ் மென்பொருள் தொடர்பான உதவிகள் தேவைப்பட்டபோது இவரையே நாடியிருக்கிறார்கள் என்பதுதான் பலருக்கும் இப்போது வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

ஏனெனில் அந்தத் திணைக்களங்களிலும் இவரோ அல்லது இவர் போன்ற வேறு கில்லாடிகளோ என்னென்ன தில்லாலங்கடி வேலைகளைச் செய்திருக்கிறார்களோ? எத்தனை மில்லியன்களை விழுங்கியிருக்கிறார்களோ என்று யார் அறிவார்?



## அதெல்லாம் சரி, இந்த நூதனத் திருட்டு எப்படி நிகழ்ந்தது?

### இப்படித்தான் நிகழ்ந்தது

இந்த மோசடியின் பிரதான சூத்திரதாரி ஒரு முகாமைத்துவ உதவியாளர். வவுனியா வடக்கு வலயத்தில் சில மாதங்களுக்கு முன்னர்வரை கடமையாற்றியிருந்தார். பின்னர் மாற்றலாகிவிட்டார். இதில் வேடிக்கை என்னவெனில், இந்தச் சந்தேகநபரின் கடமைப்பட்டியலில், சம்பளக் கணிப்பீடு செய்வது என்ற பணி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. என்றாலும் சிகாஸ் என்கிற கணக்கியல் மென்பொருள் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டவர் என்பதால், ஆரம்பத்தில் அதில் பதிவேற்றம் செய்யும் போது உதவி செய்திருக்கிறார். போகப் போக அவரே சம்பளக் கணிப்பீட்டைச் செய்து பதிவேற்றம் செய்யுமளவுக்கு முழுப்பொறுப்பையும் கையில் எடுத்துக் கொண்டார். அதற்குப் பொறுப்பான அலுவலரும் தன் வேலை சுலபமாக முடிவடையும் சந்தோசத்தில், சந்தேக நபரின் பணியில் தலையிடுவதில்லை. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தான் இந்த மாபெரும் மோசடியை அவர் செய்திருக்கிறார்.

பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் தொடர்பான தகவல்களை சிகாஸ் மென்பொருளில் சேர்க்கின்றபோது, பணியாளர் இலக்கம் (employee number), பெயர் ,வங்கிக் கிளை மற்றும் கணக்கு இலக்கம் என்பவை உள்ளடக்கப்பட்டிருக்கும். குறித்த மோசடிக்காரர், வேறு சில ஆசிரியர்களின் பணியாளர் இலக்கங்களைப் பதிவு செய்து அப்படியான ஆசிரியர் பெயரில் தனது பெயரையும், கணக்கு இலக்கத்தில் தனது கணக்கு இலக்கத்தையும் சேர்த்து மென்பொருளில் பதிவேற்றியிருக்கிறார். கடந்த மாதம் மட்டும் 841 ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களின் பட்டியலுக்குள் தன்னுடைய பெயர்,வங்கிக் கணக்கிலக்கம் போன்றவற்றை எவருக்கும் சந்தேகம் வராதபடி, இணைத்திருக்கிறார் குறித்த மோசடியாளர். கடன் நிலுவைகள், நிலையியற் கட்டளைகள் போன்றவைகள் கணக்குகளில் இருந்தால், ஒரு ஆசிரியருடைய பணியாளர் இலக்கம் இரண்டு மூன்று தடவைகள் வருவதற்கான வாய்ப்புகள் இருப்பதனால், இதனையும் யாரும் பெரிதாகக் கண்டுகொள்ள வில்லை.




○ மௌனா

## பிரவாகம்

பஸ் நிலையம்.

ஜனசந்தடிகளின் ஆர்ப்பரிக்கும் ஒலியையும் மீறி எழுந்து, அனைவரையும் ஆக்கிரமித்து மயக்கிக்கொண்டிருந்தது அந்தப் புல்லாங்குழல் இசையின் நாதவெள்ளம். விழாவொன்றில் பேசப் போகும் அவசரம் எனக்கு. இருப்பினும் இசையில் லயிக்கும் மனதை இழுத்துக்கொண்டு போவது அவ்வளவு சுலபமாயில்லை. குழுமி நிற்கும் கூட்டத்திடையே தலையை நுழைத்துப் பார்க்கின்றேன். பத்துப் பன்னிரண்டு வயதுப் பாலகன், கோவில் விக்கிரகம் மாதிரி. பிறவி ஞானம் போலும், இசை மடை திறந்து பாய்கின்றது. நுழைத்த தலையை இழுக்க மறந்த நிலை. பிரபஞ்ச கீதம் நின்றது போன்று சில்லறைகள் விழுகின்றன. கூட்டம் கலைகிறது. நான் நிற்கின்றேன். மெய் மறந்த நிலை. அந்தச் சிறுவன் என்னையே பார்க்கின்றான் இல்லை. ஆட்கொள்கின்றானோ...?

நான் கேட்கின்றேன்...

"தம்பி உங்கட அப்பா, அம்மா? "ஒரு கணம் மௌனம் .... பிறகு

" அப்பா காலஞ்சென்ற சங்கீத வித்துவான் ஞான பண்டிதர். அம்மா..." என்றபடியே பின்னால் இருந்த முதிய பெண்ணைப் பார்த்தான் எனக்குப் பொறி தட்டியது.

அவசரமாக பொக்கற்றுள் இருந்த விழா அழைப்பிதழை எடுத்துப் பார்த்தேன். மகாவித்துவான் ஞான பண்டிதர் நினைவு விழா.

கண்களை ஏதோ மறைக்கின்றதே...........

கூட்ட நினைவு அகல சரியான கூட்டத்தில் கலந்துவிட்ட நினைவு எனக்கு.

"தம்பி இன்னொரு பாட்டு வாசிக்கிறாயா?" என்றபடி அவனருகே அமர்கின்றேன்....

# காணாமல் போதல்; காரணம் யார்?

சிக்மலிங்கம் றெஜினோல்ட்




காணாமலாக்கப்படுதலின் இழப்புத் தருகின்ற ஒரு கதையை நேற்றுப் படித்தேன். யோசுவா அடிகள் எழுதிய கதை அது. ஆனால், அந்தக் கதையில் நீங்கள் அறிந்த மாதிரிக் காணாமலாக்கப்பட்ட சங்கதிகளில்லை. அது வேறு; இது வேறு. கதை இப்படித்தான் தொடங்குகிறது.

காணாலாக்கப்படுதலுக்கு எதிராக முதியவர் ஒருவர் உண்ணாவிரதமிருக்கிறார். "இப்படி உண்ணாவிரதமிருக்கிறதால என்ன பயன்? தேவையில்லாத பிரச்சினைகள் தான் வரும்" என்று அந்த ஊரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் முதியவர் அசைவதாக இல்லை.

அப்பொழுது அங்கே ஒரு வெள்ளை வான் ( White van) வருகிறது. சனங்கள் என்னவோ ஏதோ என்று அச்சப்படுகிறார்கள். வந்த வாகனம், முதியவர் உண்ணாவிரதமிருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் நிற்கிறது. அதிலிருந்து ஒரு பெண் இறங்குகிறாள். அவள் அந்த முதியவரைப் படம் பிடிக்கிறாள். தொடர்ந்து மற்றவர்களும் இறங்குகிறார்கள். அவர்களில் சிலர் வெளிநாட்டுப் பிரதிநிதிகள். அச்சத்தோடு கலைந்த சனங்கள் இப்பொழுது மெல்ல மெல்ல அந்த இடத்தை நோக்கி வருகிறார்கள்.

சனங்கள் கூடி வந்தபோது வாகனத்தில் வந்த பெண்ணின் தந்தை சனங்களைப் பார்த்துச் சொல்கிறார், "இந்தப் பெரியவரின் உண்ணாவிரதத்தை நாங்கள் முடித்து வைக்க வந்திருக்கிறோம். அவருடைய கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம். அதை நாங்களும் நீங்களுமாக இணைந்தே நிறைவேற்ற வேண்டும். அது நம்மால் முடியும். இந்தச் சேதியை இன்று உலகம் அறிந்து ஆச்சரியப்படப்போகிறது. இது காணாமலாக்கப் படுவதற்கு எதிரான ஒரு போராட்டம் மட்டுமல்ல, அந்தப் போராட்டம் இன்று செயல் வடிவம் பெறப்போகிறது. எந்தப் போராட்டமும் செயல் வடிவம் பெறும்போதே அது வெற்றியளிக்கும். ஆதலால், இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து, அது செயல்வடிவம் பெறுவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்தப் பெரியவரை நாங்கள் மதிக்கிறோம். காணாமலாக்கப்படுவதைப் பற்றிய இந்தப் பெரியவரின் துயரக் கதைகளைச் சொல்கிறோம், கேளுங்கள்...." என சனங்கள் வியப்போடு பார்க்க, அவர்கள் சொல்லும் அந்தக் கதைகளே எமக்கான சேதி.

முதியவர் உண்ணாவிரதமிருந்தது, தன்னுடைய வாழ்விலும் அயற்சூழலிலும் காணாமலாக்கப்படும் பச்சரசிக் காளான்கள் தொடக்கம் பல்வேறு வகையான இயற்கைக் காளான்கள், பாலவரை, கோழியவரை, கொத்தவரை, பறுகவரை, புளியவரை, குமுட்டில், முல்லை, முசுட்டை, மொசுமொசுக்கை, முடக்கொத்தான், குப்பைக்கீரை, புளிக்கீரை, பனங்கீரை, குப்பைமேனி, கொவ்வை, கீழ்க்காய் நெல்லி, பொருத்துமான்கொடி, தூதுவளை, குறிஞ்சா, வாதநாராணி, நாயுருவி, புளியோதரை, முடிதும்மை, தகரை என்ற தான்தோன்றிகளெல்லாம் காணாமலாக்கப்படுவதற்கு எதிராகவே.

ஏனென்றால், இந்த ஒவ்வொரு தான்தோன்றிகளும்தான் முன்பு - முப்பது ஆண்டுகளுக்கு முதல் - எங்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தவை. இவையில்லாமல் எங்களுடைய நாளாந்த உணவிருக்கவில்லை. வாழ்வுமிருக்கவில்லை. இதனால் நோயும் அதிகமிருக்கவில்லை. அப்படித்தான் உடலில் ஏதாவது நோயோ பிணியோ அண்டினால், அதையும் இந்தத் தான்தோன்றிகளே விரட்டியடித்தன.

ஆனால், இதையெல்லாம் நாங்கள் இன்று காணாமலாக்கி விட்டோம். வளவுகளிலும் சூழலிலும் இவை இன்றில்லை. இதையெல்லாம் இப்பொழுது யாரும் ஆக்கிச் சாப்பிடுவதுமில்லை. சிலர் ஏதாவது வியாதி என்றால் மூலிகைக்காக தேடி அலைகிறார்கள். அவ்வளவுதான். ஆனால், இதைப்பற்றியெல்லாம் ஏராளம் கதைகளுண்டு என்று அங்கே ஒரு கதை சொல்லப்படுகிறது. அது அங்கே உண்ணாவிரதமிருந்தவரோடு சம்பந்தப்பட்ட கதை. "பச்சரசிக் காளான் என்ற ஒரு வகைக் காளான் முன்பிருந்தது. அது அருமையான வாசனையும் நல்ல ருசியுமாக இருக்கும். அந்தக் காளானைச் சமைத்துச் சாப்பிடுவோம். அதிலுள்ள விசேச குணம் என்னவென்றால், பெண்கள் கருவுறுவதற்கு அது கூடுதல் வாய்ப்பைத் தரும். அப்படிச் சாப்பிட்டுப் பிறந்தவள்தான் இதோ இந்தப் பெண். இந்த முதியவரின் தாய்தான் என்னுடைய மனைவிக்கு பச்சரசிக் காளானில் கறியாக்கிக் கொடுத்தார்" என்கிறார் அந்தப் பெண்ணின் தந்தை.

"பச்சரசிக் காளானா?" என்று எல்லோரும் ஆச்சரியமாகக் கேட்கிறார்கள். "அதைப்பற்றித் தெரியாது" என்கிறார்கள் அங்கே நிற்கிற சிலர். "எனக்குத் தெரியும். அதைப்பற்றி நான் சொல்கிறேன்" என்று அங்குள்ள இன்னொரு பெண், தனக்குத் தெரிந்த கதையைச் சொல்கிறார்.

ஆனால், இப்படி ஒரு காலம் எல்லோருடனும் கூடியிருந்த காளான்களும் இன்றில்லை. இலைக் கறிகளும் இல்லை. அவரையினங்களும் அற்றுப் போய் விட்டன. இதையெல்லாம் விட்டுவிட்டு இப்பொழுது நாங்கள் ஹைபிரிட்டில் அடமானமாகியிருக்கிறோம். எல்லாமே ஹைபிரிட் மயமாகி விட்டன. ஹைபிரிட் கோழி. ஹைபிரிட் மாடு. ஹைபிரிட் மரக்கறிகள்... என்பவை குறித்து கதையைக் கேட்கும்போதுதான் எமக்குத் தெரியவருகிறது. எல்லாவற்றையும் இந்தச் சிறிய காலத்துக்குள் காணாமலாக்கிவிட்டு 'கிளினிக் கார்ட்டுடன்' மருத்துவனைகளுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவருடைய வீட்டிலும் பாமர்ஸி என்று தனியான ஒரு டிப்பார்ட்மெண்டே உருவாகியுள்ளது. காணாமலாக்கப்படுதலின் துயரத்தைத் தாங்க முடியாமல் திணறிக் கொண்டிருப்போர் நாம். அது எதிராளிகளால் ஏற்பட்ட இழப்பும் துயரும். இந்தக் காணாமலாக்கப்படுதலைச் செய்தது நாமே. எமக்குள் நாம் செய்த இழப்பும் துயரும் இது. தேசமொன்றுக்காகவும் அதன் தனித்துவ அடையாளம், பண்பாடு, வாழ்க்கை முறை என்பவற்றுக்காகவும் போராடும் நாம் இதைக் குறித்தெல் லாம் சிந்திக்காமலிருப்பது ஏன்? யோசுவா காட்டுகின்ற திசை வேறுதான்.



# இழுக்கு உனக்கல்லோ...

பொன்னம் பலத்திருந்து
பார்வைக்கண் வீச்சாலே
பென்னம் பெரியஇந்த
புவியரசை ஆள்பவனே
என்னமாய் போகுதிந்த
உலகம்; அதுபுரியாமல்
இன்னும்நீ நித்திரையோ
எழுந்திடுவாய் எம்மானே...!

தென்நா டுடையவனே
தேசமெலாம் ஆள்பவனே
இன்னாருக் கின்னதென்று
எழுதிவைத்த இனியவனே
சின்னதாய் இருந்துஇந்த
சிற்றுலகை ஆட்டுமதன்
சன்னதத்தை அடக்கி
சுகந்தருவாய் எம்மானே...!

மார்கழியாம் வந்தாலே
மனங்கள் மகிழ்ச்சியுறும்;
சூழ்கலி நீங்கி
சுகமாக்கும்; காலையிலே,
ஓர்கலி வந்தெம்மை
உறுத்தி அறுத்தெறிய
பார்!கலி காலத்தைப்
பாழாக்கு எம்மானே...!

மச்சமது பாவமென்றே
மரக்கறியை உண்டோர்கள்
மிச்சம் பயத்தாலே
மேனி நடுங்குகிறார்
அச்சத்தைப் போக்கியவர்
அடிமனத்துள் உறைந்தகிலி
எச்சமெலாம் அழித்தொழிக்க
எழுந்திடுவாய் எம்மானே...!

சந்தை இயங்கவிலை
சங்கங்கள் இயங்கவிலை
சிந்தை குழம்பியிந்தச்
சமுதாயம் இயங்கவிலை
இந்தைப் பரம்பரைக்கு
இப்படியோர் தீவினையோ?
எந்தைப் பரம்பொருளே
ஏனிவைகள்? எம்மானே...!

பள்ளி இயங்கவிலை
பாடங்கள் நடக்கவிலை
தெள்ளு தமிழாலே
தேவாரப் பாட்டுகளைத்
தள்ளித்தள்ளி இருந்தேனும்
துதிபாடிப் பரவுதற்கு
பள்ளி எழுந்தெம்மை
பாருதியோ எம்மானே...!

"நிர்வாகச் செயற்பாடும்
நிலைகுலைந்து போயெல்லாம்
நிர்மூலம் ஆகிடுமோ?
நினைவே பயமுறுத்தும்
சர்வேசா இங்குஎலாம்
சகஜநிலை ஆகிவிட
கர்ம வினைகளைந்து
காக்கணும்நீ எம்மானே...!

அஞ்சுதேர் இழுக்க
அனுமதிக்கு அரசிடமே
கெஞ்சிக் கூத்தாடி
குறித்துஒரு விண்ணப்பஞ்
செஞ்சு தேரிழுக்கும்
சீர்கெட்ட காலத்தை
விஞ்சும் வகையறியோம்
விரைவாய்வா எம்மானே...!

சாமத் தரிசனத்தை
சனங்குழுமிப் பார்க்கஉன்மேல்
காமந் தலைக்கேறிக்
காரிருளில் ஓடிவந்து
ஓமத்தீ வளர்த்தபின்னர்
உருவாகும் கரிக்காக
ஊமத்தை ஆகி
உருகுவமே எம்மானே...!

கிழக்கு வெளுக்கமுதல்
கீழ்வானம் சிவக்கமுதல்
ஒழுக்காய் உனைத்தேடி
ஊரூராய்ப் பாடிவரும்
வழக்கமும் இந்தமுறை
வாய்க்காமல் போனதனால்
'இழுக்கு உனக்கல்லோ'
இதுமுறையோ? எம்மானே...!

**வ.வடிவழகையன்**
காரைநகர்

# 26
## இற்கான கவிதைகள்



மதுவின் மயக்கத்தில்
மண்மீது கிடந்து
மறைக்கின்றாய் உன் முகத்தை
மண்டியிட்டு உன்மீது சாயும்
மகளின் பாச ஏக்கத்தை
மண்ணுக்குள் புதைத்திடாதே
மனமுருகிக் கேட்கிறேன்
மறந்துவிடு இப்பழக்கத்தை...

கு.சோபனா
மூளாய்

எந்தன் முதுகில் துயில் கொள்ளும்
பழங்கால குகை ஓவியமே
முகம் புதைத்த கம்பளிக்குள்
இசைக்கின்றேன் எந்தன் மனராகம்
எந்தன் உயிர் பிரிந்திடினும்
இவ் ஏழை அப்பன் சிதைமேல்
ஏறிமிதித்துச் செல்லடி
உந்தன் விடியலை நோக்கி

ச.வைஷ்ணவி, நல்லூர்

சொந்தங்களை தேடி
சொந்த மண்ணில் தவித்திருப்பு
உள்ளங்கள் வாடலுற்றதேன்?
உறக்கம் வீணே கொள்வதேன்?
தந்தையும் மகளும் காத்திருப்பது
தமக்கென அமையும் விடியலுக்கு
வெயில் இன்னும் சுடவில்லை
வெறுமை தான் கண்டது மிச்சம்

சிவரம்யா
யாழ்ப்பாணம்

சோகமளந்து சோர்வுதனை
தளர்க்கத் தகப்பனிவன்
தரையில் தவழ்ந்து
மணற் போர்வையில் மண்வாசனையோடு
கலந்த காற்றை சுவாசித்தபடி கிடக்கிறான்
பஞ்சு மெத்தையைக் காட்டிலும்
படுக்க பிதாவின் தோல் இனிதென
பதற்றமின்றி உறங்குகிறாள் பேதையிவள்

ஆ.கர்ஷிகா
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

வானம் அளவு வந்து
எமை வாட்டும் துயர் - தந்தை
நானும் அழுவேன் என்று
முகம் காட்டவில்லை
உள்ளிருக்கும் உவமைகள் போல்
முழுமை இல்லை - வாழ்க்கை
உண்மைகளை கண்டறியும்
பருவமில்லை

வி.சதாமதி
முரசுமோட்டை

ஆழ் கடல் விழுங்கி
ஏப்பமிட்டவளை நினைத்து
என் முகம் காணாது
கதறியிங்கே...
மண்ணுக்குள் மறைக்கும்
உன் மனதின்
வேதனையை
முதுகிற்குப் பின்னாலும்
உணருகிறேன் நானும்
எம் உதிரம்
ஒன்றாகிப்போனதால்.......

பற்குணன்
அம்பிகாபதி, வவுனியா.

**பரிசு பெறும் கவிதை**

வானம் கூரையிட்ட
நிலமதிலால் நெய்தலில்
குலமகளும் தூங்கிடும் அப்பனும்
குலாவிடும் காட்சி
பதனிடப்பட்ட பானம்
காலியாகுது உம்
பாதம்பட்ட பாதணி
காத்திருக்கிறது இன்னமும்
உமை சுமக்க

சி.பாவனா
சங்கானை

பத்து மாதம்
சுமக்கவில்லை என்றாலும்
பத்திரமாக வாழ்க்கை
முழுவதும்
சுமக்க நினைப்பவரே
அப்பா...

ச.கபிசன்
கிளிநொச்சி

படுப்பதற்கு பாய் இல்லை
இருப்பதற்கு வீடில்லை
உண்பதற்கு உணவில்லை
சுத்தமான நீர் இல்லை
ஆறடி இடத்திலேயே
இருவர் உறங்க
வானமே எங்கள் எல்லை

மோ.தாருஜன்
அளவெட்டி

சிந்தும் வியர்வைத்துளிகள் எனக்கானது
என்பதை நான் உணர்கிறேன் தந்தையே!
பாடுபட்டு நீ உழைத்திடும் ஒவ்வோர் மணித்துளிகளும்
என்னை பல யுகங்கள்
வாழ வைத்திடும் என்பதை உணர்ந்தவளாய்...
எதிர்காலம் எத்தனை செல்வங்களை எனக்கு தந்தாலும்...
என் தலையை என்றும் உன்னோடு
சாய்ந்துக்கொள்வேன் உன் செல்ல மகளாய்!

கு.ஜனீஸ்சன்,
யாழ்ப்பாணம்.

தாயணைப்பின்றி தந்தை கரம் பற்றி
தங்க நிழலுமின்றி
தரித்து நிற்க வாசலுமின்றி
பசிதாகம் வயிற்றை சுருட்ட
தரையோ கட்டிலானது
தந்தை முதுகோ மெத்தையானது
சுட்டெரிக்கும் வெயிலிலே
சுருளும் நிலை பாராயோ இறைவா

எஸ்.கலாமணி
8ம் வட்டாரம்,மண்டைதீவு

ஆயிரம் கவலைகள் மனதில் உதிக்க
சோகங்களே வாழ்க்கை என ஆக
எல்லாமே இழந்து நிர்க்கதியாய்
நிற்கும் வேளை
இந்த உலகம் மட்டும்
மனதிற்கு நிம்மதியைத் தந்ததோ.......

யா.யாதுஷா
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்

உழைத்த களைப்பினால் நீ அசதியிலே
முற்றத்து வெண் மணலில் உறங்க
ஒரு வேளை கஞ்சி மட்டுமே
அருந்தி விட்டு கலங்கிய கண்களுடன்
உன் வரவுக்காய் ஏக்கத்துடன் காத்திருந்தவள்
உன்னை கண்டதும் கவலைகள் மறந்து
உன் மீது கண் மூடி அசைவில்லாமல்
அயர்ந்து தூங்குகிறாள் மழலையிவள்


ஜனனி மோகனதாஸ்
உருத்திரபுரம்

காற்றோடு மோதிவந்த
கடலலை நீரினில்
கால் நனைத்து
கடற்கரை மணலினில்
துள்ளிக் குதித்து விளையாடி
சோர்ந்து போன குழந்தைக்கு
தூளியானது
தந்தையின் உடல்!!

மூர்த்தி கவிதா.
திருகோணமலை!

பஞ்சு அடைத்த மெத்தையிலே நீ...
உருண்டு புரண்டு படுத்தும் வராத தூக்கம்...
கூலி வேலை செய்து விட்டு...
பஞ்சியிலே வந்து தூங்கும் தந்தை முதுகின் மேலே...
ஏறி படுக்கும் போதினிலே...
பசி பட்டினி மறந்து கிடைக்கும் தூக்கம்அதை...
காசு கொடுத்து தான் உன்னால் அனுபவத்திட இயலுமோ?...

மரியதாஸ் சாயிசங்கர், திருநெல்வேலி



# 27
## மௌனமொழி

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**26.12.2020**

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: uthayansanjeevi@gmail.com
0773165555

## பிஞ்சு தூரிகைகள்

ச.கபிசன்,
கிளி/கிளிநொச்சி
இந்து ஆரம்பப் பாடசாலை.
அ.இல.117




ச.அக்ஷயா,
உடுவில் மகளிர் கல்லூரி.
அ.இல.132






கே.ஆர்த்தி,
தரம் -06
கிளிநொச்சி இந்துக் கல்லூரி.
அ.இல.118

த.துளசிகா,
தரம்-09,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
அ.இல.92



க.கனிமொழி,
தரம்-08,
மகாஜனக் கல்லூரி.
அ.இல.17








தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ளும் முயற்சியே கல்வி. அது மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிகாட்டும்.

## பொதுஅறிவு

1. ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் குருதியின் அளவு என்ன?
   **ஐந்து லீற்றர்**
2. இறந்ததற்குப் பின்பும் வளரும் உறுப்பு?
   **நகம்**
3. நாய்களே இல்லாத ஊர்?
   **சிங்கப்பூர்**
4. தன் வாழ்நாளில் நீரே அருந் தாத மிருகம்?
   **கங்காரு**
5. மோப்ப சக்தியால் இரை தேடும் பறவை?
   **கிவி**
6. உலகின் மிக நீளமான குகை?
   **மாமத் குகை**
7. உலகின் மிகப் பெரிய அஞ்சல் துறை கொண்ட நாடு?
   **இந்தியா**

த.துளசிகா
தரம் 9,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி
அங்கத்துவ இலக்கம் 92



# பண்புகளில் சிறந்தது ஈகை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற சான்றோர் வாக்குக்கு இணங்க இந்த வையகத்திலே மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய பல விழுமியப் பண்புகள் உள்ளன. அந்த வகையில் முதன்மையான பண்பு ஈகையாகும். இல்லாதார்க்கு யாதாயினும் கொடுப்பதே ஈகை. ஒருவருக்கு இல்லையென்று கூறாது எம்மால் முடிந்ததை முழுமனதுடன் இனிதே கொடுப்பது சிறந்தது. இரப்போனுக்கு இலன் என்ற துன்ப மொழியைக் கூறாது ஈதல், நற்குடிப்பிறந்தானின் சிறந்த பண்பாகும். இதனையே வள்ளுவர் "இலனென்றும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே உள" என்கிறார். ஈகைப் பண்புக்கு எடுத்துக்காட்டாக ஒரு சிறு கதையைப் பார்ப்போம்.

சுந்தரம் என்ற விவசாயி வேலை செய்து களைத்துப் போய் மர நிழலில் தான் கொண்டு வந்த உணவுப் பொதியை பிரித்து உண்பதற்கு ஆயத்தமானார்.


அப்பொழுது அந்த வழியால் கடும் வெயிலாலும் பசியாலும் களைத்துப்போய் நடந்து வந்து கொண்டிருந்த ஒரு பெரியவர் கீழே விழுந்துவிட்டார். இதனைப் பார்த்த சுந்தரம் பெரியவரை தட்டி எழுப்பி தன் பசியையும் பொருட்படுத்தாது பெரியவரின் பசியைப் போக்க உணவளித்தார். பெரியவரும் சுந்தரத்தின் ஏழ்மை நிலையை உணர்ந்தும் ஈகைப் பண்பை பாராட்டியும் தனது கடையில் உயர்ந்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பளித்தார்.

இக்கதையின் மூலம் ஈகையின் சிறப்பு இலகுவாக எடுத்துக் காட்டப்படுகிறது. ஈகை ஒருவனுக்கு உண்மையான இன்பத்தை அளிக்கவல்லது. கை பெற்றதன் பயன் ஈகை செய்வதே ஆகும். வாடி நிற்கும் வறியவர் தேவையறிந்து நாடிவந்து ஈவதே மனிதத்தின் பண்பு. நாமும் ஈகைப் பண்பில் உயர்ந்து வாழ்வாங்கு வாழ்வோமாக.... எமது நல்லெண்ணம் கொண்டு இனிதே என்றைக்கும் ஈகை செய்வோம்.

டி.ரோஜனா



## உணவைத் தேடிச் செல்ல வழிகாட்டுவோம்



## தொலைந்து போதல்

கட்டடம் உயர ஊரில்
உள்ள குளம் மறையும்.
றோட்டு உயர நீரோடும்
வாய்க்கால் மறையும்.
வெள்ளம் உயர கட்டடம்
வீதி மொத்தமாய் மறையுமே.
மோட்டு முடிவுகளால்
எல்லாம் தொலையும்.

ச.கபிசன்,
கிளிநொச்சி.
அங்கத்துவ
இலக்கம் 117



# பாரதியார்

- இவர் 1882ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி தமிழ்நாட்டிலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார்.
- இவரின் தாயார் பெயர் இலக்குமி அம்மாள் தந்தையார் பெயர் சின்னசாமி ஐயர் ஆவார்.
- பாரதியாரின் இயற்பெயர் சுப்ரமணியன் சுப்பையர் எனவும் அழைக்கப்பட்டார்.
- பாரதியார், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம், வங்காளம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் விடு தலைப்போர்க் கவிதைகள் வாயிலாக மக்கள் மனதில் விழிப்புணர்வு ஊட்டியவர்.
- யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழி போல் இனிதெங்கும் காணோம் என்று தமிழ் மீது தாம் கொண்ட பற்றை வெளிப்படுத்துகிறார். கவிஞர், எழுத்தாளர், ஆசிரியர், தேச பக்தர் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரராகவும் திகழ்ந்தார்.
- சிறுவர் பாடல்கள், இயற்கைப் பாடல்கள், தமிழின் பெருமை பற்றிய விடயங்கள் பலவற்றை எழுதினார்.
- இவர் திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோயில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் நோய்வாய்ப்பட்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

டி. துஷானா
தரம் 5
யா/நல்லூர் சென்பெனடிக் றோ.க.த.க பாடசாலை

# தற்கொலை தவிர்ப்போம்



○ கு.கௌதமன்
தொழில் வழிகாட்டல் ஆலோசகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



கொரோனாப் பெருந்தொற்றால் ஏற்பட்டிருக்கும் உளம்சார் பாதிப்புக்களை நிவர்த்தக்கும் நோக்கில் இந்தக் கட்டுரை சாந்திகம் உளவளத் துணை நிறுவனத்தின் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க (SCORE) செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக பிரசுமாகின்றது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியிலும் அண்மைக்காலமாக தற்கொலைகள் எமது சமூகத்தில் மிக அதிகரித்து வருகின்றன. குடும்ப வன்முறை, கல்வியால் ஏற்படும் அழுத்தம், பொருளாதார அழுத்தம், சமூக நெருக்கடி என்பவை இந்தத் தற்கொலைக்கான தூண்டல் காரணங்களாக இருக்கின்றன. எனினும் இவ்வாறான நெருக்குவாரங்களுக்கு முகம்கொடுக்கும் அனைவருமே தற்கொலையில் ஈடுபடுவதில்லை. இங்குதான் நாம் அனைவரினதும் உளத்தாங்கு திறனைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

தற்கொலை என்பது 'வாழ்ந்தது போதும் என்ற எண்ணமேயன்றி இறப்பதற்கான விருப்பம் அன்று' என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். உலகளாவிய ரீதியில் சராசரியாக 40 செக்கனுக்கு ஒரு தற்கொலையும் 3 செக்கனுக்கு ஒரு தற்கொலை முயற்சியும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இலங்கையில் வருடாவருடம் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர். இதைவிட 10 மடங்கானோர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். உலகில் அதிகூடிய தற்கொலை வீதம் கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையில் சராசரியாக நாளொன்றுக்கு 50 தற்கொலைகள் இடம்பெறுகின்றன.

### இயலாமையின் வெளிப்பாடு

இறைவன் தந்த இந்த இன்னுயிரைத் தாமாகவே அழித்துக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயமாகும். அதாவது தான் வாழ்வதைவிட இறப்பது மேலானது என்று நினைத்து இதில் ஈடுபடுகின்றனர். தற்கொலை என்பது ஒருவர் திட்டமிட்டு தன்னை அழிப்பதாகும். தம் வாழ்வுடன் தொடர்புபட்டவர்களுக்கு ஏதோ தம் மனச்சுமையை அவர்கள் இந்த விபரீத முடிவின் ஊடாக வெளிப்படுத்துகின்றனர். வாழ்வில் பற்றும் பிடிப்பும் அற்ற நிலையிலேயே அந்த முடிவைப் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர் தேடிக்கொள்கின்றனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டவர்கள், காதலில் தோல்விகண்டவர்கள் என பலரும் இந்த அவலச் சாவை எதிர்கொண்டாலும் அவர்கள் அனைவரதும் பிரச்சினைக்கான பொதுமைப்பாடு என்னமோ 'தமது பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்பது தெரியாமையே' ஆகும். அதேநேரம் பெரும்பாலும் கட்டிளமைப் பருவத்தினரே இந்தத் தற்கொலை என்னும் விபரீதத்தை வலிந்து தேடுபவர்களாகவும் உள்ளனர். தற்கொலைக்கான காரணிகளை உளநல நிபுணர்கள் வகைப்படுத்துகின்றனர். குடும்ப ரீதியானவை, உறவு ரீதியானவை, உளம் சார்ந்தவை, சமூகம் சார்ந்தவை, பொருளாதாரம் சார்ந்தவை, அரசியல் சார்ந்தவை என்பதாகத்தான் நிபுணர்களின் வகைப்படுத்தல்கள் அமைந்துள்ளன.

### உறவு ரீதியானவை

கணவன் - மனைவி இடையேயான உறவுப் பிணக்குகள் இறுதியில் தற்கொலையில் முடிவடைகின்றன. கணவனுக்கு அல்லது மனைவிக்கு வேறு பாலியல் தொடர்புகள் ஏற்படும்போது அதைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் சிலர் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

குடாநாட்டில் நடந்த தற்கொலைகளுக்குப் பெரும்பாலும் காரணமாக அமைவது காதலே. இன்றைய இளைஞர்கள் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என வாழத்தலைப்பட்டு காதலில் ஈடுபடுகின்றனர். மனமுதிர்ச்சியற்ற இந்தக் காதல் பல வேளைகளில் தற்கொலைக்குள் தள்ளிவிடுகின்றது.

### உளம் சார்ந்தவை

இலகுவில் மனம் புண்படும் தன்மையுடைய உளத்தாங்குதிறன் குறைந்தவர்களே தற்கொலையில் அதிகம் ஈடுபடுகின்றனர். அதாவது சிறிய பிரச்சினையைக் கூட தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் தற்கொலைக்கு முயற்சிக்கும் வாய்ப்பு அதிகம். இவர்கள் தமது பிரச்சினைகளை கையாள வழி தெரியாமல் பிரச்சினைச் சுமையிலிருந்து விடுபட தங்கள் உயிரை அழித்தல் ஒன்றே வழி என நினைக்கின்றனர். தங்களைப் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களும் நடக்கும் எல்லாப் பிழைக்கும் தம்மையே குற்றவாளியாக நினைப்பவர்களும் இலகுவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

### சமூகம் சார்ந்தவை

குறைந்த சமூக உறவாடல் திறன்கள் கொண்டவர்கள் அதிகளவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். அதாவது சமூகத்துடன் இணைந்து செயற்பட முடியாதவர்களில் தம்மைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்திக் கொண்டவர்களில் தற்கொலைக்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. சமூகத்தால் களங்கப்படுத்தப்பட்டவர்கள் அதைத்தாங்கிக் கொள்ளமுடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

### பொருளாதாரம் சார்ந்தவை

வறுமையின் கோரப்பிடிக்குள் அகப்பட்டு தமது அன்றாட வாழ்க்கையைக்கூட கொண்டுநடத்த இயலாதவர்கள் அதிகம் தற்கொலையில் ஈடுபடுகின்றனர் வறுமையால் தமது குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் போனவர்கள் தம்மை அழிப்பதற்கு முனைகின்றனர். கடன்சுமையைத் தாங்கமுடியாமல் சாதாரணமானவர்கள் மட்டுமன்றி மிகப்பெரிய வர்த்தகர்களும்கூட தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

### அடையாளம் காணப்படலும் தவிர்க்கும் வழிமுறைகளும்

தற்கொலை போன்ற விபரீதமான முடிவுகளை எடுக்கும் தறுவாயில் இருப்பவர்களை அடையாளம் காணவேண்டும். இவர்கள் பின்வரும் அறிகுறிகளை வெளிப்படுத்துபவர்களாக இருப்பர்.

குடும்பம், நண்பர்களுடன் தொடர்பாடலைப் பேணாமல் ஒதுங்கி வாழ்வர். தற்கொலை பற்றியும் மரணம் பற்றியும் அதிகம் கதைப்பர். தம்மைத் தாமே காயப்படுத்துவார்கள். அன்றாடக் கருமங்களில் ஆர்வமின்றி இருப்பார்கள். இத்தகையவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய ஆற்றுப்படுத்தல்களை வழங்குவதன் மூலம் தற்கொலையை எம் சமூகத்தில் இருந்து விரட்ட முடியும்.

பிரச்சினைகளைத் தீர்க்கக்கற்றுக் கொடுத்தல், குடும்ப உறவுகளை ஆரோக்கியமாகப் பேணுதல், அவர்களைச் சுற்றியுள்ள தனிமையை விலக்குதல், ஆன்மீகம் சார்ந்த விடயங்களில் அவர்களை ஈடுபடுத்துதல், மனோதைரியத்தைப் பலப்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பவை மூலம் தற்கொலையில் இருந்து ஒருவரை மீட்டுவரலாம்.

### தற்கொலை எண்ணத்தில் இருந்து உடனடியாக விடுவிக்கும் வழிகள்

தற்கொலை என்ற பிற்போக்கான எண்ணத்தில் இருந்து ஒருவர் தன்னைத்தானே அந்த நொடிப் பொழுதில் விடுவிக்க மருத்துவத் துறை பல பரிந்துரைகளை முன்வைக்கின்றது. தொலைபேசி வாயிலாக நம்பிக்கையான ஒருவருக்கு அழைப்பை மேற்கொண்டு உரையாடல், தனிமையைத் தவிர்த்து அதிக ஆள்கள் நடமாட்டம் உள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டும், ஆபத்தான பொருள்கள் எவையும் தன்னைச் சுற்றி இராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும், உள ஆற்றுப்படுத்தல் நிலையங்களுக்கு உடனடியாக அழைப்பை மேற்கொள்ளல் ஆகியவற்றைப் பின்பற்றுவதன் மூலம் அந்தத் தவறான எண்ணத்தில் இருந்து ஒருவர் அந்த நிமிடத்தில் மீண்டு வரலாம்.

**குறைந்த சமூக உறவாடல் திறன்கள் கொண்டவர்கள் அதிகளவில் தற்கொலையில் ஈடுபடுகின்றனர். அதாவது சமூகத்துடன் இணைந்து செயற்பட முடியாதவர்களில் தம்மைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்திக் கொண்டவர்களில் தற்கொலைக்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சமூகத்தால் களங்கப்படுத்தப்பட்டவர்கள் அதைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.**

பிரச்சினைகள் எதற்கும் தற்கொலை ஒரு தீர்வே இல்லை. எல்லாம் கடந்துபோகும் என்ற உணர்வுடன் வாழ்வை அணுகுங்கள், தற்கொலைக்கு கொடுக்க எத்தனிக்கும் முக்கியத்து வத்தை உங்கள் மனோதைரியத்துக்குக் கொடுங்கள்.

'நீ தோற்றுப் போகலாம் ஆனால் அதன்பொருள் வெற்றி சாத்தியமற்றது என்பதல்ல' என்பதை உணர்ந்து வாழும்வரை போராடினால் வாழ்க்கை என்பது மிகவும் சுவாரஸ்யமே.

■



# சொற்சிலம்பம் போட்டி 26

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | ■ | 4 | 5 |
| 6 | | ■ | | ■ | 7 | | |
| | ■ | 8 | | | | ■ | ■ |
| ■ | 9 | | | ■ | ■ | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | ■ | 13 | |
| 14 | | ■ | 15 | | 16 | | ■ |
| | ■ | | ■ | 17 | | | |
| | ■ | 18 | | | ■ | | 19 |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள் வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. முற்காலத்தில் அரச சபைகளில் வேடிக்கை செய்து அரசர்களை மகிழ்விப்பவன். 4. மனித உடலின் முக்கிய உறுப்பு 6. மழைக்காலம் 7. ஒரு அரசி வகை உணவுப் பொருள் 8. மமதை 9. சுமை 11. இன்று மனித வாழ்க்கைக்கு அவசியமானது 12. மிகப் பெரியது என்பதை அடையாளப்படுத்தும் ஓரெழுத்துச் சொல் 13. வெளியக 14. தகரத்தாலான சிறு குவளையைக் குறிக்கும் ஆங்கிலப் பதம் 15. தகுதி 17.குழப்பத்தை அடக்க பொலிஸாரது மென்பிரயோக நடவடிக்கை. 18. அனுதாப மேலீட்டால் வெளிவரும் வார்த்தை 19. உடல் உறுப்பு (வலமிருந்து இடமாக)

## மேலிருந்து கீழ்

1. வானூர்தி ஓட்டி, 2. விறகு எரிந்த பின் எஞ்சுவது, 3.கிளர்ச்சி, 4. பெருக்கல் குறியீடு 5. பலவற்றின் ஒன்று திரட்சி (கீழிந்து மேலாக), 7. உடற்தாக்குதல், 8. தீட்டிக் கூர்மை யாக்க பயன்படும் கருவி, 9. அரச சபைகளில் அரசரைப் புகழ்ந்து கவிபாடுபவன், 10. ஒன்றுக்கு மேற்பட்டதை இப்படிச் சுட்டுவர், 11. விண்ணப்பம் மேற்கொள்ள வடிவமைக்கப்படும் ஆவணம். 12. இதமான காற்று 13. இதனைத் தேடி பலி பூசைகள் கூட செய்கிறார்களாம். 16. உடம்பில் ஏற்படும் சொறிவை இப்படியும் சொல்வர், 19. மேலேறிச் செல்ல,கீழிறங்க உதவுவது (கீழிருந்து மேலாக)

### சொற்சிலம்பம் போட்டி 24 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. வைரசு, 4. பொன்நகை, 7. காசிக்கு, 9. கமா, 14. தாமரை, 16. வேம்பு, 17. பிணை 18. பணமமதை, 20. திவால், 21. பாதாளம்

**மேலிருந்து கீழ்**

1.வைகாசி, 2. ரசிகர், 3. சுக்கு, 5. நக, 6. கைமாறு, 8. குலம், 10. போர், 11. அபுதாபி 12. உமாபதி/பசுபதி, 13. கம்மல், 15. மணை, 16. வேணாவா, 19.ஆம், 21.பாதை

**சொற்சிலம்பம் போட்டி இல.26**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
26.12.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டி யில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசா லிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 24 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**ந.ஜெயகணேசன்**
காரை வட கிழக்கு,
காரைநகர்.

**2 ஆம் பரிசு**
**ந.யநோஜி**
மீனாட்சி அம்மன் வீதி
சங்கத்தானை, சாவகச்சேரி

**3 ஆம் பரிசு**
**வ.மனோஜா**
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

**4 ஆம் பரிசு**
**த.பரமேஸ்வரன்**
உப தபாலகம், கந்தரோடை,
சுன்னாகம்

**5 ஆம் பரிசு**
**தா.ஸ்ரீதரன்**
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்

# சஞ்சீவி மாணவர் கழகம்



**பெயர்:** சுதாகர் ஹபிசயன்,
**முகவரி:** 8/3, சிவன் புதுவீதி.
**பி. திகதி:** 05.01.2015
**பாடசாலை:** யா/ புனித ஜோன் பொஸ்கோ.
அங்கத்துவ இல. 156



**பெயர்:** வி.பவித்திரா,
**முகவரி:** இல.47, 6ஆம் ஒழுங்கை வைரவபுளியங்குளம் வவுனியா.
**பி. திகதி:** 2004.04.04
**பாடசாலை:** வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இல. 157



**பெயர்:** சு.நேசிஹா,
**முகவரி:** மாறாம்புலம், அல்வாய், வடமத்தி, அல்வாய்.
**பி. திகதி:** 2009.09.24
**பாடசாலை:** யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இல. 158



**பெயர்:** எச்.சதுரியா,
**முகவரி:** 11/1 குசவம்மல் வீதி, அரியாலை.
**பி. திகதி:** 2011.07.20
**பாடசாலை:** யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.
அங்கத்துவ இல. 159



**பெயர்:** ரவிக்குமார் ரதீபன்,
**முகவரி:** கைதடி தெற்கு, கைதடி.
**பி. திகதி:** 2005.12.27
**பாடசாலை:** யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
அங்கத்துவ இல. 160



**பெயர்:** சத்தியநேசன் சஜிதன்,
**முகவரி:** 430, திருநகர், யோகபுரம், மல்லாவி.
**பி. திகதி:** 2013.06.10
**பாடசாலை:** மு/ மயில்வாகனம் த.வி.
அங்கத்துவ இல. 161



**பெயர்:** ஜெயராசா எபிநேசிகா,
**முகவரி:** பிரதான வீதி, கண்டாவளை. கிளிநொச்சி.
**பி. திகதி:** 18.08.2012
**பாடசாலை:** கிளி/ முருகானந்தா கல்லூரி.
அங்கத்துவ இல. 162

சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் கீழ்காணும் முகவரிக்கோ அல்லது வட்அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள்.

**சஞ்சீவி மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..............................................
2. முகவரி: ..............................................
..............................................
3. பிறந்த திகதி: ..............................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................................
6. தொலைபேசி இலக்கம்: ......................................

..............................  ..............................
மாணவர் ஒப்பம்  பெற்றோர் ஒப்பம்

0773165555

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
sanjeevi@uthayan.com

# தற்கொலையா? கொலையா?

## மருத்துவபீட மாணவனின் மரணத்தில் ஒளிந்திருக்கும் மர்மங்கள்

○ உளவாளி

எங்கட பிள்ளைக்கு தற்கொலை செய்யிற அளவுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. அவன் அப்பிடிப்பட்டவனும்கிடையாது. ஆரோ அவனைக் கொலை செய்து போட்டு, எல்லாருமாய்ச் சேர்ந்து தற்கொலை எண்டு நாடகமாடுறாங்கள் " இது ஒரு குடும்பத்தின் கதறல்.

கடந்த நவம்பர் மாதம் 17 ஆம் திகதி.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றனின் சடலம் அவர் கல்வி கற்பதற்காக வாடகைக்குத் தங்கியிருந்த வீட்டில் இருந்து மீட்கப்பட்டது. மருத்துவ பீட மாணவன் தற்கொலை நோக்கில் தூக்கிட்டு உயிரிழந்தார் என பொலிஸாரும், நண்பர்களும் சொன்னபோதும், அவரின் குடும்பத்தினர் அதை ஏற்கவில்லை.

"அவனைக் கொலை செய்துபோட்டாங்கள்" என்பதே அவர்களின் முடிவு. அதற்கு அவர்கள் சொல்லும் காரணங்கள் பலவுண்டு. குறிப்பாக இளங்குன்றன் மனோதிடம் மிக்கவன். தற்கொலை முடிவுக்கு போகுமளவுக்கு பலவீனமான மனம் கொண்டவன் அல்லன் என்பதும் அந்தக் காரணங்களில் ஒன்று.

23 வயதேயான இளங்குன்றனின் பூர்வீகம் வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர்கோயில் தெற்குப் பகுதிதான். ஆனால் 3 வயதில் இருந்தே அவரது குடும்பம் இடம்பெயர்ந்து துன்னாலைக்கு வந்துவிட, அதன் பின்னர் அங்கேதான் அவன் வாழ்வு. குடும்பத்தில் அவன் தான் கடைக்குட்டி என்பதால் செல்லம் அதிகம். அதேவேளை படிப்பில் படு சுட்டி.துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று, அதே வேகத்தோடு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் சாதாரண தரப் பரீட்சையிலும் சகல பாடங்களிலும் 'ஏ' எடுத்து அசத்தினான் .

உயர்தரத்திலும் உயிரியல் பிரிவில் 2 ஏ, பி எடுத்து மருத்துவ பீடத்துக்குள் காலடி வைத்தான்.

அப்போதுதான் அவன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து படிக்கவேண்டிய சூழமைவு ஏற்பட்டது. இளங்குன்றனின் நண்பர்களும் அங்கே ஒரு வீட்டில் தங்கி நிற்பதால் , அவர்களோடு இவனையும் தங்க வைக்க வீட்டார் நினைத்தனர். ஆனால் இளங்குமரன் அதை விரும்பவில்லை.

" அவங்களோட ஒண்டாத் தங்கியிருந்து படிக்கேலாது. வேற இடம் பார்த்துத் தாங்கோ. அது கஷ்டம் எண்டால் நான் வீட்டில இருந்தே கம்பஸுக்குப் போய் வாறன்" என்றிருக்கிறான் அவன். வீட்டுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் சுமார் 35 கிலோமீற்றர் தூர இடைவெளி. தினமும் அப்படிப் போய் வருவது சாத்தியமில்லை. அதனால் கோண்டாவில் வீரசிங்கம் வீதியில் வீடு பார்க்கப்பட்டு, அங்கே ஒரு அறையில் இளங்குன்றன் தங்கி நின்று கற்கத் தொடங்கினான்.தனிமையை அதிகம் விரும்பியதாலேயே நண்பர்களைத் தவிர்த்து , இந்த வீட்டில் இளங்குன்றன் தங்கியிருந்தான். வாடகை வீட்டிலும் ஒரு வயதான பெண்மணி மட்டுமே.இது அவனது அமைதியான சூழலில் கற்கும் மனோபாவத்துக்கு பொருத்தமாக அமைந்தது.

### போனவன் வரவில்லை

விடுமுறை என்றால் வீட்டுக்கு வந்துவிடுவான். ரூமில் தனிமை விரும்பியாக இருக்கும் இளங்குன்றன் , ஊருக்கு வந்துவிட்டால் வேறுவிதமாக மாறிவிடுவான். நண்பர்கள் கூட்டத்தோடுதான் அவனது விடுமுறைப் பொழுதுகள் மகிழ்ச்சியோடு கழியும்.அப்படித்தான் அன்றும் வீட்டுக்கு வந்துவிட்டு நவம்பர் 16 ஆம் திகதி வீட்டில் இருந்து 'ரூமுக்கு' புறப்பட்டான்.

"கம்பஸில லெக்சர்ஸ் கூட இருக்கு, இண்டைக்கு இரவு ரூமிலதான் நிப்பன். நாளைக்கு ஹொஸ்பிட்டலுக்கு கிளினிக் போகவேணும்.

அதை முடிச்சுக்கொண்டு நாளைக்குப் பின்னேரம் தான் வீட்ட வருவன். நீங்கள் கோல் எடுக்க வேண்டாம்"

என்று சொல்லிப் போட்டுப் போன இளங்குன்றன் அதன் பின்னர் வரவேயில்லை.

அடுத்த நாள்.

அவரது சகோதரியின் கணவர் ( அத்தான்) நண்பர் ஒருவரின் வீட்டுக்கு யதேச்சையாகச் சென்றார். அப்போது அந்த நண்பருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. மறுமுனையில் பேசியவரின் குரலில் பதற்றம்

"உன்ர சிநேகிதன்ர மச்சான் கம்பஸிலையோ படிக்கிறான். அவன் நிக்கிற வீட்டில் ஏதோ சிக்கலாம். என்னெண்டு பார்" என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டார் அழைப்பெடுத்த அந்த இன்னொரு நண்பர்.

உடனேயே நண்பர் , அத்தானுக்குத் தகவலைச் சொல்ல, அவர் பதறியடித்துக் கொண்டு வீட்டாருக்குச் சொல்ல, இளங்குன்றனின் மூத்த சகோதரன் கோண்டாவிலுக்கு ஓடினார்.

அங்கே சென்ற பின்னர் தான் இளங்குன்றன் சடலமாக மீட்கப்பட்ட விடயம் தெரியவந்தது. தூக்கில் தொங்கிய சடலத்தையும், அறை இருந்த கோலத்தையும், இன்ன பிற விடயங்களையும் வைத்து " இது தற்கொலையே இல்லை. கொலைதான்" என்று சாதிக்கின்றனர் வீட்டார்.



இளங்குன்றன் இறுதியாக பதிவேற்றிய 'வட்ஸப்' புகைப்படம்


அறையினுள் காணப்பட்ட சடலம்

## குடும்பத்தாரின் சந்தேகங்கள்...

**சந்தேகம் -1**

இளங்குன்றனின் முழங்கால் மடிந்து நிலத்தில் முட்டிய நிலையிலேயே சடலம் கண்டுபிடிக்கப் பட்டது. தூக்கிட்ட கயிறு உடல் பாரத்துக்கு கீழிறங்கினாலும் கூட காலின் அடிப்பகுதிதான் கீழே முட்டுமே தவிர, இப்படி முழங்கால் மடிமளவுக்கு முட்டாது. அத்தோடு அவர் தூக்கிட்ட உயரம் கூட கால் நிலத்தில் முட்டும் அளவுதான். அப்படியானால் அவர் தூக்கிடும் போது கால் நிலத்தில் முட்டினால் எப்படி சாவு நிகழ முடியும்? தூக்கிட்ட பகுதியில் யன்னல் இருக்கிறது, தூக்கில் தொங்கும் போது அவர் அந்தரிக்கும் கணத்தில் தன்னையுமறியாமல் யன்னல் கம்பிகளைப் பிடித்திருப்பார். உயிர் பிரிந்திருக்காது. ஆனால் இங்கே அவர் யன்னல் கம்பிகளையே பிடிக்கவில்லையே அது ஏன்?

**சந்தேகம் -2**

17.11.2020 அன்று ( இளங்குன்றன் இறந்த தினம்) மதியம் . இளங்குன்றனின் துன்னாலை வீட்டுக்கு அதேபகுதியைச் சேர்ந்த மூன்று நண்பர்கள் வந்துள்ளார்கள்.

வந்தவர்கள் " இளங்குன்றன் நிற்கிறானா?" எனக் கேட்டுள்ளனர்.

"அவர் வகுப்புக்காக யாழ்ப்பாணத்தில் நிக்கிறார்.பின்னேரம் வந்துவிடுவார்" எனத் தாயார் கூறியுள்ளார் . அதன் பின்னர் வந்தவர்கள் எதுவுமே பேசாமல் சென்றுவிட்டனர். அப்படி வந்தவர்கள் ஏன் அப்படி உடனேயே ஒன்றும் பேசாமல் திரும்பிப் போனார்கள்?

**சந்தேகம் -3**

இளங்குன்றன் தங்கியிருந்த வீட்டுக்காரப் பெண்ணோ, சடலத்தைப் பார்வையிட்ட நண்பர்களோ அதனை இளங்குன்றனின் குடும்பத்தாருக்கு உடனே சொல்லவில்லை. இன்னொரு நபர் மூலமே குடும்பத்தாருக்கு தெரியவந்தது. ஏன் இளங்குன்றன் இறந்த செய்தியைச் சொல்லாமல் மறைத்தார்கள்?

→

இளங்குன்றன் தங்கி நின்ற வீட்டு உரிமையாளருடன் தொடர்பு கொண்டபோது அவர் தகவல் தர மறுத்துவிட்டார்.



## சந்தேகம்-4

போர்வையால் போர்த்திய நிலையிலேயே இளங்குன்றனின் உடல் தூக்கில் தொங்கியது. அதுவும் ஜன்னலோரமாகக் கட்டப்பட்ட கொடிக்கயிற்றின் ஒருமுனையில் தூக்கிடப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கயிற்றில் கட்டப்பட்ட கொடியில் இருந்த 'சொக்ஸ்' கீழே விழவேயில்லை. தூக்கில் தொங்கிய ஒருவர் இறுதிக்கணங்களில் மிக அதிகமாகவே துடித்திருப்பார். அப்போது கொடி அசைந்து அதில் உள்ள துணிகள் எல்லாம் கீழே விழாமல் இருந்திருக்காது. அப்படியிருக்கையில் அந்த சொக்ஸ் மட்டும் இளங்குன்றன் இறந்த பின்னும்,எப்படி கொடியிலேயே இருந்தது?

## சந்தேகம் -5

அறையின் ஒரமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய ரோச்லைட் உள்ளிட்ட பொருள்கள் அனைத்தும் சீராக மேசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அப்படிப் பழைய பொருள்களையெல்லாம் அடுக்கி வைப்பது இளங்குன்றனின் பழக்கம் இல்லை. எனவே அவற்றை சீராக அடுக்கி வைத்தது யார்?

## சந்தேகம் - 6

16 ஆம் திகதி இளங்குன்றன் சாப்பிட்டதை தான் கண்டேன் எனவும், கோயிலில் இருந்து கொண்டுவந்த வாழைப்பழத்தை அவனிடம் கொடுத்தேன் எனவும் வீட்டு உரிமையாளரான முதிய பெண் கூறியுள்ளார். ஆனால் பிரேத பரிசோதனையில் இளங்குன்றனின் குடலில் எந்தவொரு உணவும் இருக்கவில்லை. தண்ணீர் மட்டுமே குடலில் இருந்துள்ளது. இளங்குன்றன் அப்படியானால் சாப்பிட்டார் என வீட்டுக்காரப் பெண்மணி சொல்வது ஏன்?

## சந்தேகம் -7

இளங்குன்றனின் சடலம் மீட்கப்பட்ட அறையில் தோசைப் பார்சல் ஒன்று மேசையில் இருந்துள்ளது. ஆனால் பொதுவாகவே இல்னக்குன்றனுக்கு தோசை பிடிக்காது என்பதால் அவர் விரும்பிச் சாப்பிடுவதில்லை. அப்படியே வேறு உணவு கிடைக்காமல் தோசை சாப்பிடுவதாயினும் அவர் , அதற்கு இறைச்சிக் கறி கட்டிவந்தே சாப்பிடுவார். ஆனால் தனியே தோசை மட்டுமே இருந்தது. இறைச்சிக்கறி இல்லை. அப்படியானால் அது யார் கொண்டு வந்த பார்சல்?

## சந்தேகம் - 7

17 ஆம் திகதி பகல் பலமுறை கூப்பிட்டு, கதவைத் தட்டியும் கதவு திறக்கப்படவில்லை என வீட்டுக்காரப் பெண்மணி கூறுகிறார்.

அதன் பின்னரே இளங்குன்றனின் நண்பர்கள் வந்து கதவை உதைத்துத் தள்ளி, உள்ளே சென்று பார்த்திருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு உதைத்து தள்ளிய போது, உட்புறமாக கதவு தாழிடப்பட்டிருந்தால் அல்லது பூட்டப்பட்டிருந்தால் கதவின் பூட்டு, திறாங்கு என்பவற்றில் சிறு சேதமாவது ஏற்பட்டிருக்கும்.

ஆனால் ஒரு சிறுகீறலோ, நெளிவோ அவற்றில் இல்லை. அப்படியானால் கதவு உட்புறமாகப் பூட்டப்பட்டி ருக்கவில்லையா?

## நண்பர்கள் சொன்னவை-1

இளங்குன்றன் பற்றியும், அவரது மரணம் தொடர்பிலும் நண்பர்கள் சொல்வது வீட்டாரின் சில சந்தேகங்களுக்கான பதில்களாகவும் இருக்கின்றன.

"பரீட்சையில் சித்தியடையாததாலேயே அவர் இப்படியான முடிவை எடுத்தார் என ஒரு கதை பரவியது . ஆனால் அது தவறு. அவர் பாஸ் பண்ணியிருந்தார். மருத்துவக் கல்வி கடும் இறுக்கமானது. விடுமுறை இல்லை .

ஒய்வு நேரம் குறைவு. அத்தோடு பரீட்சைக்காக பாடமாக்க வேண்டிய விடயங்கள் என இருப்பதால் மன அழுத்தமும் கூடுதலாக எங்களுக்கு ஏற்படும். அப்படியான ஒரு அழுத்தம் இளங்குன்றனின் முடிவுக்கு காரணியாக அமையலாம். இரத்த மாதிரி, மற்றும் அவரின் தொலைபேசி என்பவற்றை பரிசோதனைக்கு உட்படுத்தினால் உண்மையைக் கண்டறியலாம்"

## நண்பர்கள் சொன்னவை -2

"2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமூக வலைத்தளங்களில் தற்கொலை செய்வதைச் சித்திரிக்கும் படங்களை இளங்குன்றன் பகிர்ந்துள்ளார்.

அவனுக்கு எந்தப் பெண் மீதும் காதல் இல்லை. ஆனால் வேடிக்கைக்காக அப்படி தனக்குக் காதல் இருப்பதாக மற்றவர்களை நம்பச் செய்வது போல, காதல் பதிவுகளை இடுவார். எல்லோருடனும் நன்றாகப் பழகுவார். ஆனால் தனிப்பட்ட விடயங்களை பகிர்ந்து கொள்ள மாட்டார்.

எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை.

"பீட்சா சாப்பிடுவம் வா மச்சான்" எனக் கேட்டால், "அது கோர்ப்பிரேட் சாப்பாடு. எனக்கு வேண்டாம் " என்று மறுத்துவிடுவார். பெப்சி போன்ற குளிர்பானங்களையும் அவர் அருந்துவதில்லை.

ஏலியன்கள், திகில் , துப்பறிதல் தொடர்பான வீடியோக்களை ஆர்வத்தோடு பார்ப்பார்."

## நண்பர்கள் சொன்னவை-3

"17.11.2020 காலை வகுப்புக்கு இளங்குன்றன் வரவில்லை. தற்போது கிளினிக் பகுதியில் கல்வி கற்பதால் 100 வீத வரவு இருக்க வேண்டும். இது கட்டாயம். மிக அவசரமான தேவை என்றால் மட்டுமே விடுமுறை கிடைக்கும். வரவு சீராக இல்லை என்றால் கல்வியைத் தொடர முடியாத நிலை.. திரும்பி செய்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அன்று எங்களுக்கு சத்திரசிகிச்சைப் பகுதியில் பயிற்சி இருந்தது. ஆனால் இளங்குன்றன் வரவில்லை என்பதால் அவனது தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தோம். ஆனால் பதில் இல்லை. 11.30 மணியளவில் நண்பன் ஒருவன் இளங்குன்றன் தனது வட்சப் புரபைல் போட்டோவை மாற்றியிருந்ததை அவதானித்து எமக்குக் காட்டினான். அதில் மூளையால் வெளிவரும் கயிறு தூக்காக மாறி கழுத்தை இறுக்குவது போன்ற ஒரு படம் இருந்தது. இதனால் எங்களுக்கு அச்சம் எழுந்தது.

உடனேயே அவனது ஊரில் உள்ள எங்களுக்கு தெரிந்த நண்பர்களுக்கு போன் செய்தோம்.

" இளங்குன்றன் இண்டைக்கு கிளாஸுக்கு வரேலை. போனும் எடுக்கிறானில்லை. வட்ஸப்பில தூக்குப் போடுற படம் ஒண்டைப் புரபைல் பிக்சரா போட்டிருக்கிறான். ஒருக்கா வீட்ட நிக்கிறானோ எண்டு பாருங்கோடா" என்று சொன்னோம். அவர்களும் போய் பார்த்தார்கள். அங்கு அவன் இல்லை. அதனால் வீட்டுக்காரருக்கு எதுவும் சொல்லாமல் திரும்பி விட்டார்கள்"

## நண்பர்கள் சொன்னவை -4

வீட்டில் இளங்குன்றன் இல்லை என்பதால் எங்கள் பயம் அதிகரித்தது. அதனால் அவன் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று பார்ப்போம் என நினைத்து எங்களில் இருவர் அங்கு சென்றோம். அப்போது வீட்டுக் காணிக்குள் மோட்டார் சைக்கிள் நின்றது. வீட்டுக்கார அம்மாவிடம் கேட்டோம் .

" விடியவில இருந்து கதவைத் தட்டுறன் திறக்கவில்லை" என அவர் கூறினார். உடனே பதற்றத்து டன் யன்னலை திறக்க முயற்சித்தும் முடியவில்லை. மேல் பகுதியில் உள்ள ஓட்டைக்கல்லால் அவதானிக்க முற்பட்டும் எதுவும் தெரியவில்லை. அதன் பின்னரே கதவை உந்தித் தள்ள, அது திறந்துகொண்டது. உள்ளே சென்று பார்த்த போது கொடி கட்டியிருந்த கயிற்றில் தூங்கிக்கொண்டிருந்த மீதிக் கயிற்றில் இளங்குன்றன் தூக்கில் தொங்கிய படி இருந்தான். உடனே சுவாசத்தையும் நாடித் துடிப்பையும் அவதானித்த போது உயிர் இல்லை என்பது தெரிந்தது. உடல் குளிர்ந்து விட்டது. பின்னர் ஏனைய நண்பர்களுக்கு தெரியப்படுத்த அவர்களும் வந்து சேர்ந்தனர்.

அந்தச் சமயத்தில் இளங்குன்றனின் சகோதரி அழைப்பெடுத்தபோதும், எப்படி அவன் இறந்ததைச் சொல்வதென்ற தயக்கத்திலும் பயத்திலும் எதுவும் சொல்லவில்லை. பின்னர் இன்னொரு நண்பர் மூலம் இளங்குன்றனின் அத்தானுக்கு தெரியப்படுத்தினோம். "

## அறியாக் காரணம்

இளங்குன்றன் தற்கொலை செய்து கொண்டார் எனில், அதற்கு என்ன காரணம் என இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவருக்கு எவர் மீதும் காதல் இல்லை..அதனால் சாவுக்கு காதல் தோல்வி காரணமில்லை. பரீட்சையிலும் பாஸ். ஆகவே பரீட்சைத் தோல்வியும் காரணமில்லை. மன அழுத்தம் இருந்தால், அது குடும்பத்தாருக்கு ஓரளவேனும் தெரிந்திருக்கும். அப்படியானால் என்னதான் காரணம்? இன்னும் துலங்க மறுக்கிறது அந்த மர்மம்.

### இன்னும் சில சாவுகள்

மன்னாரைச் சேர்ந்த மருத்துவ பீட நான்காம் வருட மாணவன் கியூமன் என்ற மருத்துவ பீட மாணவருக்கு 03.11. 2019 அன்று பெற்றோர் தொலைபேசியில் தொடர்புகொண்டும் பதில் இல்லாததால், தெரிந்தவர் ஒருவரை அனுப்பி, விடுதி அறை திறக்கப்பட்டு பார்த்த போது அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

2018 ஆம் ஆண்டு வவுனியாவைச் சேர்ந்த மருத்துவபீட மாணவனான சாமுவேல் என்பவரும் இதே போன்று தற்கொலை செய்து கொண்டார். இந்த மரணங்களுக்கு மன அழுத்தமே காரணம் எனச் சொல்லப்பட்டது.

யாழ். மருத்துவ பீட மாணவர்கள் மட்டும் ஏன் மன அழுத்தம் ஏற்பட்டு தற்கொலை செய்கின்றார்கள்? என்று கேள்வி எழுப்புகின்றனர் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினர்.

கோகுலராகவன்



பளையில் சிறு வயதில் பெரிய மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைத்திருந்தது. கோயிலடியிலோ, வீடு வேயும் போதோ, சூடு அடிக்கும் இடத்திலோ இந்த வாய்ப்புக்கள் கிடைத்தன . நல்ல பழங்கதைகள் பேசவும், பழைய வரலாறுகளை அறியவும் இதனால் முடிந்தது. அவர்களில் அனேகம் பேர் நல்ல கதை சொல்லிகள். பழமொழிகள், உபகதைகள் (அம்புலிமாமாவில் வரும் கதைகள் போன்றவை) இந்த உரையாடலில் கிடைக்கும். இவ்வாறு கிடைத்த மூன்று கதைகளை இங்கே சொல்லலாம். இவற்றைச் சொன்னவர்களை எனக்கு ஞாபகம் இல்லை. கதைகள் மட்டும் நல்ல ஞாபகம். அர்த்தம் செறிந்த கதைகள்.



# குழைக்காட்டு கதைகள் II

### கதை -I

இரவிலே வேட்டைக்குச் சென்ற மனிதன் ஒருவன் காட்டில் நடு இரவில் நாகபாம்பு தீண்டியதால், வைத்தியரால் காப்பாற்ற முடியாமல் இரண்டு நாள்களின் பின்னர் இறந்து போய்விட்டான். மறுநாள் இறுதிக் கிரியைக்காக அவனது உடலை இடுகாடு நோக்கி எடுத்துச் சென்றார்கள். வழியில் ஒரு வாய்க்காலை கடந்து போக வேண்டும். சிறிய அளவில் அதற்குள் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீர்க் கரையில் மண்புழுக்கள் வசித்து வந்தன. மேளச் சத்தம் கேட்டபோது மண்புழுக்கள் எட்டிப் பார்த்தன. மரண ஊர்வலம் என்பதை உணர்ந்து கொண்டன. அதிலே தடிமனான மண்புழு ஒன்று ஊர்வல முடிவில் வந்த மனிதனிடம்
"எப்படி உவர் செத்தவர்?"என்று கேட்டது.
"அவனோ? பாவம், நாகபாம்பு கடிச்சு செத்துப் போனான்"
அந்த மண்புழு ஒரு தடவை தலையை சிலிப்பிவிட்டு, சொன்னதாம், "எங்கடை ஆட்களோடை கொழுவினா உப்பிடித்தான் நடக்கும்"



### கதை II

வயோதிபர்களை இளையவர்கள் நையாண்டி பேசி வம்புக்கு இழுப்பது நாம் அடிக்கடி காணும் நிகழ்ச்சிதான். தாமும் வயது போய் இவ்வாறு நடத்தப்படுவோம் என்பதை உணரும்போது அவர்களுக்கு வயது போய்விடும். ஒரு காணியில் மிகவும் வயது போன பலாமரம் இருந்தது. அதற்கு பச்சையாக ஒரேயொரு கொப்பே இருந்தது. இன்னும் கொஞ்ச நாள்களில் பட்டுப்போய் விடலாம்.அதில் ஓரிரண்டு காய்களே காய்க்கும். இம்முறையும் அப்படித்தான். அதன் அருகே மிக இளைய வெள்ளைக்கொழும்பான் மாமரம். அது இம்முறை கொப்பாயிரம் குலையாயிரம் என பெரிய அளவில் காய்த்திருந்தது.
"ஏய் கிழட்டு பலாவே, என்னைப் பார் என் காய்களைப் பார். முதலாளி வந்தால் என்னைப் போற்றுவார். உன்னைத் தறிப்பார்"
மாமரத்தின் பேச்சில் திமிரோ திமிர்.
பலாமரம் பெருமூச்சு விட்டுக் கொண்டது. மாங்காய்கள் நன்கு முற்றின. பழுக்கவும் தொடங்கின. ஒருநாள் ஐம்பதுக்கு மேற்பட்ட குரங்குகள் மாமரத்தை நோக்கி வந்தன. காய்களைப் பறித்து உண்ணத் தொடங்கியதோடு கொப்புக்கு கொப்பு பாயவும் கொப்புக்களை உலுப்பவும் தொடங்கின. ஒரு அரை மணியில் மரத்தில் ஒரு காயும் இல்லை, பிஞ்சும் இல்லை. மாமரம் மொட்டையாக நின்று கண்ணீர் விட்டது.
பத்து நாள் கழித்து காணிக்காரர் காணிக்கு வந்தார். பலாக்காய் முற்றியதால் அதை வெட்டிக் கொண்டு மாமரத்தை திரும்பியும் பார்க்காமல் போய்விட்டார். பலாமரம் மாமரத்துக்கு ஆறுதல் சொல்லத் தொடங்கியது.

### கதை - III

முதலைகளை ஆற்று முதலை, குளத்து முதலை என இரு வகைப்படுத்திக் கொள்ளலாம் . ஆற்று முதலை பெரிய வகை மிருகங்களையும் மனிதர்களையும் தாக்கி பிடிக்கக் கூடியது. "செல்லிச்சி வாய்க்கால்" என்ற வாய்க்கால் அல்லிப்பளை முடிவில் இருக்கின்றது. மாரி காலத்தில் பாயக்கூடிய வாய்க்கால். இதனுள்ளே 'இடி விழுந்த குண்டு' என்ற ஆழமான பகுதி இருக்கின்றது. இதனுள் முதலைகள் இருப்பதாகப் பேசிக் கொள்வார்கள். ஒரு தடவை கனகப்பா இடி விழுந்த குண்டில் கால் வைத்து நீரில் மூழ்கி, மிதந்து வேரில் எட்டிப் பிடித்தபடியால் தப்பிப் பிழைத்துக் கொண்டார். சில வேளை இந்தக் கதை அவர் சொன்னதாக இருக்கலாம்.
அந்த இடி விழுந்த குண்டில் ஒரு தடவை முதலையொன்று எருமை மாட்டை பிடித்துக் கொன்றுவிட்டது. முதலை தான் பிடித்த மிருகத்தை, கொஞ்ச நாள் அழுக விட்ட பின்னரே சாப்பிடும் என்று படிக்கிற காலத்தில் பிள்ளைகள் சொல்வார்கள். அந்த எருமை மாட்டையும் அவ்வாறே விட்டு விட்டு முதலை போய் விட்டது. அப்போது மிதந்து கொண்டிருந்த அந்த எருமை மாட்டில் ஐந்தாறு தவளைகள் ஏறி அமர்ந்து கொண்டன. அமர்ந்தவை பேசாமல் அமர்ந்து கொண்டு இருக்கலாம்.
அவைக்கும் வீரப் பிரதாபம் பேச ஆசை வந்துவிட்டது. அவை இப்படிச் சொல்லிக் கொண்டன. "நாங்களும் சில பல முதலைகளும் சேர்ந்து இந்த எருமை மாட்டைப் பிடித்தோம்"

# அவசரமாக ஒரு கடிதாசி!

## நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு..!



அஸ்ஸலாமு அலைக்கும் ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு"
நீங்கள் இப்ப ' ஜனாஸாவை எரிக்க விடாட்டி ஆயுதப் போர் வெடிக்கும்'எண்டு துள்ளுறதைப் பாத்த உடனை எனக்குப் பல பழைய ஞாபகங்கள் வந்திட்டுது காதுக்கை வண்டு வந்து இரையிறமாதிரி கிபிர் சத்தமும், கொத்துக் குண்டு அடிக்கிற சத்தமும், பீரங்கியள் முழங்கிற மாதிரியும் அதைத் தொடர்ந்து சனம் கத்திக் குளறிக்கொண்டு ஓடுறமாதிரியும் எண்டு பல காட்சிகளுக்கை போய் வந்திட்டன். நான் கண்ட காட்சியள் வேறை எங்கையும் இல்லை, இஞ்சை இலங்கையிலை எங்கடை மண்ணிலைதான் நடந்தது. அதை நினைச்ச உடனை என்ரை ஈரல் குலை நடுங்கத் துவங்கிவிட்டுது. அதுதான் அவசரமா இந்தக் கடுதாசியை எழுதிறன்.

ஈஸ்ரர் குண்டு வெடிப்பும் அதாலை அப்பாவி முஸ்லிம்களுக்கு நடந்த பிரச்சினையளும், அவைக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் இன்னும் முடிஞ்சபாடில்லை. கொழும்பிலை சாதாரண அப்பாவி முஸ்லிம் பொம்பிளையளை சிங்கள ஓட்டோக்காரர் ஏத்தமாட்டன் எண்டு சொன்னதும், சிங்களச் சனம் தங்கடை சுப்பர்மாக்கற்றுக்கை முஸ்லிம் ஆக்களை உள்ளை போக விடமாட்டம் எண்டு சொல்லி மறிச்சதும் எனக்கு நல்ல ஞாபகம். அது உங்கடை ஞாபகத்துக்கும் வரவேணும்.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்திலை முஸ்லிம் சனத்தோடை பிக்குமார் ராத்திக்கொண்டு நிக்கினம். வழமையா சிங்களச் சனத்துக்கு உந்த ஆயுதம் ஏந்திறதெண்ட கதை பிடிக்காது. அதைவிட உப்பிடி ஆரேன் சொல்லுவினம் அதை வைச்சுக் கொளுத்தாடு பிடிக்கலாம் எண்டு பிக்குமாரும் சந்தர்ப்பத்தைப் பாத்துக்கொண்டு நிக்கினம். இந்தநேரம் நீங்கள் இப்பிடிச் சொல்லி முஸ்லிம்களுக்கு வில்லங்கத்தை விலைக்கு வாங்கிக் குடுத்திடுவியளோ எண்டு எனக்குப் பயமாய்க்கிடக்கு.

உப்பிடித்தான் தமிழ் பெடியள் வெறுங்கையோடை நிக்கேக்கை தமிழ் அரசியல்வாதியள் உரிமை தராட்டில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவினம் எண்டு வெறுவாய் சப்பப்போய் அதை நம்பிப் பெடியள் சண்டைப்பிடிக்கத் துவங்கி கடைசியா லட்சக்கணக்கான அப்பாவிப் பொது சனம்தான் செத்தது. அது உங்களுக்கு நினைவிருக்குமெண்டு நம்பிறன்.

நீங்கள் சேந்திருக்கிற அரசாங்கத்திலை உள்ளவைக்கு தமிழாக்களோ இல்லாட்டி முஸ்லிம் ஆக்களோ முசுப்பாத்திக்குக் கூட ஆயுதம் ஏந்துவம் எண்டு சொல்லுறது பிடிப்பில்லை.

பிறகு அவையின்ரை பக்கத்திலை நிண்டு கொண்டு நீங்கள் இப்பிடிச் சொல்லி இருக்கிறியள். அதையே எங்கட தமிழ் அரசியல்வாதியள் சொல்லி இருந்தால், இப்ப அவைக்கு மேல ஆயிரத்தெட்டு வழக்கு போட்டிருப்பியள். ஆனால் உங்களை எதிர்த்து ஒரு சிங்கள அரசியல்வாதி கூட ஒண்டும் சொல்லேலையே. அதுதான் எனக்குச் சமசியமாக் கிடக்கு .

எங்கடை தமிழ் அரசியல்வாதியளும் உப்பிடித்தான் செய்யிறவை. வயதுபோன நேரத்திலை வீட்டிலை உள்ள ஓலைச்சாரை வாரிற காம்புச் சத்தகத்தைக் கூடத் தூக்கத் திராணி இருக்காது. ஆனால் பார்லிமெண்டிலை துப்பாக்கி தூக்கிப் போராடுவோம் எண்டு வாய் கிழியக் கத்துவினம். உப்பிடிப் போலியாக் கத்திக்கத்தி தமிழ் சனத்தைப் பேய்க்காட்டிக் கொண்டு இருந்த அதேநேரம் அரசாங்கத்திட்டை இருந்து சலுகைகளை வேண்டிக் கொண்டு சொகுசா இருந்தவையே ஒழிய, காரியம் நடக்கேல்லை. அதாலை இப்ப நாங்கள் நடு றோட்டிலை நிக்கிறம். அவ்வளவுதான்.

அது மாதிரி நீங்களும் இப்பிடி பராசக்திப் பட வசனம் மாதிரிப் பேசி உசுப்பேத்த, உங்கட முஸ்லிம் இளந்தாரியள் நீங்கள் சொன்னதை உண்மை எண்டு நம்பி ஆயுதங்களைத் தேடித்திரியப் போகினம்.

உங்கடை கோரிக்கை சரி எண்டு தெரிஞ்சால் உங்களுக்கையும் எத்தினை கறுத்தக்கோட்டுக்காரர் இருக்கினம். வழக்கைப் போடலாம். அதுக்குள்ளாலை ஞாயம் கிடைக்காட்டில் களத்திலை இறங்கி வேறைமாதிரிப் போராடலாம். எங்கடை சனம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக இப்ப ஒரு வருசத்துக்கு மேலை கொடி பிடிச்சுப் போராடிக்கொண்டு இருக்கினம். நீதி கிடைச்சதோ இல்லையோ, அது ஒரு நம்பிக்கை.


ஒரு நாட்டின்ர நீதியமைச்சரே நீதி கேட்டு , இப்பிடி ஆயுதம் தூக்குவம் எண்டுறது இலங்கையில மட்டும்தான் நடக்கும்.ஆனபடியாலை நடக்கிறதைப் பாருங்கோ. இப்பிடிச் சனத்தைப் பேயராக்க வேண்டாம்..

நன்றி

தங்கள் மேல் அதிபட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.

# என்னுடைய சிறிய மலர்

○ ம.பா. மகாலிங்கசிவம்



## தேன் கூடு

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன். ஏனெனில், அதுபேச வேண்டிய பொருள் ஆதலால். காலத்தின் தேவையும் ஆதலால்.

பெண்களைப் போகப் பொருளாகப் பார்ப்பவரின் எண்ணிக்கை, இளைஞர் தொடக்கம் முதியவர் வரை அதிகரித்து வருவதைப் பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் வருகின்ற செய்திகள் எண்பிக்கின்றன. இத்தகையோரின் பசிக்கு, அதீத காம உணர்வுக்கு மூன்று வயதுக் குழந்தையிலிருந்து எழுபது, எண்பது வயது மூதாட்டிகள் வரை தப்பவில்லை என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன. இப்போது தப்பிப் பாதுகாப்பாக இருக்கும் பெண்குழந்தை தாயின் கருவறையிலுள்ள குழந்தை மாத்திரமே. விஞ்ஞான முன்னேற்றத்தின் துணை கொண்டு அதற்கும் ஏதாவது "வழி பண்ணி" விடுவார்களோ? என்ற அச்சமும் எழத்தான் செய்கிறது. ஆரம்பத்தில் இச் செயற்பாடு கற்பழிப்பு எனப்பட்டது.

மனம் சம்பந்தப்படாத விடயம் கற்பழிப்பு ஆகாது எனக் கருதப்பட்டு, பின்னர் பாலியல் வல்லுறவு எனப்பட்டது. தற்போது பாலியல் துஷ்பிரயோகம் என்னும் பதத்தால் அழைக்கப்படுகிறது. பதங்கள் மாறியபோதும், பாதகங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துத்தான் செல்கிறது.

எந்த உறவால் இத்தகைய துஷ்பிரயோகம் இடம்பெறுமென்பதை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாததாக உள்ளது. தந்தை என்ற உறவும் இதற்குள் அடங்குவதுதான் மிகக் கொடுமையானது.

போதைப்பழக்கமுள்ள தந்தை , தாய் வெளிநாட்டுப் பணி யிலீடுபட்டுள்ள நிலையில், கூட இருக்கும் தந்தையும் தொடர்பான தகவல்களே அடிக்கடி வெளிவருகின்றன. இத்தகைய இலட்சத்தில் ஒரு சம்பவம் பற்றிய பத்திரிகைச் செய்தி, உண்மையான தந்தைப் பாசத்தையும் சந்தேகப்பட வைத்து விடுமோ என்ற அச்சமும் மனதில் எழத்தான் செய்கிறது. பெற்றோரினது விழிப்புணர்வும் பிள்ளைகளுக்கு சரியான அறிவுறுத்தல்களை வழங்குவதுமே இந்த நிலையிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கக் கூடியவை.

ஔவையின் "என்னுடைய சிறிய மலர்" என்னும் கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது. ஈழத்துக் கவிதை ஆளுமைகளான மகாகவி து.உருத்திரமூர்த்தியின் மகளாகவும், சேரனின் தங்கையாகவும் பிறந்தவர் ஔவை. தமிழர் விடுதலைப் போராட்டம், பெண்ணிய இயக்கங்கள் என்பவற்றுடன் நீண்ட தொடர்புடைய ஔவை தற்போது கனடாவில் வசித்து வருகிறார். "எல்லை கடத்தல்", "எதை நினைத்தழுவதும் சாத்தியமில்லை" என்னும் இரு கவிதைத் தொகுதிகளை வெளியிட்டவர். பெண்ணியக் கருத்துக்களைக் கொண்ட ஒன்பது நாடகங்களை மேடையேற்றி உள்ளார்.

அவரது 'என்னுடைய சிறிய மலர்' என்னும் இக் கவிதையில் தமிழர் மரபில் "இடக்கர் அடக்கர்" களாக, சொல்லக் கூடாது என்று தடை செய்யப்பட்ட சில விடயங்கள் ஆரோக்ரோஷத்துடன் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றன. இனங்காணப்பட்ட பருந்திடம் இருந்து குஞ்சைக் காப்பாற்றப் போராடும் தாய்க் கோழியின் ஆக்ரோஷத்தை நீங்கள் பார்த்திருந்தால், தன் பிள்ளையைக் குதறப் போகும் பருந்து எப்போது, எந்தத் திசையிலிருந்து எத்தைகைய உறவிலிருந்து வருமென்பதை அறியாது தன் பிள்ளையைப் பாதுகாக்கப் போராடும் தாயின் அதீத ஆக்ரோஷத்தை நீங்கள் புரிந்துகொள்ளலாம். இனி நேரடியாகவே கவிதைக்குள் செல்லுங்கள்.




சிறிய மலராய் விரிந்து மலரும்
என் மகளுக்கு எப்படிக் காட்டுவேன்
இந்த உலகை
மாசு மறுவற்ற பச்சைக் குழந்தை
காற்றை எல்லாம் தென்றலென்றெண்ணி
கற்பனையில் சஞ்சரித்து
ஒலியெல்லாம் சங்கீதமென
வாழ்வை இனிதாகவே காணத்தெரிந்த
கன்றுக்குட்டி
என் சிறு பெண்
வாழ்வின் முழுமைக்கு
பெண் குழந்தை வேண்டுமென்று
பேரவாக் கொண்டிருந்த என் தாய்மை

பிறந்த நாள் முதலாய்
இளஞ் சிவப்பு வர்ணத்தில்
சட்டைதைத்து
பொட்டு வைத்து காதுகுத்தி
பெண்ணாய் அவளை நினைத்த
என் தாய்மை
பெண்ணென்று பிறந்ததற்காய்
பெருமைப்பட வேண்டுமென்று
கனவுகளில் நினைத்திருந்த
என் தாய்மை
சிறகொடிக்கப்பட்ட ஒரு
ஒற்றைத் தும்பியாய்
திகைத்து போய் மிரண்டு கிடக்கிறது.

வக்கிரம் நிறைந்த விலங்குணர்வின்
குரூரம் நிறைந்த கயமையின் முன்னால்
சிதறிப் போயிற்று சில்லம் பல்லமாக
சிதறிப் போயிற்று
என மகளுக்கு
எப்படிக் காட்டுவேன்
இந்த உலகை
மூன்று வயதினும்
பால் முலையருந்தும் பவளவாய்க் குருத்துக்கள்
கொஞ்சி குலவி
நிலாக் காட்டச் சிரிக்கும்
சின்ன வயதிலும்
ஆண் குறிகளால் துளைக்கப்படுவதை
எப்படிக் காட்டுவேன்
அள்ளி அணைக்கின்ற அப்பாவோ
ஆசையுடன் கொஞ்சுகின்ற மாமாவோ ஆயினும்
அடி வயிற்றில் துளையிடும்
ஆண்குறியர்களாகிக் போய்விடக் கூடிய
இந்த உலகை
எப்படிக் காட்டுவேன்.

சூழவுள்ள உலகம் முழுவதும்
விறைத்துப்போன
ஆண்குறிகளாய்
அச்சம் தருவதை
எப்படித் தவிர்ப்பேன்
காற்றெல்லாம் தென்றலென்றும்
ஒலியெல்லாம் கீதமென்றும் எண்ணியபடி
சிறகுகளை அகல விரித்து
சிறகடிக்க முடியாது என் பெண்ணே
வெந்து புண்ணாய்
வலியெடுக்கும் இதயத்துடன்
வாழ்தலும் முடியாது
எழு !

உள்ளே அனலாய்
எரிந்து கொண்டிருக்கும்
பூமியின் வடிவாய்
விரித்தெழு



# சின்னப்புவின் குறும்புகள்

வெள்ளிப்பிள்ளையின் தென்னையில் பத்து வருடமாக பாளை வரவில்லை. சின்னப்பு வேறு மரத்தில் இருந்த பாளையை வெட்டி அந்த மரத்தில் செருகிப் போட்டு அவவுக்குக்காட்டி "அங்க ப்பாரணை, பாளை வந்திட்டுது" என்று காட்டினார். அந்த மனுசியும் அதை உண்மையென்று நம்பி, தென்னைக்கு பொங்கியிருக்கிறா. அந்தப் பொங்கலைச் சின்னப்பு சாப்பிட்டு, ஒரு கிழமையில் அந்தப் பாளை வாடி வதங்கிக். கீழே விழுந்துவிட்டது.

சின்னப்புவின் வாட்டர் பம்ப்பை வாடகைக்கு பிடித்து ஒருவர் தன் தோட்டத்துக்கு இறைப்பித்தார். இறைப்பு முடிந்தது. அப்போது சின்னப்பு தூரத்தே நின்று, மந்திரம் ஓதுவது போல "சூ .... க்ரீம் ...க்ரீம்" எனக் கையை ஆட்டிச் சத்தம் போட்டார். மெசின் நின்றுவிட்டது. தோட்டக்காரருக்கு ஒரே அதிசயம். " டேய் உவன் சின்னப்புவுக்கு மந்திரமெல்லாம் தெரியுமடா, மிசினைக் கூட மந்திரம்ம் சொல்லி நிப்பாட்டுறான்,. என்ரை கண்ணால கண்டன்" என காண்போருக்கெல்லாம் சொல்லியிருக்கிறார். ஆனால் மிசினில் கொஞ்ச நேரத்துக்கு முதலே சின்னப்பு, எண்ணெயை நிப்பாட்டி விட்டு மந்திரம் போடுவது போல் பாசாங்கு செய்யவும், அது நிற்கவும் சரியாக இருந்தது என்பது அவருக்கு கனகாலத்துக்குப் பிறகே தெரியவந்தது.

ஊரில நல்லம்மாவுக்கும் சின்னப்புவுக்கும் ஆகாது. நெடுகச் சண்டைதான். அவவைப் பழி தீர்க்க சின்னப்பு கனகாலம் காத்திருந்தார்.

ஒருநாள் ரவுணுக்கு போக பஸ்ஸில் ஏறினார். ஆனால் அண்டைக்கு பஸ்ஸுக்கு வர நல்லம்மாக்கு நேரம் போட்டுது. அவா "பஸ்ஸை நிப்பாட்டுங்கோ" என்று இறுக்கி கத்திக்கொண்டு பஸ்ஸுக்கு பின்னால் ஓடி வந்தா. அப்போது சின்னப்பு கொண்டக்டருக்குச் சொன்னார் " உந்த மனசிக்கு விசர். இப்படி பஸ்ஸைக் கலைக்கிறதுதான் ஆளுக்கு வேலை. தப்பித்தவறி பஸ்ஸில ஏத்தினா இஞ்ச இருக்கிற ஆக்களுக்கு அடிக்கத் தொடங்கியிடும்" .

அதைக் கேட்ட கொண்டக்டர் பஸ்ஸை நிப்பாட்டாமல் எடுத்துக் கொண்டு போட்டார். ரவுணால சின்னப்பு திரும்பி வரேக்க, நல்லம்மா விளக்குமாத்தால அடிக்கக் கலைச்சது வேறை கதை.

**ச.வாரித்தம்பி**
கைதடி மேற்கு



பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்

# ஒற்றை வெளிச்சத்துக்காக காத்திருத்தல்

தருமராசா அஜந்தகுமார்



புதிய வைரஸ் கிருமியின் தாக்கம் உலகத்தையே தலைகீழாகப் புரட்டிவிட்டது. உலகத்தின் தலைக்கணம் இல்லாமல்போய் வாழ்வின் வெறுமை பாலையைப் போலச் சூழ்ந்துவிட்டது. ஏகாதிபத்தியமும் வல்லரசுகளும் தமது வால்களைச் சற்றுச் சுருட்டிக் கொள்ளும் விந்தை நிகழ்ந்தது. உலகம் என்றால் விரிந்து பரந்தது என்ற எண்ணத்தில் கூத்தாடிய விஞ்ஞான உலகம் ஒரு பூனையைப் போல கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிடும் காலம் காலடியில் வந்துநின்றது.

குய்யோ முறையோ என்று அலறிக்கொண்டிருந்த ஒரு வகுப்பறை, அதிபரின் வருகையின் போது குண்டூசி விழுந்தாலும் கேட்கும் அமைதிக்குத் திரும்புவது போல், வைரஸின் வருகையின் கதவுகள் இறுக்கச் சாத்திக் கொள்ள உலகம் மோனத்தவத்தில் மூழ்கியது. உலகத்தின் இரைச்சலும் ஆரவாரமும் யாருக்கோ வேண்டாததாக இருந்திருக்கின்றது. யாரோ ஒருவரின் அமைதி உலகத்தை நாம் கெடுத்திருக்கிறோம் போல. யாதும் ஊரே என்ற தத்துவத்தை புதிய வைரஸ் உணர வைத்தது.

இராமன், இராவணனோடு போர் தொடுக்கும் வியூகம் பற்றிச் சிந்திப்பதற்காக, தனுஸ்கோடி கடற்கரையில் ஆலமரம் ஒன்றின் கீழ் அமர்கின்றான். அப்பொழுது பறவைகளின் இரைச்சல் அவன் சிந்தனையைச் சிதறடிக்கின்றது. எனவே அந்தப் பறவைகளை ஒலியெழுப்பாமல் தடுக்கின்றான். சத்தமிட்டே பழகிய பறவைகள் இராமனின் கட்டளையால் அமைதியாகின. இராமன் தனது சிந்தனையாம் சிறகினிலே இலங்கைக்குச் சென்றுகொண்டிருந்தான். இந்தச் சம்பவத்தை அகநானூற்றின் 70 ஆவது பாடலில் ஊரின் அலரை(பழிச்சொல்) அடக்குவதற்குத் திருமணம் எவ்வாறு பயன்படும் என்பதற்கு உவமையாகப் பயன்படுத்தியுள்ளார் புலவர்.

நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்
பலரும் ஆங்(கு)அறிந்தனர் மன்னே இனியே
வதுவை கூடிய பின்றை....

வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்குஇரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்(கு) அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்(று)இவ் அழுங்கல் ஊரே.

(அகநானூறு:70:517)

இராமன் ஆலமரத்துப் பறவைகளை அமைதியாக்கிய சம்பவம் வான்மீகி இராமாயணத்தில் வேறுவகையில் புலப்படுத்தப்படுகின்றது. கடலைத் தாண்டிச் செல்வதற்கு முயன்ற இராமன் அந்த இரைச்சல்மிக்க கடலை எவ்வாறு அமைதியாக்கிப் பணிய வைத்தான் என்று வான்மீகி கூறுகின்றார். “வடமொழியில் (6:21) இராமன் இலங்கையின்மேல் படையெடுக்கும் முன் கடலுக்கு வணக்கம் செலுத்திவிட்டுக் கரையில் தருப்பைப் புற்படுக்கையில் மூன்று பகலும் மூன்று இரவும் படுத்துறங்கியபின் மீண்டும் கடலை வணங்குகிறான். அப்போதும் கடல் அடங்கி இணங்காதிருக்கவும் தன் வில்லில் நான்முகன் கொடுத்த அம்பைத் (பிரமாத்திரம்) தொடுத்து அதை வறண்டு போகுமாறு அச்சுறுத்தவும் கடல் இராமனின் விருப்பத்துக்கு இணங்குகிறது.” இராமன் ஆலமரத்துப் பறவைகளை அமைதியாக்கியது போலவும் அலையெறிந்து இரைந்த கடலை அமைதியாக்கியது போலவும் உலகம் அமைதிக்குள் அமர்ந்துகொண்டது.

ஆயினும் அந்த அமைதிக்குள்தான் எத்தனை இரைச்சல்கள்? எத்தனை பறவைகள்? எத்தனை எச்சங்கள்? எத்தனை அலைகள்? எத்தனை போராட்டங்கள்?

பழங்காலத்தில் ஒரு பெண்ணின் காதலை அவளின் வீட்டார் அறிந்துகொண்டால் இற்செறித்து விடுவார்கள். (வீட்டுச்சிறை). இற்செறிக்கப்பட்டாலும் எங்கோ ஒரு வெளிச்சத்துக்காக அவள் காத்திருப்பாள். முத்தொள்ளாயிரத்திலே தலைவன் செல்வதைப் பார்ப்பதற்கு கதவுப் பூட்டுக்குத் துளை வைத்த தச்சனுக்கு “என்னைகொல் கைம்மாறினி?” என்று நன்றி சொல்லி வியக்கின்றாள் ஒரு தலைவி. அதுபோல் உலகச் சிறையில் தனித்திருக்கும் மக்கள் ஒரு சிறு வெளிச்சத்துக்காகக் காத்திருக்கின்றார்கள். நாமே தச்சராக மாறி ஒரு துளையை ஒரு வெளிச்சத்தை உருவாக்கி வாழ்க்கையை நம்பிக்கையால் அழகாக்க வேண்டிய தருணத்தில் இருக்கின்றோம்.

இளைஞர்களின் அணிதிரண்ட செயலூக்கங்களையும் மனிதாபிமானத்தின் மலர்ச்சியையும் மீண்டும் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படுவதையும் மறுக்கமுடியாது. மரணத்தின் வெக்கைக்குள் வாழ்வு கருகிவிடுமோ என்ற பேரச்சத்தின் சுருளுகையிலும் ஒரு நம்பிக்கை பசுமையாய்த் துளிர்விடவே செய்கின்றது. இத்தாலிக்கு கியூபா செய்த பேருதவி போல, ஆங்காங்கு நிகழ்ந்துவரும் அதிசயங்களுக்குள் எம் வாழ்வின் அர்த்தம் துளிர்க்கின்றது. பொருளாதாரம் நசித்தாலும், மனிதம் அந்த ஒரு இடருக்குள் இருந்து தலை காட்டுவது எவ்வளவு அழகாகஇருக்கின்றது. இந்த இடத்தில் எப்போதோ மஹாகவி எழுதிவைத்த கவிதைதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

கல்லடுக்கி மேலே கனத்த உருளைகளைச்
செல்லவிட்டுச் செல்லவிட்டுச் செப்பனிட்ட
நல்ல நடு வீதி.
அதினில் வெகுண்டோடும் வண்டிகளில்
மோதி நடப்போர் முடிவெய்தும்
தீதகல இட்ட நடை பாதை.
இவை இரண்டின் ஓரங்கள் முட்டுகின்ற கோட்டின் முடுக்கினிலே
பட்ட விழிக்கின்ப விருந்தாய் இருளாய் ஒளிமின்னல்
முன்பல்லைக் காட்டி முறுவலித்த
பின்போய்
ஒளியாதது போல் ஒரு புல் இடுகைத்
தளிர் நீட்டி நின்றாள்.
தலையில் மிளிர்கின்ற
பூவொன்றைக் கூடப்
புதிதாய்ப் புனைந்திருந்தாள்.

இறவாது
வேரிற்கிடந்து வெடுக்கென்று மாரிவரப்
பூரிக்கக் கண்டால் புளகம்மெய்
ஊராதோ?
ஆழப்புதைந்த அறம்போல்
முளைத்தெழுந்தாள்
வாழ அவளுக்கென் வாழ்த்து!



## வித்துவான் பதில்கள்!



**வித்தூஸ்...வெளிநாடு செல்ல ஆசை இருக்கிறதா?**

தரணிதரன், முரசுமோட்டை.

அதெல்லாம் எமக்குச் சரிப்பட்டு வராது. வெளியூருக்கு சென்றாலே கொரோனா தொற்றிக்கொள்ளும்போது, வெளிநாடு செல்வது எப்படி? நோயை விலை கொடுத்து வாங்க வேண்டுமா என்ன?

**வித்து ஐயா,ஐக்கிய தேசியக் கட்சின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனவரியில் தான் தெரிவுசெய்யப்படுவாராமே?**

தார்மிகா, உடுவில்.

அதுக்கு என்ன அவசரம்? அடுத்த தேர்த லுக்கு முன் தெரிவு செய்தால் போதாதா? ஒத்தையா குடுத்தே இந்தப் பாடுபடு கிறார்களே? கத்தையாய் குடுத்திருந்தால் என்ன பாடுபடுவார்கள்.




**டியர் வித்தூ... விஜாஸ்காந் இலங்கை அணிக்கு உள் வாங்கப்படுவாரா?**

காந்தரூபன், மிருசுவில்.



எத்தனையோ தடைகளைத் தாண்டி ஒரு தமிழ் மகன் ஐபிஎல் என்னும் சர்வதேச வீரர்கள் விளையாடும் போட்டியில் பங்குபற்றியமைக்காக உலகத் தமிழினமே பாராட்டியது. மகிழ்ச்சி அடைந்தது. ஆனால் இலங்கை அணித் தெரிவு எனும்போது இத்தொடரில் அரை இறுதிவரை 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வனிந்து ஹசரங்க, அடுத்த நிலையில் உள்ள லக் ஷான் சந்தகான் முதலிய சுழல்பந்து வீச்சாளர்களைத் தாண்டி அணிக்குள் செல்ல முடியுமா? என்று சிந்தித்துப் பாருங்கள். அவருக்கு இன்னும் காலம் இருக்கிறது. காத்திருப்போம்!

வித்துவான் பதில்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
sanjeevi@uthayan.com

# நலம் வாழ....



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை, புற்றுநோயியல் சிறப்பு சிகிச்சைப் பிரிவு- சிலாபம் மாவட்டப் பொது மருத்துவமனை)



**மூக்கினால், வாயினால் இரத்தம் வடிதல் (கான்சர்) புற்றுநோய் என்று திரைப்படங்களிலும் சின்னத் திரை நாடகங்களிலும் காட்டுகின்றனர். இது உண்மையா டாக்டர்? புற்றுநோய்க்கான அறிகுறிகள் என்ன?**

இன்றைய காலகட்டத்தில் மீடியாக்களில் சிக்கிச் சீரழியும் விடயங்களில் மருத்துவம் முதலிடத்திலுள்ளது. இவர்கள் காட்டும் எந்த மருத்துவம் சம்பந்தமான விடயமும் நம்பத் தகுந்தது அல்ல. புற்றுநோய்க்காக அஞ்ச வேண்டாம். ஆனால் எச்சரிக்கையாக இருங்கள். உடலிலுள்ள ஒரு கலமோ அல்லது இழையமோ, அபரிமிதமாக அல்லது அசாதாரணமாக பல்கிப் பெருகுவதே புற்றுநோய் (கான்சர் ) எனப்படும்.

**புற்றுநோய்க்கான மருத்துவ அவதானிப்புக்கு உட்படுத்த வேண்டிய பொதுவான அறிகுறிகள் பின்வருமாறு:**

1.உடலில் வழமைக்கு மாறாக கட்டிகள் உருவாகுதல்
2. பசியின்மை (நீண்டகாலத்துக்கு)
3. பாரதூரமான நிறைகுறைவு
4.தலைவலி– குறிப்பாக அதிகாலை வேளையில் – இவையனைத்தும் பொதுவான அறிகுறிகளே(vage symptoms).

குறிப்பிட்டுச் சொல்வதென்றால்,

| | |
|---|---|
| மார்பகப் புற்றுநோய் (Breast.CA) | மார்பகக் கட்டி, வலி, கசிவு (Nipple discharge) மார்பக தோலில் மாற்றங்கள் உண்டாதல். |
| உணவுக் கால்வாயில் வரும் புற்றுநோய் | உணவை விழுங்குவதில் சிரமம், தொடர்ச்சியான நெஞ்செரிவு, தொடர்ச்சியான வாந்தி, மலத்துடன் இரத்தப் போக்கு, மலம் கழித்தலில் வழமைக்கு மாறான மாற்றங்கள். |
| மூக்கு/ தொண்டை வாய்ப் புற்றுநோய் (CA ENT) | நீண்ட காலத்துக்கு மாறாமலிருக்கும் வாய்ப்புண், திடீரென்ற குரல் மாற்றம். |
| மூளைப் புற்றுநோய் | திடீரென்று பார்வை மங்கலாவது, தாங்கவியலாத தலைவலி. . |
| புறொஸ்டேட் புற்றுநோய் (Prostate CA) | சிறுநீர் கழிக்கும் விதத்தில் வழமைக்கு மாறான மாற்றங்கள், சிறுநீருடன் குருதிப்போக்கு (பெரும்பாலும் வயோதிபர்களைத் தாக்கும் புற்றுநோய்) |
| கர்ப்பப்பை வாயில் புற்றுநோய் (Cervical, Ovarian CA) | யோனியூடான அசாதாரண கசிவுகள், யோனி வழியே அசாதாரண இரத்தப் போக்கு. (அதாவது மாதவிடாய் காலப்பகுதி தவிர்ந்த நாள்களில் அல்லது மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பின்), உடலுறவின்போது அல்லது உடலுறவின் பின்னர் யோனியிலோ அல்லது வயிற்றுப்பகுதியிலோ தாங்கவியலாத வலி. |

**மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் இருப்பின் உடனடியாக மருத்துவரை நாடவும். புற்றுநோய்க்கு அஞ்சத் தேவையில்லை.**
ஆனால் சிகிச்சை பெற தாமதித்தல் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

**எமது சமூகத்திலுள்ள பொதுவான புற்றுநோய்க்கான காரணிகள்**

1. புகைப்பிடித்தல்
2. மது அருந்துதல்
3. வெற்றிலை, பாக்குச பாவித்தல்
4. நீண்டகால இரசாயன சம்பந்தமான தொழில் புரிதல் (Painting போன்றவை)

உங்கள் குடும்பத்தில் எவருக்காயினும் மார்பக/ குடல்/ தைரொயிட் சினைப்பை/ கணையச் சுரப்பி புற்றுநோய் இருப்பின் (Breast / Colon/ Thyroid/ Ovarian/ Pancreatic CA) நீங்களாகவே முன்வந்து புற்றுநோய் சிறப்பு மருத்துவ நிபுணரை கலந்தாலோசித்து உங்களுக்கு புற்றுநோய்க்கான அறிகுறிகளோ வாய்ப்புக்களோ இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

---

எஸ்.ராஜ்குமார்



# காப்பாற்றம்மா காளியம்மா!

கொரோனாப் பெருந்தொற்று இலங்கையில் தனது தாண்டவத்தை வெளிப்படுத்த எத்தனித்துப் பலகாலம். பறை ஒலி ஓரிடத்தில் ஒலித்தால், மங்கல மேளம் இன்னொரு இடத்தில் கொட்டும் என்பதுபோல, கொரோனாவால் பெருமளவு பொதுமக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்க அதையும் காசாக்கி கரைசேர்ந்துவிட வேண்டும் என்பதுதான் சிலரின் குறுக்குப் புத்தியாக இருக்கின்றது. அதில் தானுண்டு தன் பாடுண்டு என்றிருந்த காளியம்மாளையும் இழுத்துவந்து கோர்த்துவிட்டுள்ளார் தென்னிலங்கை மருத்துவர். கொரோனாவில் இருந்து இலங்கைக்கு மீட்சி கிட்டாதா என்று ஏங்கிக்கொண்டிருந்த காலத்தில் கடந்த வாரம் மருத்துவர் ஒருவர் ஊடக நேர்காணல் மூலம் வெளிச்சத்துக்கு வந்தார். காளியம்மாள் தன்னிடம் சொல்லிவிட்டார் கொரோனாவுக்கு தடுப்பு மருந்து தயார் என்று புத்தம்புதுக் குண்டை அது அணுகுண்டைத் தூக்கிப்போட்டார். குண்டு எதிர்பார்த்ததை விட பரவலாக வெடித்துச் சிதறியது. சும்மாவே வெடிக்கக்கூடிய அந்தக் குண்டுக்கு அமைச்சர்கள் குழாம் விளம்பர அனுசரணைகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கினால் எப்படியிருக்கும். மிக விரைவிலேயே அதன் வெடிப்பு பன்மடங்கானது. இலங்கை பூதாகரமானது.

கடந்த 7ஆம் திகதி ஊடகங்களில் செய்தி பரப்பப்பட்டது. அதாவது குறித்த மருத்துவர் தனது மருந்தை (கொரோனா தடுப்புக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட பாணியை) இலவசமாக வழங்கவுள்ளார் என்பது தான் அந்த அறிவிப்பு. இரவோடு இரவாக மருத்துவரின் வீட்டுக்கு முன்னால் மக்கள் வெள்ளம் கூடத் தொடங்கியது. 20 ஆயிரம் வரைக்கும் இந்தத் தொகை சென்றது.

ஆனால் 'அவ்வாறான அறிப்பு எதையும் தான் விடுக்கவில்லை' என்று தெரிவித்து 'ஹாயாக' இருந்த மருத்துவர் (?) தம்மிக்க, பின்னர் ஒருவாறு 5 ஆயிரம் பேருக்கு மருந்தைக்கொடுத்து அனுப்பிவைத்தார். சிரிப்புக்குரிய விடயம் என்னவெனில் மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த வந்திருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும்கூட தம் கடமையை மறந்து அந்தத் தடுப்புமருந்தைப் பெற்றுப் பருகியமைதான்.

ஆனால் அந்த மருத்துவரின் ஊரவர்கள் இந்த மருந்து விடயத்தில் நாட்டம்காட்டவில்லை. அது ஏன் என்று மருத்துவருக்கும் அவரின் ஊரிலுள்ள மக்களுக்கும்தான் வெளிச்சம்.

உண்மையில் அவர் பாரம்பரிய மருத்துவரே இல்லையாம், அந்த ஊரில் அவர் தொழில் ரீதியில் ஒரு மேசனாகவே அறியப்பட்டிருந்தார்.

அவரின் பாணி மருந்து சோதனைக்கு தற்போது உட்படுத்தப்பட்டுள்ளது. சோதனையின் முடிவுகள் இனி எதுவாகவும் அமையலாம். ஆனால், மருந்து கொரோனாவைக் குணமாக்குகின்றது என்ற அடிப்படையில் அதற்கு அங்கீகாரம் தேடிய அமைச்சர்களை என்னவென்று சொல்வது? அதிலும் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சர் பவித்ரா குழு ஒன்றை அமைத்து இந்த மருந்துக்கு ஒரு அந்தஸ்தை பெற்றுக்கொடுக்க ஆவலாக இருக்கிறார். அமைச்சர் விமல் வீரவன்ச இந்த மருந்தை பெரிய அளவில் உற்பத்தி செய்யத் தேவையான இயந்திரங்களை வழங்கியிருக்கிறார்.

அமைச்சர் சிசிர ஜயக்கொடி இந்த மருந்துக்கு காப்புரிமை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் அரச ஒசுசல மூலமும் கிராம அதிகாரிகள் மூலமும் மருந்தை இலவசமாக வழங்கும் திட்டங்களைத் தீட்டி வருகிறார். இன்னொரு பக்கத்தில் இந்த மருந்து சில அரசியல்வாதிகளின் சிபாரிசில் கொரோனா தொற்றிய 21 பொலிசாருக்கு பரிசோதித்துப் பார்க்கப்பட்டதில் 14 பேர் பூரண சுகமடைந்துவிட்டனர் என்றும் அடுத்து சிறைக்கைதிகளின் சம்மதத்துடன் அவர் களுக்கு வழங்கி சோதிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் வாசுதேவநாணயக்கார இந்த மருந்து பயன்பாட்டுக்கு வந்தால் மேற்குலக நாடுகளின் கொரோனா தடுப்பூசிகளின் வியாபாரம் பாதிக்கப்படும் என்ற லெவலுக்குச் சென்று கருத்து வெளி யிட்டுள்ளார்.


ஆனால், இந்த அதீத அக்கறைகளுக்குப் பின்னால் இருப்பவர் ஓர் ஊடக முதலாளி என்ற தகவல் தற்போது வெளிவந்துள்ளது. அந்த ஊடக முதலாளி அரசின் சர்வ வல்லமை பொருந்திய ஒரு தலைவரின் நெருங்கிய சகா.

தற்போது ஆட்சியிலுள்ள அரசு தேர்தல்களில் வெல்வதற்கு அந்த முதலாளியின் ஊடகங்கள் கணிசமான பங்கை வகித்தன என்றும், அதற்குக் கைமாறே இது என்றும் பேசப்படுகிறது. அந்த ஊடக முதலாளி இந்த மருந்தை சுற்றுலா வாசிகளுக்கு விற்று டொலர் கணக்கில் சம்பாதிக்கவும் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அமைச்சர்கள் அரசியல்வாதிகளை மருந்தை குடிக்கவைத்து அதனை தனது ஊடகங்களில் வெளியிட்டு விளம்பரம் தேடிக்கொண்டதும், பின்னர் இலவச விநியோகம் என்று சமூக ஊடகங்களில் அறிவித்து மக்களிடம் மருந்தை பரீட்சித்துப்பார்க்க முனைந்ததும் அந்த ஊடக முதலாளியின் திருகுதாளமே எனவும் சொல்லப்படுகிறது. ஒருசிலரின் லாபத்துக்காக ஊரை அடித்து உலையில் போட நினைக்கும் இவர்களிடமிருந்து எம்மை அந்தக் காளியம்மாதான் காப்பாற்ற வேண்டும்.

**இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.**



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்






# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

கடந்த வாரம் பல்கலைக்கழக கற்கைநெறியொன்றை தெரிவு செய்யும்போது மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பல்வேறு விடயங்கள் குறித்தும் இக்கட்டுரையில் மேலோட்டமாக ஆராயப்பட்டது.அங்கு குறிப்பிட்ட விடயங்கள் ஒவ்வொன்றும் ஒரு பொதுமைபாடான நோக்கில் அணுகப்பட்ட விடயங்களேயன்றி, பல்கலைக்கழக அனுமதியில் மாணவர்களின் தனிப்பட்ட விருப்புகள், நலன்கள் சூழ்நிலைகள் என்பனவே அதிகம் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக இருக்கும். இருந்தும் ஓர் முறையான வழிகாட்டுதலை வழங்கவேண்டியதும் அவசியமானதாகும். இக் கட்டுரைத் தொடர் நிறைவுபெற இருக்கும் இத்தருணத்தில் இன்னுமொரு முக்கியமான விடயம் குறித்து ஆராய்ந்து நிறைவுறுத்தலாம் என நினைக்கின்றோம்.

பல்கலைக்கழக அனுமதி ஒன்றுக்கு விண்ணப்பித்து அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னரும் பல மாணவர்கள் பல்வேறு விதமான சந்தேகங்களைக் கொண்டிருப்பதுடன் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொள்கின்றனர். குறிப்பாக தமக்குக் கிடைத்த பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவு செய்வது குறித்து பல்வேறு விதமான ஐயங்களை மாணவர்கள் கொண்டுள்ளனர். அவற்றைப் பின்வரும் வகையாக வகைப்படுத்த முடியும்.

1. விண்ணப்பிக்கும்போது விருப்புக்குரியது ஆக இருந்த கற்கைநெறி, தற்போது விருப்பமற்று இருத்தல்.
2. குறித்த கற்கைநெறியை விரும்புகின்ற போதும், வழங்கப்பட்ட பல்கலைக்கழகம் மீது விருப்பற்றிருத்தல்
3. மீளவும் ஒரு தடவை பரீட்சைக்குத் தோற்றியிருக்கும் சந்தர்ப்பத்தில் தற்போது என்ன செய்வது?
4. கற்கைநெறித் தெரிவுகளின் விருப்பொழுங்குகளில் மாற்றத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை இருத்தல்
5. தமக்கு கிடைக்கப்பெற்ற பல்கலைக்கழகங்களின் அனுமதியை எவ்வாறு தமக்கு விருப்பமான இன்னொரு பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக்கொள்வது?
6. தற்போது கிடைக்கப்பெற்ற கற்கைநெறிக்கு பதிவினை மேற்கொள்ளாவிட்டால் பின்னர் வேறு கற்கைநெறிகளுக்கு தமக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விடுமா? என பல தரப்பட்ட சந்தேகங் களையும் வினாக்களையும் மாணவர்கள் கொண்டுள்ளனர்.

இவ்விடயங்கள் தொடர்பில் மாணவர்கள் சில விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டும்.

மாணவர்கள் மீளவும் பரீட்சைக்கு தோற்றியிருக்கும் சந்தர்ப்பத்திலும் அப் பரீட்சையில் கடந்த தடவையை விட சிறப்பாகச் செயற்பட்டுள்ளோம்; சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வோம் எனும் தன்னம்பிக்கையை கொண்டுள்ளபோதும் தற்போது கிடைக்கப்பெற்ற கற்கைநெறிக்கு பதிவை மேற்கொள்ளக் கூடாது. தற்செயலாக இணையவழிப் பதிவினைத் தாங்கள் மேற்கொண்டால் அடுத்த வருட பரீட்சைப் பெறுபேற்றின் அனுமதியின் அடிப்படையில் தாங்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்தில் எடுக்கப் படமாட்டீர்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன் தற்போது பதிவு செய்துவிட்டு பரீட்சைப் பெறுபேறு வெளிவந்ததும் பதிவை இரத்துச் செய்விட்டு புதிதாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம் எனும் தப்பான அபிப்பிராயமும் மாணவர்கள் மத்தியில் உள்ளது. இவ்வாறு செயற்பட்ட சில மாணவர்களையும் கட்டுரையாளர் சந்தித்துள்ளார். இது மிகவும் ஆபத்தான விடயம்.

காரணம் பதிவை இரத்துச் செய்தமையால் முன்னைய அனுமதியும் கிடைக்கப்பெறாது ஏற்கனவே ஒரு தடவை பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டதன் பிரகாரம் புதிதாகவும் அனுமதி கிடைக்காது, பல்கலைக்கழக அனுமதி கனவாகவே போகக்கூடும். இது கூர்மையாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## கற்கைநெறி அனுமதியை மாற்றிக்கொள்ளல்

மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒரு குறித்த கற்கைநெறிக்கான அனுமதியை எக்காரணம் கொண்டும் இலகுவாக மாற்றிக்கொள்வதற்கு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதிப்பது கிடையாது. சில சந்தர்ப்பங்களில் மேன்முறையீடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டாலும் அது மிகவும் சிக்கலான, காலதாமதமான பொறிமுறைளைக் கொண்ட செயற்பாடாகும். சில மாணவர்கள் தமக்கு கிடைக்கப்பெற்ற கற்கைநெறியை விரும்புகின்ற போதும் பல்கலைக்கழகத்தை தவிர்க்க விரும்பி மாற்றம் பெறுவதற்கு முயல்கின்றார்கள்.

இந்த விடயத்தில் முன்னர் நடைமுறையிலிருந்த ஒத்துமாறுதல் எனும் ஏற்பாட்டை (Uni-Code System) அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுத்தி இருக்கின்றது. மருத்துவக் காரணங்கள் போன்ற மிக உன்னிப்பாக கருத்தில் எடுக்க வேண்டிய மேன்முறையீடுகளின் அடிப்படை யிலும் பல்கலைக்கழக பீடங்களின் பீடாதிபதிகளின் ஆட்சேபனையற்ற முறையிலும் மிக அரிதாக சில மாற்றங்களை ஆணைக்குழு வழங்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் அத்தகைய மாற்றங்களைச் சாத்தியப்படுத்தல் என்பது மிகச் சவாலான விடயம்.

## கிடைக்கப்பெற்ற அனுமதியில் விருப்பற்ற நிலை

மாணவர்கள் தமக்கு தற்போது கிடைக்கப்பெற்ற கற்கைநெறிக்கு விருப்பின்றியிருப்பின் அதனைப் பதிவுசெய்யாது தவிர்க்க முடியும். ஆனால் குறித்த கற்கைநெறி தொடர்பான அனுமதியில் அவர் வேறு பல்கலைக்கழகங்களுக்கும் கருத்தில் எடுக்கப் படமாட்டார் என்பது சங்கடமான விடயமாகும். உதாரணமாக A எனும் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு அனுமதி கிடைக்கபெற்ற நிலையில் மாணவர் அதனை விருப்பமின்றி பதிவு செய்யாதுவிடின் அவர் எதிர்காலத்தில் ஏனைய பல் கலைக்கழகங்களின் உயிரியல் விஞ்ஞானத்துறை அனுமதிக்கும் கருத்தில் எடுக்கப்படமாட்டார். ஆனால் உயிரியல் விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய கற்கைநெறிகளுக்கு கருத்தில் கொள்ளப்படுவார்.

இந் நடைமுறை குறித்து கல்வியியலாளர்கள் மத்தியில் நியாயமான பல விமர்சனங்கள் உண்டு. Uni Code System அடிப்படையில் இந் நடைமுறையை கேள்விக்குட்படுத்த முடியும். இருந்தும் குறித்த சில கற்கைநெறிகளுக்கான மாணவர் அனுமதியை முழுமைப்படுத்தும் நோக்கில் இந் நடைமுறையை ஆணைக்குழு பின்பற்றுவதும் ஏற்புடையதே.

## பதிவின்போது விருப்பின்றிய கற்கைநெறிகளைத் தவிர்த்தல்

முதற்படிவம் அனுப்பும்போது விருப்புடன் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கற்கைநெறியொன்று பின்னர் விருப்பின்றிப் போகும்போது அதனைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பு மாணவருக்கு வழங்கப்படுகின்றது. அதாவது தற்போது கிடைக்கப்பெற்ற அனுமதிக்கு பதிவுசெய்கின்றபோது ஏற்கனவே விண்ணப்பித்த கற்கைநெறிகளில் விருப்பின்றிய கற்கைநெறிகளை நீக்கிக்கொள்ளமுடியும். ஆனால் விருப்பொழுங்குகளில் மாற்றங்களைச் செய்யமுடியாது. கற்கைநெறிகளை நீக்குவதன் மூலமாக மீதமாகவுள்ள கற்கைநெறிகளை முன்னோக்கி நகர்த்தலாமே தவிர விருப்பு ஒழுங்குகளை மாற்ற முடியாது.



## வெற்றிடம் நிரப்பும் அடிப்படையில் கிடைக்கும் அனுமதியை மறுதலித்தல்


இதுவொரு தனித்துவமான விடயம். மாணவரொருவர் ஒரு கற்கைநெறிக்கு பதிவை மேற்கொண்ட பின்னர் அவரது விண்ணப்பத்தின் அடிப்படையில் விருப்பொழுங்கில் முன்னேயுள்ள கற்கைநெறியொன்றுக்கு அனுமதிக்கப்படும்போது தற்போது பதிவுசெய்த கற்கைநெறியை தொடர விருப்புடனுள்ள பல மாணவர்கள் உள்ளனர்.

இத்தகையவர்கள் தாம் தற்போது பதிவு செய்த கற்கையில் மேலதிக மாணவர்கள் எனும் நிலையை அடைவர். இதனை, குறித்த பீடத்தின் பீடாதிபதி ஏற்றுக்கொண்டு குறித்த மாணவரை மேலதிக மாணவராக தனது பீடத்தில் வைத்திருப்பதில் ஆட்சேபனையில்லை என ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்படுவதுண்டு. ஆனால் இது எல்லா சந்தர்ப்பங்களிலும் சாத்தியமாகுவதில்லை.

மாணவர்கள் தமது எதிர்காலம் குறித்து தாமே தீர்க்கமாகச் சிந்தித்து முடிவுகளை எடுக்கவேண்டும். அதிலும் பல்கலைக்கழக அனுமதிகள் மிகவும் முக்கியமான வாழ்வியல் வகிபாகத்தைக் கொண்டவை. பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தவர்கள் வழிகாட்டிகளாக இருக்க முடியுமே தவிர மாணவர்கள் மீது எந்த விடயத்தையும் திணிக்க முடியாது.

இதனை என்றும் மனதில் கொள்வோம். அடுத்த வாரத்துடன் நிறைவுபெறவுள்ள இக் கட்டுரைத் தொடரில் பல்கலைக்கழக வாய்ப்புக்கள் குறித்து எமது சமூக மட்டத்தில் செய்யப்பட வேண்டிய விழிப்புணர்வுகளுக்காக ஏற்படுத்தப்பட வேண்டிய பொறிமுறைகள் குறித்துஆராய்ந்து இக் கட்டுரைத் தொடர் நிறைவு செய்யப்படும்.

(தொடரும்)



சஞ்சீவி சிறுகதை

# காலம் கிட்டும்

இ.தனஞ்செயன்

வீதியில் ஓரிருவர் நடமாடுவது தெரிந்தது.
அதற்கு முதல் சில தினங்கள் அதுவும் இல்லை. கனகுவுக்கு இப்போது எழுபது வயதாகிறது. முன்னைய காலங்கள் போல ஓடியாடிப் பொருள்களை வாங்கவும் முடியாது. ஓர் உழவு இயந்திரத்தில் உலர் உணவுகளை விற்பனை செய்தபடி சில இளைஞர்கள்.
"என்னப்பா! றோட்டில சாப்பாட்டுச் சாமான்கள் விக்கினம் போல. பெரிசா ஒண்டும் இல்லைத் தானே போய் பார்த்து வாங்குங்கோவன்"
ஏற்கனவே இளைஞர் அணியினர் யாரோ இலவச உலர் உணவுப் பொதியைக் கொடுத்து தற்படமும்( செல்பி) எடுத்துச் சென்றிருந்தனர். அந்தப் பொதியும் முடிவடைந்து என்ன செய்வதென்று எண்ணியவருக்கு தெருவில் நின்ற வண்டி ஆறுதலாக இருந்தது. விலைகள் அப்படி இப்படி இருந்தாலும் பரவாயில்லை , உணவுப் பொருள் கிடைப்பதே பெரியகாரியம் தானே. தூரத்தே கொரோனா விழிப்புணர்வு உரைகள்.
மற்றைய நேரங்களில் என்றால் முடக்குக்கு முடக்கு இருக்கும் கோவில்களில் போடப்படும் பாட்டுக்கள் ஒண்டையொண்டு குழப்பி எரிச்சலைத் தரும்.
'இப்ப வாகனச் சத்தமில்லாம பறவையளின்ர ஒலியைக் கேட்க முடியுது' எனஎண்ணியபடி வீட்டு வாசலுக்கு வந்தார். பலசரக்கு வண்டியைச் சுற்றி பல பக்கத்து வீட்டுக்காரர்கள். மூன்றடி இடைவெளியில் நின்று நலம் விசாரித்தாலும் உறவுகளுக்கிடையிலான உண்மைத் தூரம் சற்றுக் குறைந்திருந்தது மகிழ்ச்சிதான்.
பிள்ளைகள் தூரத் தூர வாழ்க்கைப்பட்ட இடங்களில் இருந்தாலும் பணத்துக்கு அவ்வளவு பிரச்சினை இல்லை. மற்றும்படி ஏற்கனவே தனிமைதான். மனைவி மங்களம் மட்டும்தான் ஆறுதல். இந்த ஊரடங்கு என்னவோ கனகுவுக்கு நெருக்கடியானதாக இதுவரை இல்லை. எமக்கு முன்பே இத்தாலி போன்ற சில நாடுகளில் நிகழ்ந்தவை எமக்கு பாடமாகஇருப்பது ஓரளவு நிம்மதி. இந்த ஊரடங்கு இல்லையென்றாலும் ஊரே அடங்கிப்போகும். அதில் மாற்றமில்லை. கொரோனா மீது யாரும் கோபம் கொள்ளவில்லை என்பதை கனகு அவதானித்திருந்தார். காரணங்கள் பல.
வீதியில் வளைந்து வளைந்து உந்துருளி ஓட்டும் வீரர்களின் தொல்லை இல்லை. எத்தனையோ நாள் "இந்த றோட்டில நிம்மதியா சைக்கிள்ள போகேலாது" என மனம் நொந்திருக்கிறார்.
அன்புக்கு ஏங்கும் பிள்ளைகளுக்கு தாயும் தந்தையும் இப்போது முழுநாளும் வீட்டில் இருக்கிறார்கள்.
பிள்ளைகள் விளையாடிக்கொண்டே விருப்புடன் சுயமாகக் கற்ற காலம் வழிவிடுகிறது.
போதைப்பொருள் இப்போதைக்கு வராது.
எங்களுடைய பிள்ளைகள் பொறுப்புணர்ந்து வளர வாய்ப்பு விரிகிறது.
கள்ளர் பயம் இப்போதைக்கு இல்லை. ஊர்கூடி ஒற்றுமையாக நிற்கிறது.
ஆனால் பொருளாதார நெருக்கடி தொடரும் என்பதில் பலருக்கு சிந்திக்க நேரமில்லை. எமது நாட்டுக்குத்தான் என்றால் பரவாயில்லை , இது உலகுக்கே பிரச்சினை.
"இஞ்சாரப்பா இந்தச் சாமான்களை உள்ள எடுத்து வை" என்றபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். காகம் கரைந்து கொண்டிருந்தது. "காகம் கத்துது, ஆனா யாரும் வீட்ட வரேலாது" என்று தனக்குள் எண்ணியபடி நாற்காலியில் சாய்ந்தார்.
அன்பு மட்டுமே நிலவிய உலகம். போட்டி, பொறாமை என்றால் என்னவெனக் கேட்கிற காலம். சமூக பொருளாதாரத்திலே தன்னிறைவு கண்டிருந்த அந்த நினைவுகள் வந்து போயின.
பக்கத்து வீட்டு மணியம் குரல் கொடுத்தபடி உள்ளே வந்தான்.
"வா மணியம் "என வரவேற்றவர் கதிரையைக் காட்டி அதில் அமரச் சொன்னார்.
"கனகண்ண! மண்ணண்ணெய் இருநூறு ரூபாவாம். மிசினில இறைக்கக் கட்டுமே. இவ்வளவு பயிரையும் என்ன செய்யப்போறம்?" மணியம் ஏக்கத்துடன் கேட்டான்.
"என்னடா உந்த மிசினுகள் வர முதல் நாங்கள் தோட்டஞ் செய்யேல்லையே! பட்டைக் கொடி கட்டி துலாவில மிதித்துத்தானே காலங்காலமாக இறைச்சனாங்கள். இப்ப உங்கட விண்ணாணங்களை நம்பினா இப்படித்தான். வெங்காயம் விக்கப்போறது பத்துரூபா , மண்ணெண்ணெய்க்கு இருநூறு ரூபா கொடுக்கிறதோ?" கனகு உண்மை நிலையை உரைத்தார்.
"இப்ப எங்க, ஆடுகால் ஒண்டும் கிணத்தடியிலை இல்ல. அதோட துலா செய்யுறதெண்டா விளையாட்டே! மணியம். உந்த தோட்டக் கிணத்துக்கு ஆறுபேர் பங்கு. ஆளிட்ட ஆயிரம் வாங்கினால் காணுமே. வேலையை முடிக்கலாம் கனகு"
மணி யம் போன பிறகு அவரது நினைவில் கடந்து போன வாழ்க்கை நினைவில் நிழலாடியது. பேச்சோடு நின்று போவதற்கு அதுவொன்றும் இன்றைய காலம் இல்லை. பேசியவாறே செயல் நடந்தது.
இறைப்புக்கு பங்கு பிரித்தார்கள், இன்ன நாள் உனக்கு இன்னநாள் எனக்கு என்று. நீர்ப் பம்பியைப் போல் துலாவில் நினைத்த நேரம் இறைப்பது நல்லதல்ல. இரவு நேரமே சிறந்தது. முன்னிலவு காலம் என்றால் இரவு பதினொருமணிவரையாவது இறைப்பார்கள். பின்னிலவு என்றால் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து சென்று இறைப்பார்கள். இப்போதைய தலைமுறையில் பலருக்கு ஆறுமணிக்கு முன் எழுந்தே பழக்கமிருக்காது. மாடுகள் ஒவ்வொரு வீட்டிலுமிருக்கும். பால் கறப்பதற்கு பசுக்கள் , வண்டியிழுக்கவும் வயல் உழவும் காளைகள்.
முள்முருங்கை கையை செல்லமாகக் கிழித்தாலும் செல்வத்தோடு வாழவைத்தது. தோட்டத்திலே பொழுது போனாலும் ஓய்வுநேரங்களில் கிட்டிப்புள்ளு , கிளித்தட்டு , கொக்கான், மாங்கொட்டை தட்டுதல் (பொதுவாக பெண்கள்) என்றுசிறுவர்களுக்கு படிக்க நேரமே இருக்காது.
மா , பலா , பப்பாசி , விளாம்பழம் , பனம்பழம் என சுழற்சி முறையில் இயற்கை விருந்து வைக்கும். இரவு படிப்பதற்கு பஞ்சு விளக்கு. மண்ணெண்யை மிச்சப்படுத்த பஞ்சு , உப்பு போட்டு எம் பரிசோதனைக்கு குறைவில்லை. இலங்கை வானொலி, ஆல் இந்தியா றேடியோ மட்டுமல்ல இசைத்தட்டில்சைக்கிள் தைனமோ சுற்றிப் பாட்டு. இயற்கை உயிர் வாயுவில் நீர் இறைத்தல். உண்மையில் தன்னிறைவு என்பது அதுதான்.
ஆனால் போரின் கெடுபிடியில் சிக்கி எப்படியோ மீண்ட எமக்கு இன்று கொரோனோ இன்னுமொரு கெடு வைத்திருக்கிறது.
இன்று அனைத்து பயன்பாட்டுப் பொருள்களுமே வெளிநாட்டு உற்பத்தியாகி , சம்பளம் எடுத்து செந்தழிப்பாய் வாழவே பழக்கப்பட்ட உலகம். இருபத்துநான்கு மணிநேரம் பிள்ளைகளுக்கு கற்பித்தல் இடம்பெற்றாலும் தன்னிறைவு, சமூக ஒழுக்கத்துக்கான கல்வி எள்ளளவும் இல்லை.
களவு , ஏமாற்றுச் செயல்கள் , இளையோரின் சீரழிவு , வீட்டில் இருவர் வேலைசெய்தாலும் சமாளிக்க முடியாத பொருளாதார நெருக்கடி , அதனால் மன உழைச்சல் இப்படி யாரும் தீர்த்து வைக்க முடியாத பிரச்சினைகளுக்கெல்லாம் தற்காலிகமாக முற்றுப்புள்ளியாக சிறிய கண்ணுக்குப் புலப்படாத கொரோனா குடும்ப வைரஸ் அமர்ந்திருக்கிறது. ஆனால் அது கொன்றொழிக்க காத்திருக்கும் மனிதர்கள் எத்தனையோ?
"என்னப்பா யோசிக்கிறீங்கள். எல்லாம் கடவுள் விட்ட வழி. இந்தாங்கோ ரீ குடியுங்கோ"
மனைவி தேநீரை வைத்துவிட்டு உள்ளே சென்றார். தேநீரை அருந்தியபடி கனகுவின் கற்பனை விரிந்தது.
"முன்பு எம்மவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளோடு ஒப்பிடும்போது இது தூசுதான். நாளை மின்சாரமும் தடைப்படலாம்.
முகநூலுக்குள் தலைகுனிந்த தலைமுறை நிமிரப் போகிறது. கிணற்றடி என்றால் என்னெவென்று தெரியாதவர்கள் வாளியில் அள்ளிக் குளிக்கப் போகிறார்கள். சூரிய கலத்திலிருந்து , காற்றிலிருந்து , கடலலையிலிருந்து மின் பெற இளையோர் முனைவர். பொருளாதாரச் சுமையை இனி ஈருருளியில் இறக்கி வைக்கலாம். கற்பனைதான் என்னால் செய்ய முடியும். கனவுகளை நனவாக்க காலம் கிட்டும். அதற்குத் தயாராவோம்' என கனகு எண்ணிக் கொண்டார். தோட்டத்தை நோக்கிக் கால்கள் நடந்தன. இப்போதும் காகம் கரைந்து கொண்டிருந்தது. ■

**இன்று அனைத்து பயன்பாட்டுப் பொருள்களுமே வெளிநாட்டு உற்பத்தியாக , சம்பளம் எடுத்து செந்தழிப்பாய் வாழவே பழக்கப்பட்ட உலகம். இருபத்துநான்கு மணி நேரம் பிள்ளைகளுக்கு கற்பித்தல் இடம்பெற்றாலும் தன்னிறைவு, சமூக ஒழுக்கத்துக்கான கல்வி எள்ளளவும் இல்லை.**






○ ஆரதி

இன்னொரு 'நொன்லீயர்' சினிமா வந்திருக்கிறது அந்தகாரமாக. அந்தகாரம் என்றால் இருள். இருளே படத்தின் மையப் பாத்திரம். அதற்கேற்ற விதமாகவே படத்தின் ஒளியமைப்பைச் செய்திருக்கிறார்கள். படத்தில் இன்னொரு பாத்திரமாக இங்கே ஒளிப்பதிவு இயங்குகிறது.

அநேகமாக அண்மைக்காலத்தில் வெளிவந்த தமிழ்ச் சினிமாக்களில் இந்தப் படத்திலேயே மிகச் சிறப்பான ஒளிப்பதிவுள்ளது எனலாம். படத்தைப் பார்க்கும்போது நீங்களும் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இருளையும் ஒளியையும் கதைக்கு ஏற்ற மாதிரி கலந்து பயன்படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் எட்வின் சாகே.

படத்தில் இருள் மர்மமாக்கப்பட்டுள்ளது. இந்த மர்மத்தில் மூன்று பிரதான கதை மாந்தர்கள் சம்பந்தப்படுகிறார்கள். ஒருவர் கண்தெரியாத இளைஞர். அவருக்குச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை. மற்றவர் மனநல மருத்துவர் ஒருவர். அந்த மருத்துவரும் நோயாளி ஒருவரின் கொலை முயற்சியால் உயிர் தப்பிப் பிழைக்கிறார்.

ஆனால், அதற்குப் பின் ஆளே வேறு விதமாக மாறி விடுகிறார். அதற்கு ஒரு அடையாளமாக அவருடைய குரலே வேறு மாதிரி ஆகிவிடுகிறது. மூன்றாவது ஆள், ஒரு கிரிக்கெட் கோச்சர்.

இந்த மூன்று பேருக்குமுள்ள பிரச்சினைகளை வைத்துக் கொண்டே படம் நகர்கிறது. இந்த மூன்று பேரின் கதைகளையும் இறுதியில் ஒரு முடிச்சில் அல்லது ஒரு தொடரில் கொண்டு வந்து நிறுத்துவதுடன் படம் முடிகிறது. அதற்காக மூன்று மணி நேரம் காத்திருக்க வேண்டும். இப்பொழுது ஒரு படத்தை இந்தளவு நேரத்துக்கு சலிக்காமல் கொண்டு செல்வதென்பது பெரிய சவால். ஆனால், இதை இயக்குநர் விக்னராஜனும், ஒளிப்பதிவாளர் எட்வின் சாகோவும் வென்றிருக்கின்றனர். கூடவே ஏனைய கலைஞர்களும்தான்.

முதலில் மூன்று கதைகளும் (மூன்று பேரும் ஒருவரோடு ஒருவர்) ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத மாதிரியே தனித்தனியாகக் கதை நடக்கிறது. பொதுவாக 'நொன்லீனியர்' படங்களின் குணாம்சம் இது. அதை சில இயக்குநர்கள் வெற்றிகரமாகக் கையாள்வதுண்டு. சிலர் பாழாக்கி அலுப்படித்து விடுவார்கள். இந்தப் படத்தில் விக்னராஜன் இதை ஓரளவுக்கு சரியாகச் செய்து வெற்றியடைந்துள்ளார். வசனங்களும் இயல்பான முறையில் ஆழமானவையாக உள்ளன. அதனால் கவனத்தைக் கோருகின்றன.

கண்தெரியாத இளைஞரான செல்வத்துக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்வதற்குப் பணம் வேண்டும். பெற்றோரதும் உறவினர்களதும் ஆதரவு அற்ற அவர், தனக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு தந்தையார் முன்பு செய்த ஆவி விரட்டும் தொழிலைச் செய்து அந்தப் பணத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கிறார். அதற்கு அவரிடமுள்ள ஒரு புத்தகம் உதவுகிறது. பெற்றோரில்லாத செல்வத்துக்கு உள்ள ஒரே ஆதரவு தியேட்டரில் வேலை செய்யும் ஒருவர். அவரைச் செல்வம் ஆதரவான மாமாவாக உறவு கொண்டாடுகிறார். செல்வத்தின் நடவடிக்கைகள் குறித்து அவருக்குப் பிடிப்பில்லை. அதை அவர் சொல்லிக் கண்டிருக்கிறார். ஆனாலும் செல்வம் கேட்பதாக இல்லை. செல்வம் தன்னுடைய இலக்கிலேயே - முயற்சியிலேயே கவனம் செலுத்துகிறார். அது அவருக்கு என்ன மாதிரியான வெற்றியைத் தந்தது? அதில் அவர் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன? அவருடைய இறுதி முடிவு என்ன? என்பது ஒரு கதை. மனநல மருத்துவராக இருக்கும் இந்திரனை அவரிடம் சிகிச்சை பெறும் ஒரு நோயாளி கொல்ல முயற்சிக்கிறார். அதற்கு முன்பு அவர் இந்திரனின் குடும்பத்தையே கொன்று விடுகிறார். இப்படிப் பாதிக்கப்பட்ட இந்திரனுக்கு மேலும் ஒரு நெருக்கடி, அவருடைய சிகிச்சையளிக்கும் முறை தவறானது என்பதால் தொடர்ந்து மருத்துவராகப் பணியாற்ற முடியாது என்று மருத்துவக் கவுன்ஸில் அறிவித்து விடுகிறது. போதாக்குறைக்கு அந்தக் கொலை முயற்சியால் அவருடைய குரலும் போய் விடுகிறது. இப்பொழுது எதுவுமற்ற தனியாளாகி விடுகிறார் இந்திரன். இதற்குப் பிறகு இதையெல்லாம் எதிர்கொண்டு இந்திரன் எப்படி வாழ்கிறார் என்பது அடுத்த கதை.

சிறுவர்களுக்கான கிரிக்கெட் கோச்சராக இருக்கும் வினோத், தன்னுடைய நண்பனுடன் ஒரு அறையில் வசித்துக் கொண்டிருக்கிறார். வினோத்துக்கு பிறந்த நாள் பரிசாக ஒரு புத்தகம் கிடைக்கிறது. அந்தப் புத்தகத்தின் வழியாக அவருக்குள் இனம் புரியாத ஒரு ஆன்மா அல்லது அமானுஷ்ய சக்தி ஒன்று புகுந்து கொள்கிறது. அதற்குப் பிறகு அவருக்குள் ஏகப்பட்ட குழப்பங்கள், பிரச்சினைகள். இதற்கிடையில் அவருடைய தொலைபேசி இணைப்பில் பிரச்சினை உண்டாக, அதற்கு மாற்றுத் தொலைபேசி ஒன்றை தொலைபேசி இணைப்புச் செயலகம் வழங்குகிறது. ஆனால், புதிய தொலைபேசியில் ஒரு அநாமதேயக் குரல். அது வினோத்துடன் உரையாடுகிறது.



உனக்குள்ளே ஒரு அமானுஷ்ய சக்தி இருக்கிறது. ஒரு தேவையில்லாத ஆன்மா விளையாடிக் கொண்டிருக்கிறது என்ற மாதிரியான குழப்பங்களை அது உண்டாக்குகிறது. இதனை சீர்ப்படுத்திக்கொள்வதற்கு அவரும் அவரோடிணைந்தவர்களும் எடுக்கின்ற முயற்சிகள் என இன்னொரு கதை. இதற்குள் செல்வத்தின் வீட்டை அபகரிக்க முற்படுகிற கூட்டம். வினோத்தை வழிப்படுத்த முயற்சிக்கிற தோழி என்று இவர்களையெல்லாம் வைத்து மிகச் சிக்கலான கதையை சவாலாக எடுத்துக் கொண்டு வென்று காட்டியுள்ளார் இயக்குநர்.

கமல், ரஜனி அஜித், விஜய், சூர்யா, மாதவன், விக்ரம், தனுஷ் என்று நட்சத்திரங்களுக்குள் சுழன்று கொண்டிருக்கும் சினிமாவை அவ்வப்போது புதியவர்களின் மூலம் உடைக்கும் முயற்சிகள் நடப்பதுண்டு. அதில் ஒன்றே அந்தகாரமும். நடிகர்கள், ஒளிப்பதிவாளர், இயக்குநர் எனப் பலருக்கும் இது பயில் முறைக் களமே. ஆனாலும் கவனத்தைக் கோரும் விதமாக அந்தகாரத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த மாதிரி த்ரில்லர் படங்களுக்கு எப்போதும் எந்தச் சூழலிலும் இடமுண்டு. அந்த வகையில் இந்தப்படத்துக்கு தமிழுக்கு அப்பாலும் பார்வையாளர்கள் கிடைக்கலாம்.

# கலைமுகம்

சில அறிமுக குறிப்புகள்




- கொரோனாப் பேரிடர் காலத்து தடைகளுக்கு மத்தியிலும், திருமறைக்கலா மன்றத்தின், 2020 ஒக்ரோபர்-டிசெம்பர் காலத்துக்குரிய கலைமுகம் (இதழ்-70) கைகளில் தவழவந்திருக்கிறது.
- வழக்கத்தைக் காட்டிலும் மிகக் கனதியான, காலம் கோரி நிற்கும் படைப்புகளைச் சுமந்து வந்திருக்கும் கலைமுகம் தன் வருகையை இன்னும் உறுதியாகப் பதித்திருக்கிறது.
- சிற்றிலக்கிய இதழ்கள் என்றாலே சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக் கதையாக, ஒரே படைப்பாக்கக் குழுவை சார்ந்தவர்களே ஒவ்வொரு இதழிலும் எழுதும் மரபையெல்லாம் இந்தமுறையும் கலைமுகம் உடைத்திருக்கிறது. அதற்காக முன்னைய இதழ் களில் எழுதியவர்கள் புறக்கணிக்கப் படவுமில்லை.
- புதியவர்களையும், ஏற்கனவே அறியப்பட்ட படைப்பாளிகளையும் ஒன்று சேர்ந்து மொத்தமாக 29 பேரின் படைப்புகளை சரிசமவிகிதத்தில் உள்வாங்கி, தேர்ந்த வாசகர்களுக்கான விருந்து படைக்கப்பட்டுள்ளது. இன்னொரு முக்கிய விடயம், இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த படைப்பாளிகளுக்கும் இடமளிக்கப் பட்டிருப்பதுதான்.
- இம்முறை சடுதியாக மாறிப்போன பொருளாதாரச் சமன்பாடுகள் கலைமுகம் இதழின் விலையை 50 ரூபாவால் அதிகரிக்கச் செய்திருக்கின்றன. ஆனால் அந்த அதிகரிப்பை கலைமுகத்தின் நேர்த்தி ஒரு பொருட்டாகவே எண்ணச் செய்யவில்லை என்பதே உண்மை.

விலை: 200/=
முகவரி: திரு மறை கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



# நட்சத்திர கூட்டணி உதிக்குமா?

○ மயூ

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் களம் இப்போது சூடு பிடித்துள்ளது. கட்சிகளுக்கு இடையிலான கூட்டணிக்குக்கான பேரங்களும், பேச்சுக்களும் ஆரம்பித்துவிட்டன.

தமிழக அரசியலில் இப்போது இருவர் அதிகம் பேசப்படுகின்றனர். ஒருவர் நடிகர் கமல்ஹாசன் மற்றையவர் நடிகர் ரஜினிகாந்த்.

நடிகர் கமல்ஹாசன் ஏற்கனவே மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை நடத்தி வருகின்றார். அவரது கட்சி கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தது. நகர்ப்புறங்களில் நடிகர் கமலின் கட்சிக்கு ஆதரவு கிடைத்திருந்தது. இப்போது அவர் சட்டமன்றத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடுவதாக அறிவித்திருக்கின்றார்.

மற்றையவர் நடிகர் ரஜினிகாந்த். பல ஆண்டுகளாக அரசியலுக்கு வருகின்றேன், வருகின்றேன் என்று பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்த ரஜினிகாந்த் தற்போது தான் தேர்தலில் இறங்கப் போவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றார். கட்சியை ஆரம்பித்துப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் அவர் மும்முரமாக இருக்கின்றார்.

அவரும் இந்தத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கின்றார்.

இப்போது தமிழக அரசியலில் இவர்கள் இருவரும் கூட்டணி அமைப்பார்களா என்பதுதான் பெரிதும் எதிர்பார்க்கப்படும் விடயம். அதற்குச் சாதகமான சமிக்ஞைகள் இரு தரப்பில் இருந்தும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்கள் கூட்டணியாகவே தேர்தலை எதிர்கொள்வார்கள் என்று அரசியல் நோக்கர்கள் கணித்திருக்கின்றனர்..

தனது தேர்தல் பரப்புரையை ஆரம்பித்துள்ள நடிகர் கமல்ஹாசன், தமிழகத்தின் நலனுக்காக ரஜினிகாந்துடன் கூட்டணி அமைக்கத் தயார் என்று கூறியிருக்கின்றார் .இதற்கு நடிகர் ரஜினி தரப்பில் இருந்து எந்த மறுப்பும் வெளியாகவில்லை. ஆக ரஜினி தரப்பும் கூட்டணிக்கான மனோநிலையில் உள்ளது என்று தெரிகின்றது. ரஜினியின் கருத்து சாதகமாக நோக்கப்படுகின்றது என்கின்றனர் ரஜினியின் கட்சி முக்கியஸ்தர்கள். தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்துவரும் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. கட்சிகளை உடைத்து தனியாகப் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிப்பது என்பது சற்று சிரமமான காரியம்தான்.

இதை கமல், ரஜினி தரப்புக்கள் உணராமல் இல்லை. அதனால் தனது முதல் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு “ரிஸ்க்” எடுப்பதை விட கூட்டணி அமைத்து மக்கள் ஆதரவைப் பரீட்சித்துப் பார்க்கவே ரஜினி விரும்புவார்.

தி.மு.கட்சி, காங்கிரஸ் கட்சியுடனும், அ.தி.மு. கட்சி பா.ஜ.கவுடனும் கூட்டணி அமைக்கும் நிலையில், இவர்கள் அந்தப் பக்கம் செல்லும் வாய்ப்புக்கள் இல்லை. அதிலும் பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு இப்போது தமிழகத்தில் வரவேற்பே இல்லை என்று கூறலாம். இந்த நிலைமையில் அவர்களுடன் கூட்டணி அமைத்து ரஜினி, கமல் தரப்பு விஷப் பரீட்சையில் இறங்காது என்பது நிச்சயம்.

கமலில் மக்கள் நீதி மய்யத்துக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கின்றது. அதனால் ரஜினி மக்கள் நீதி மய்யம் தலைமையிலான கூட்டணிக்கு ஒப்புக்கொள்ளும் சாத்தியங்கள் இருக்கின்றன. அதற்கான முன்னேடி அழைப்பையே தனது பரப்புரையில் கமல் வெளிப்படுத்தியிருக்கின்றார். இன்னும் ஓரிரு நாள்களில் அவர்களின் கூட்டணி தொடர்பான விவரங்கள் வெளிவரலாம்.

அதேநேரம், பாட்டாளி மக்கள் கட்சியும் ரஜினி, கமல் கூட்டணியில் இணையும் சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன. கடந்த தேர்தல்களில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்திருந்த பா.ம.க. இப்போது கூட்டணிப் பேச்சுக்களைத் தாமதித்து வருகின்றது. அதற்கு இந்தப் புதிய கூட்டணி முயற்சியே காரணம் என்று கூறப்படுகின்றது.

தி.மு.க., அ.தி.மு.க. இல்லாத ஆட்சி என்ற கோசத்துடனே இந்தமுறை களமிறங்கியிருக்கும் பா.ம.கவும் ரஜினி, கமலும் கூட்டணி அமைக்கும்போது அது ஒரு பலமான கூட்டணியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். பா.ம.கவின் மௌனம் அ.தி.மு.கவை கலக்கடைய வைத்துள்ளது என்கின்றன கட்சி உள் தகவல்கள். ஏனெனில் தமிழகத்தின் வடக்கு மாவட்டங்களில் பா.ம.கவை முன்னிறுத்தியே அ.தி.மு.க. இதுவரை தேர்தலைச் சந்தித்திருந்தது. இரு நட்சத்திரக் கூட்டணியுடன் இன்னும் சில கட்சிகள் கூட்டணி அமைக்கலாம். இந்தக் கூட்டணி ஆட்சியைப் பிடிக்குமா என்றால் உடனே இல்லை என்று கூற முடியாத நிலைமையே இப்போது இருக்கின்றது. ஏனெனில் தமிழகத்தின் நிலைமை இப்போது அவ்வாறு இருக்கின்றது.

இந்தி திணிப்பு, நீட் தேர்வு என மத்தியில் ஆளும் பா.ஜ.க. மீதும், தற்போது தமிழகத்தில் ஆட்சியில் இருக்கும் அ.தி.மு.க. மீதும் கடும் அதிருப்தி அலை இருக்கின்றது. கலைஞரின் மறைவின் பின்னர் தி.மு.கவின் செயற்பாடுகள் சொல்லக்கூடியதாக இல்லை. மறுபுறத்தில் நாம் தமிழர் கட்சி தேர்தலில் தனித்தே போட்டியிடுவதாக அறிவித்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பங்களை வாய்ப்பாக்கிக் கொள்ளுமா இந்த நட்சத்திரக் கூட்டணி என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.





- மின்னல்

# திரடி அரங்கு

## மீண்டும் முருங்கை மரத்தில்...

கச்சேரியில் போன வெள்ளிக்கிழமை ஒரு கூட்டம். நல்லாட்சியில் காற்றுப்போய், இப்போது மீண்டும் ஒரு உப்புச்சப்பில்லாத அமைச்சுப் பொறுப்பில் இருப்பவரின் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் சுற்றிச் சுழன்று, கடைசியாக சங்கக்கடைகளில் வந்து நின்றது.

கூட்டுறவுச் சங்கமொன்று, சட்டத்துக்கு முரணாக கடன் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முனைந்திருந்தது.

ஆனால் அப்படிச் செய்தால் அது சங்கத்தின் நிதிவளத்தைப் பாதிக்கும். அத்தோடு தாங்கள், சட்டத்தையும் மீற முடியாதென்று அதற்குப் பொறுப்பான திணைக்களத் தலைவர்கள் அனுமதி கொடுக்கவில்லை.

ஆனால் சங்கத் தலைவர் அமைச்சரின் ஆள். விடயம் அமைச்சரின் காதுகளுக்குப் போனது. வாழ்வாதாரம் பற்றிய கச்சேரிக் கூட்டத்தில் சம்பந்தமில்லாமல் இந்தக் கடன் விடயத்தை கையில் எடுத்தார் அமைச்சர். அந்தக் கடனைக் கொடுக்க அனுமதித்தேயாக வேண்டும் என அமைச்சர் பிடிவாதம் பிடிக்க, திணைக்கள அதிகாரிகள் சட்டத்தை மீற முடியாது என்று துணிச்சலாகப் பதிலடி கொடுத்தார்கள். வந்ததே கோபம் அமைச்சர் பெருமானுக்கு.

மேடையை விட்டுக் கீழே இறங்கி ஆவேசமாக அதிகாரிகளை நெருங்கி “ நான் சொல்வதைச் செய்யமுடியாவிட்டால் வேலையை விட்டுப் போய்விடுங்கள்” என்று மிரட்டினாராம். முன்னரும் இப்படிக் காட்டாட்சி நடத்தித்தான் இருந்த வாக்குவங்கியையும் இழந்தவர். இப்போது பட்டும் திருந்தாமல் பழையபடி முருங்கை மரத்தில் ஏறியே தீருவேன் என்று சண்டித்தன அரசியல் செய்யத் தொடங்குகிறார் போலும்.

## ஒரு வீதிக்கு இரண்டு அடிக்கல்


இது இன்னொரு அரசியல் கூத்து. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நான் இருக்க வேண்டுமென நினைக்கும் அரசியல்வாதி அவர். ஆனால் அவர் கடவுள் அல்லவே எல்லா இடமும் ஒரே நேரத்தில் தோன்றுவதற்கு. அதனால் அந்த உடையார், தன் சார்பில் பொல்லுத்தடிகளை அனுப்பி தன் இருப்பை காண்பிக்கத் தொடங்கினார்.

அப்பா, சித்தப்பா , வலக்கை, இடக்கை என்று எந்தவிதத் தராதரமும் இன்றி,தன் பொல்லுகளை அனுப்பிக் கொண்டே இருக்கிறார்.

நேற்று ஒரு வீதியமைப்பின் ஆரம்பப்பணி. அந்த வீதிக்குரிய உள்ளூராட்சி சபையினர் காலையில் சமயமுறைப்படி வீதியமைப்புக்கான அடிக்கல்லை நட்டு பூர்வாங்கப் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வை நடத்திவிட்டுச் சென்றனர். அது உடையாரின் மூக்கில் மணத்துவிட்டது.

உடனேயே தன் பொல்லுத்தடி ஒன்றை அனுப்பி, அதே வீதிக்கு 10 நிமிட இடைவெளியில் இன்னொரு அடிக்கல் நட்டு ஆரம்பநிகழ்வை நடத்தியிருக்கிறார்.

ஒரு வீதிக்கு இரண்டு ஆரம்ப நிகழ்வுகள். அப்படியானால் வீதியைத் திறக்க எத்தனை தரம் ‘ரிப்பன்’ வெட்டப் போகிறார்களோ? எல்லாம் அங்க இருக்கிறவனுக்குதான் வெளிச்சம்.



# ஜெனிவா தலையிடிக்கு தேர்தல் 'தைலமா'?



இராஜதந்திரச் சமர் என வர்ணிக்கப்படுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் , 2021 பெப்ரவரி 22 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகின்றது. மார்ச் 19ஆம் திகதிவரை நடைபெறும் இம் மாநாட்டில் இலங்கை விவகாரமும் முக்கிய இடத்தை வகிக்கவுள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகும் முடிவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் எடுத்துள்ளதால், இம்முறை இலங்கைக்கு கடும் இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்படும் என முன்கூட்டியே அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

எனவே, ஜெனிவா இராஜதந்தர நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பில் கோத்தாபய அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. அழுத்தங்களை - நெருக்கடிகளை சமாளிப்பதற்கு பொறிமுறைகள் பற்றியும் மந்திராலோசனை நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் கோத்தா அரசாங்கம் தீவிரம் காட்டி வருகின்றது. மாகாண சபைத் தேர்தலை மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்துவது பற்றி அமைச்சரவைக் கூட்டத்திலும் கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்தி அதிகாரப்பகிர்வுக்கும், மாகாண சபைகள் முறைமையை தக்கவைப்பதற்கும் தமது அரசாங்கம் தயார் என்ற செய்தியை கோத்தா அரசு வெளி உலகுக்குச் சொல்லவிரும்புகின்றது. புதிய அரசமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற மறைமுக செய்தியையும் வழங்க முற்படுகின்றது. இதன்மூலம் இராஜதந்திர நெருக்கடியிலிருந்து தப்பித்துவிடலாம் என அது நம்புகின்றது. ஆனால் மேற்குலகம் இம்முறை மென்போக்கை கடைப்பிடிக்காது என்பது மட்டும் உறுதி. மறுபுறத்தில் ஜோ பைடனின் ஆட்சியும் கொழும்புக்கு சவால்மிக்கதாகவே அமையும்.

# அறிந்தும் அறியாமலும்

சூரியன்



## இருமுனையில் வாக்குவேட்டை

ஜாதிக ஹெல உறுமய என்ற பலமானதொரு தேசியவாத இயக்கத்தை கட்டியெழுப்புவதில் சம்பிக்க ரணவக்க முக்கிய வகிபாகத்தை வகித்தவர். பொது பலசேனா, ராவணா பலய, சிங்கலே போன்ற அமைப்புகள் எல்லாம் தலைகாட்டுவதற்கு முன்னர் சிங்கள, பௌத்த மக்களிடையே ஹெல உறுமயவுக்குதான் மவுசு அதிகம். ஒரு கட்டத்தில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகக்கூட அது உருவெடுத்திருந்தது.

எனவே, ஹெல உறுமயவை எப்படியாவது உடைத்துவிடலாம் என ராஜபக்ச தரப்புத் திட்டம் வகுத்தது. அவ்வப்போது முரண்பாடுகளும் தலைதூக்கின. இந்நிலையில்தான் 2015 ஜனாதிபதி தேர்தலின்போது மஹிந்தவின் காலை வாரிவிட்டு மைத்திரியை ஆதரிக்கும் முடிவை ஹெல உறுமய எடுத்தது. ஆனால் உதய கம்மன்பில தலைமையிலான ஒரு பிரிவை உடைத்தெடுத்து ஹெல உறுமயவுக்குள் ராஜபக்ச அணி சிறு விரிசலை ஏற்படுத்தியது. மஹிந்தவின் தோல்விக்கு சம்பிக்கவின் காத்திரமான உரைகளும் பங்களிப்புச் செய்தன.

தற்போதுகூட ராஜபக்சக்களை வெளிப்படையாக - உரிய தரவுகளுடன் விமர்சிப்பவர்களின் பட்டியலில் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அடுத்தபடியாக சம்பிக்க ரணவக்கவே இருக்கிறார். அதனால்தான் அவர்மீது சேறுபூசுவதற்கு பல வழிகளிலும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவை உரிய வகையில் கைகூடவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து வெளியேறும் முடிவை சம்பிக்க ரணவக்கவும், அவரின் சகாக்களும் எடுத்துள்ளனர். சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை பலமானதொரு அரசியல் கூட்டணியாக கட்டியெழுப்புவதற்காகவே சம்பிக்க அணியினர் ஹெல உறுமயவில் இருந்து வெளியேறியுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் பதவிகள் சிங்கள, பௌத்த மக்களின் ஆதரவைப் பெற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒரு புறத்தில் சஜித் அணி ஊடாக சம்பிக்கவும், மறுபுறத்தில் ஹெல உறுமயவினரும் ராஜபக்சக்களுக்கான சிங்கள, பௌத்த வாக்குகளை வேட்டையாட வியூகம் வகுத்துள்ளனர்.

## மாற்றம் ஒன்றே மாறாதது



2021 இல் ஜே.வி.பியில் சில மாற்றங்கள் வரக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் பதவிகளில் மாற்றம் வராத போதிலும் தொழிற்சங்கப்பிரிவு உள்ளிட்ட அமைப்புகள் மறுசீரமைக்கப்படலாம் என அறியமுடிகின்றது. கட்சியின் மத்தியகுழுவுக்கு புதிதாக சிலர் உள்வாங்கப்படக்கூடும். அதேபோல ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பலப்படுத்தப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணியிலும் முக்கிய சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.



## பாயும் யானைகள்

மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியானதுதான் தாமதம், கொரோனா தாக்கத்துக்கு மத்தியிலும் கட்சித் தாவல்கள் அரங்கேறி வருகின்றன.

'பல்டி' அடித்து காலைப்பிடித்தாவது கட்சிப் பட்டியலில் இடம்பிடித்துவிடவேண்டும் என்பதற்காகவே சிலர் முன்கூட்டியே பாய்ந்துள்ளனர்.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கடந்த பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் சிலர், ரணிலைக் கைவிட்டு சஜித்துடன் சங்கமித்துள்ளனர். ஏனைய சில உறுப்பினர்களும் விரைவில் இவ்வாறு இணையவுள்ளனர்.




அதேவேளை, மொட்டுக் கட்சி மீது அதிருப்தியில் இருந்த சுதந்திரக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் சஜித் அணியில் சங்கமிக்கக் கூடும் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

# எது துன்பம்...?

புரியாத உணர்வு
புரியும் வரை துன்பம்

புரியவில்லையானால்
பிரியும் வரை துன்பம்

இன்பத்தின் எல்லைக்கு
இறைவன் கொடுப்பது துன்பம்

இல்லாதவனை இருப்பவனுக்கு
உணர வைப்பது துன்பம்

அர்த்தமற்ற ஆணவத்தை
அடையாளப்படுத்துவது துன்பம்

இறை நிலை இருப்பை
இனம் காட்டுவது துன்பம்

தலைக் கனம் அடக்கும்
தனித்துவம் துன்பம்

அன்பெனும் அங்கீகாரம்
தருவது துன்பம்

இளமைக் காதல்
இம்சை துன்பம்

ஆளுமை விருத்திக்கு
அத்திபாரம் துன்பம்



துன்பம் துன்பம் .....எது துன்பம்?...
இது தான் என்று எதுவும் தெரியும்வரை
இடையில் வருவது எல்லாம் துன்பம்

ஆர். கே. மேனன்,
ஆசிரியர்



# கடவுளுக்கோர் கடிதம்

இறைவா போதும் போதும்
இவ்வுலகம் ஆடிப் போய்விட்டதையா!
இப்படித்தான் இயங்க வேண்டும் என்பது
மானுடத்திற்கு நீ வகுத்த வேதம் தானே!
எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்தோமோ..?
இயங்க முடியாமல் இயக்கத்தை நிறுத்தி வைத்தாய்
பார் முழுதையும் புரண்டு அழவைத்து
பக்குவமாய் கை கழுவி வாய்மூடி
ஊர் முழுதும் கொண்டாட்டம் நிறுத்தி
ஊரடங்க வைத்ததும் நீ தானே!
நின்றெம்மை கொல்லும் கொரோனாவைக் கொஞ்சம்
நில்லென்று சொல்லி சற்று நிறுத்தியதும் நீதானே!
என்ன திருவிளையாட்டை நடத்துகிறாய்
குழந்தை குட்டியென்று பாராமல்
கோபம் உனக்கு எம்மேல் விழுந்ததேன்
கொரோனாவின் உறவை எமக்கு விதித்தது யார்?
சீனர்கள் சீண்டித்தான் விட்டனரோ?
என்ன கொடுமையிது இறைவா!
ஏன் இறையருளை பெறமாலிருந்து விட்டோம்
உன்னைச் சரண் புகுந்தால் மட்டும் வாழலாம்
என்பதனை நீ அறிவித்து விட்டாய்

மதுரகவி

# ஒரு தலைக்காதல்





கற்கும்போது கரும்பலகையைப் பார்க்காமல்
பசிக்கும்போது பசியைக் கவனிக்காமல்
பருவப் பெண்ணே உன்னைப் பார்த்தேன்!
முகப் புத்தகத்தில் உன்னைத் தேடி காதல் முடிவு கேட்டேன்!

ஏறும் பேருந்தில் ஏறியும் நான்
ஏறியதைக் கூட பொருட்படுத்தவில்லை!
காரணத்தைக் கூறிவிடு காதலை ஏற்றுக்கொள்ளாமைக்கு
காட்டு மிருகமா நான்

ஆயிரம் தவறுகள் இருக்கும் என்னில் அவ்
ஆயிரத்தையும் மன்னித்துவிடு!

பச்சிலை மகளே இனியாவது
பரிதவிக்கும் என்நிலை புரிந்திடம்மா

மானிடப் பெண்ணே
மார்பின் மீது தவழவிடும் கருங்கூந்தலையும்
கிளிச் சொண்டு மூக்கையும்
கிலி இல்லாமல் பார்க்கவும்
நீ சிரிக்கும் போதும் நீ விரும்பா நான் விரும்பும்
தெத்துப் பல்லையும் தினமும் தென்படச் செய்யவும்
செவ்வந்தியின் மறுபெயரே
செஞ்சுடராக என்னை எரிக்காமல் அதற்கு வழி செய்யம்மா!
பூவே எப்போது உன் இதயத்தை பூட்டாமல் இருக்கிறாயோ?
தேனீக்கு அன்று அன்பெனும் தேன் கொடும்மா!

தேனீ.வரணி



# யானையும் மனிதரும்

பெரிய துதிக்கை யானைக்கு!
சிறிய கண்கள் யானைக்கு!!
வலிய கால்கள் யானைக்கு!
சுளகுச் செவிகள் யானைக்கு!!

பெரிய உருவம் யானைக்கு!
கரிய வடிவம் யானைக்கு!!
வலிமை அதிகம் யானைக்கு!
திறமை அதிகம் யானைக்கு!!

பாரம் எதனையும் சுமக்குமாம்!
பாதை எதையும்தான் கடக்குமாம்!!
ஊர்வலங்களிலே நடக்குமாம்!
போர்க் களங்களிலே மோதுமாம்!!

நன்மைகள் நூறு செய்தவரே
துன்பம் ஒன்றைச் செய்துவிடின்
நன்மை எல்லாம் மறக்குமாம்!
துன்பம் செய்தோரைத் தொலைக்குமாம்!!

நன்மை நூறை எண்ணாது
துன்பம் ஒன்று செய்தாரைத்
துவம்சம் செய்யும் யானை போல்
துட்டர் எம்மிலும் இருக்கின்றனர்.

முருகு

# இரு துருவங்கள்

கா.கிரிதரன்
கந்தசாமிநகர்

உண்பதற்கு உணவின்றி
நோயுற்றார் பலர்
மிதமிஞ்சி உண்டு விட்டு
உயிரை விட்டார் சிலர்

மாற்றியுடுக்க ஆடையின்றி
ஏங்கி நிற்பார் பலர்
மாற்றி மாற்றி உடுத்துடுத்து
மூச்சு வாங்கும் சிலர்

வசதியின்றி கல்வி வாய்ப்பை
இழந்தவர்கள் பலர்
வசதியாலே தமது வாழ்வைத்
தொலைத்தவரும் உளர்

உயிரைக் காக்கும் குருதியின்றி
உயிர் விட்டார் பலர்
குருதி குடிக்க அலைகின்ற
மனித விலங்காய் சிலர்

முதியோரைத்தம் இதயத்திலே
ஏற்றி வைப்பார் பலர்
ஒதுக்கி வைக்க புதிய வழிகள்
தேடித் திரிவார் சிலர்

பூமிக்கு இரு துருவங்கள்
வேண்டும் அது நியதியே
சமூகம் இரு துருவங்களாய்
நிலைப்பதென்றும் கெடுதியே!

# ஒன்றுபட்டால்...


ஒன்று படுங்கள் நன்று நடந்திடும்
என்று மில்லாத மாற்றம் பிறந்திடும்
வென்றுவிட்டால் எல்லாம் முடிந்ததல்ல
வேற்றுமைகள் காணாத ஒற்றுமை வேண்டும்
கன்றும் தாயும் ஒன்றியே நின்றால்
குன்றிடும் பலமும் வென்றிடும் எதிரியையும்
ஒன்று பட்டாலே உலகே நோக்கிடும்
உலகத் தமிழரின் குரல்கள் ஒலித்திடும்!

கல்லும் முள்ளும் பாதையில் உண்டு
கடந்து சென்றாலே வாழ்க்கை உண்டு
சொல்லும் செயலும் ஒன்றாய் இருந்தால்
சூழ்ச்சிகள் எமைத் தொட்டிட இயலாது
நல்லவர் போன்று நடிப்பாரை நம்பிடார்
நல்லது செய்தாலே மக்களும் நம்புவர்
வெல்வது மட்டும் வெற்றிகள் அல்லவே
தோற்பது கூடவே வெற்றிகள் ஆகிடும்!

குறைகள் இல்லாத மனிதர்கள் இல்லை
குறை பிடிப்பவர்கள் மனிதரே அல்லர்
கறைகள் எம்மைக் களங்கப்படுத்தாமல்
கடமையை உணர்ந்து செய்வதே சிறப்பு
முறை தவறிய முன்னேற்றம் அறமல்ல
முறையுடன் செய்யும் மாற்றமும் தவறல்ல
இறை நீதியில் எல்லோரும் சமமே
மனுநீதி பொய்த்தால் மகிழ்நாள் சிலகாலமே!



அபிராஜன் அன்ரனி பீற்றர்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்



ஆர்.பி.

# தோன்றி மறையும் மர்மத் தூண்கள்!

ஆள்கள் நடமாட்டம் இல்லாத வரண்ட பூமி. மணல் மற்றும் மணல் மேடுகளைக் கொண்ட வெறும் பாலைவனக் காடு. அங்கு 10 - 12 அடி உயரத்தில் உலோகத் தூண் திடீரென ஓங்கி உயர்ந்து கம்பீரமாகத் தோன்றினால் எப்படி இருக்கும்? அதிர்ச்சி கலந்த ஆச்சர்யத்தில் உறைந்து போவீர்கள்தானே? அவ்வாறான சம்பவங்கள் மேற்கைத்தேய நாடுகளில் தற்போது அடிக்கடி நிகழ்ந்து ஆச்சரியத்தை அள்ளிக்கொடுக்கின் றன. கடந்த நவம்பர் மாத மத்தியில் அமெரிக்காவின் யூடா மாகாணத்தில் உள்ள பாலைவனத்தில் அரிதான பெரிய கொம்பு ஆடுகளை எண்ணுவதற்காக ஹெலிகாப்டரில் பறந்து கொண்டிருந்த வன விலங்குத்துறை அதிகாரிகள் அப்படி ஒரு அதிர்ச்சிகரமான அனுபவத்துக்கு ஆளானார்கள். பாறைகளுக்கு நடுவே காணப்பட்ட அந்த இமாலய உலோகப் பட்டையை யாரோ நட்டு வைத்திருந்தார்கள். இதற்கு முன்னால் தன் விமானப் பயண வாழ்கையில் இப்படி ஒரு அதிசயத்தைப் பார்த்ததில்லை என்கிறார் அந்த விமானி.

இந்த உலோகத் தூணை யார் நட்டு வைத்தார்கள் என்பதற்குக் கூட அடையாளங்கள் இல்லை. இந்த உலோகத் தூணை, ஏதாவது புது ரக கலைஞர்கள் நட்டு வைத்திருக்கலாம் அல்லது 2001: ஸ்பேஸ் ஒடிசி என்கிற படத்தின் ரசிகன் நட்டு வைத்திருக்கலாம் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.



(ஆர்தர் சி.கிளார்க்கின் கதையில் உருவான 2001: ஸ்பேஸ் ஒடிசியில் இப்படியான தூண்களை ஏலியன்கள் அமைப்பதைக் காட்டியிருந்தார்கள்) யூடா பொது மக்கள் பாதுகாப்புத் துறை, இந்த உலோகத் தூண் குறித்த விவரங்களைப் படத்துடன் வெளியிட்டது. இந்தத் தூண் இருக்கும் இடத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால் அடுத்த 48 மணி நேரத்துக்குள், முதலாவதாக ஒரு நபர் அங்கு காலடி எடுத்துவைத்து விட்டார். அவர் ஒரு இராணுவச் சிப்பாய். அடுத்த சில நாள்களில் மேலும் பலர் அங்கு படையெடுத்தனர். அந்த இடமே சுற்றுலாவிகளால் நிறையத் தொடங்கியது. மக்கள் மத்தியில் பரபரப்பை உண்டாக்கிக் கொண்டிருந்த இந்த உலோகத் தூண் ஒரு நாள் திடீரென காணாமல் போய்விட்டது. சிறிது நாட்கள் வரை அந்தத் தூண் மாயமான மர்மம் விலகவேயில்லை.

சில வாரங்களுக்கு முன்பு தான், 'தி மோஸ்ட் பேமஸ் ஆர்டிஸ்ட்' என்கிற குழு யூடா மற்றும் கலிபோர்னியாவில் அந்த உலோகத் தூணை நட்டுவைத்தது தாங்கள்தான் என பொறுப்பேற்றது.

சரி எல்லாம் சுபமாக முடிந்தது என்று பார்த்தால், மீண்டும் பிரிட்டனில் ஐல் ஆப் விட் என்ற பகுதியில், இதே போன்ற ஒரு மர்மத் தூண் தோன்றியது. பிரிட்டனின் தெற்குக் கடற்கரை ஓரம் தோன்றிய அந்தத் தூண், இந்த முறை உலோகம் அல்ல, கண்ணாடி.

பிரிட்டனில் வருவதற்கு முன்பே, அமெரிக்காவில் கலிபோர்னியாவிலும், உரோமானியாவிலும் இது போன்ற தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டன என செய்திகள் வெளியாயின. ஒரு கட்டத்துக்குப் பிறகு, டாம் என்பவர், இந்த கண்ணாடித் தூணை வடிவமைத்தது தான்தான் என ஒப்புக்கொண்டார். இவர் கண்ணாடித் தூணை நிறுவியது, நஷனல் ட்ரஸ்டுக்குச் சொந்தமான இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு நாடுகள் மட்டுமின்றி, ரோமானியா, போலந்து, பெல்ஜியம், ஆஸ்திரேலியா என பல நாடுகளின் பல்வேறு பகுதிகளில் இது போன்ற 12 தூண்கள் முளைத்துள்ளனவாம்.

உலகின் பல பகுதிகளில் திடீரென முளைக்கும் தூண்களும் உண்மையில் மனித முயற்சிகள் தானா , அல்லது ஏலியன்கள் கொண்டு வந்து நடும் தூண்களைத்தான் மனிதர்கள் தாம் வடிவமைத்தோம் என உரிமை கொண்டாடுகிறார்களா என்பது இன்னமும் புரியாத புதிராக நீடிக்கிறது.

# நீதி கிட்டுமா அமீருக்கு?



லயனல்

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான 28 வயதேயான மொகமட் அமீர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். 'பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் மன ரீதியாக மிகவும் வதைக்கப்படுகின்றேன்' என்று தனது ஓய்வு முடிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

19 வயதில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் அறிமுகமானார் அமீர். அறிமுக காலங்களிலேயே மிகச் சிறந்த ஆட்டத்தை அவர் வெளிப்படுத்தினார். இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் எதிர்காலம் என்று அவர் வர்ணிக்கப்பட்டார். பின்னர் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான தொடரில், அமீர் ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார். இதையடுத்து அவருக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு தடையில் இருந்து மீண்டு, மீண்டும் களமிறங்கினார் அமீர். எனினும் அவருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் இடையில் நல்ல உறவு இருக்கவில்லை. இந்த நிலையில் தற்போது சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். 'பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினர் என்னை வார்த்தைகளால் துன்புறுத்துகின்றனர். அவர்களின் வதைகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல்தான் நான் ஓய்வை அறிவிக்கின்றேன்' என்று அமீர் தெரிவித்துள்ளார்.

**' சோதனை தான் வாழ்க்கை என்றால்
தாங்காது பூமி'**

# சாதிக்குமா இலங்கை?

லங்கா பிறீமியர் லீக், இலங்கை அணியின் பெறுபேற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படும் நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளது இலங்கை அணி. கருணாரத்னவின் தலைமையில் இந்த அணி விளையாடவுள்ளது.

தன்னிடம் இருக்கும் வீரர்களை வைத்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பலமான அணியை இலங்கை கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு அறிவித்துள்ளது. ஆனால் தென்னாபிரிக்கா இன்னும் முழுமையான அணியைக் கண்டு கொள்ளவில்லை.

கொரோனாப் பெருந்தொற்று தென்னாபிரிக்க அணிக்கு பெரும் பின்னடைவைக் கொடுத்துள்ளது. அந்த அணியின் சில வீரர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் காயம் காரணமாக சில வீரர்கள் உபாதைக்கும் உட்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் இடியப்பச் சிக்கல் என்ற நிலையில் தென்னாபிரிக்கா தற்போதுள்ளது. அந்த அணிக்கு தற்போதுள்ள ஒரேயொரு ஆறுதலான விடயம் சொந்த மண்ணில் தொடர் நடைபெறுவதுதான்.

**'செத்த பாம்பு கிடைத்தால்
மூத்தனுக்கு
கொண்டாட்டமாம்'**



# கோலியின் இழப்பை ஈடுசெய்வாரா ரகானே?

இந்திய அணியின் தலைவரான விராட் கோலி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் நாடு திரும்பும் நிலையில் அவரின் வெற்றிடத்தை ரகானே நிரப்புவாரா? இந்திய அணியில் என்னென்ன மாற்றங்கள் நிகழவுள்ளன என்பது தான் தற்போதுள்ள எதிர்பார்ப்பு.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ரகானேயின் தலைமைத்துவம் சிறப்பாக இருக்க வாய்ப்பில்லை என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர்கள் பலரும் வார்த்தைகளால் சீண்டியுள்ளனர். இந்திய முன்னாள் வீரர்கள் பலர் ரகானேக்கு தலைமைத்துவம் பெரியளவில் சிரமமாக இருக்காது என்று தெரிவித்துப் பதிலடி கொடுத்துள்ளனர். ஆனால் கோலியின் ஆக்ரோஷம், எதிரணியினரை அவர்களுக்கே உரிய பாணியில் அணுகும் விதம் இவற்றையெல்லாம் ரகானேயால் ஈடுசெய்ய முடியாது.

தலைமைத்துவம் ஒரு பக்கத்தில் இருக்கட்டும். தற்போது இருக்கும் பெரும் கேள்வி என்னவென்றால், கோலி சென்றால் அவருக்குப் பதிலாக களமிறங்கப்போகும் வீரர் யார் என்பதுதான். ரோகித் ஆஸ்திரேலியாவுக்கு சென்றுவிட்ட போதிலும் தனிமைப் படுத்தல் விதிகளால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் விளையாட வாய்ப்பில்லை. கே.எல்.ராகுல் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்குவார் என்று கருதப்படுகின்றது. அதேநேரம் முதல் ஆட்டத்தில் பிருத்வி தடுமாறிய காரணத்தால் ஷுப்மன் கில்லை களமிறக்க ரகானே முன்வரலாம் .

**'கோலியின் இடம் காலியே..!'**